www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර්

ஜன.17–23,1999

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 292

## பெப்ரவரி 04 சுதந்திர தின நெருக்கடி



## அகதிகளுக்காக முறையிட்ட வை.கோ.

## பரிசுப் போட்டி முடிவுகள்



## ரோஜாவைக் காதலிக்கிறார்



## இரட்டைக் குழந்தைகள் பிரித்தெடுக்க போராட்டம்

சூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

# முரசம்

## பிடிவாதத்தால் விடியாது

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

தை பிறந்தால்
வழி பிறக்கும்!

எதற்கு?
போர் மேலும் நீள
புதிய வழி பிறக்கும்!

நடப்புகள் அதனையே
நமக்குணர்த்துகின்றன!

பிரபாகரனை
ஒழித்துக் கட்டினால்
பிரச்சனைதீரும்
என்று ஆளும் தலைமை
கூறியிருக்கிறது!

"ஒரு பிரபாகரனை
ஒழித்தால்
ஓராயிரம் பிரபாகரன்கள்
தோன்றுவார்கள்!"
என்று முன்னர்
கூறியவர் ஜனாதிபதி!

அப்படிக் கூறியும்
அதிக காலம் இல்லை!
சில மாதங்களுக்கு
முன்னர்தான் கூறியிருந்தார்!

தாமே புரிந்துகொண்ட
உண்மை நிலவரங்களை
பின்னர் மறந்துவிடுவதே
ஆட்சிக்கு வந்த
அனைவரதும் வரலாறு!

அந்த வரலாற்றுக்கு
இன்றைய ஆட்சியாளரும்
விதிவிலக்கல்ல என்றே
நிகழ்வுகள் நிரூபிக்கின்றன!

வெறும் கையால்
முழம் போட முடியாது!
வெறும் வாயால்
பந்தல் போட முடியாது!

அரசியல் தீர்வுபற்றி
அடிக்கடி பேசுவதால்
தீர்வு பிறக்காது!

இன்றுள்ள பொதி
அரை குறையானது
என்பது தெளிவு!

இதனை
செல்லாக் காசு
என்றுள்ளார் அமைச்சர்
அஷ்ரப்!

அதற்கு முன்பே
இது செத்த பொதி
என்றுவிட்டார் பிரபா!

கூட்டணி தவிர்ந்த
தமிழ்க் கட்சிகள்
பொதிக்கு கொடுத்த
முக்கிய யோசனைகள்
நிராகரிக்கப்பட்டன!

இப் பொதியை
பற்றியே இனியும்
பேசுவதில் பயனில்லை!

மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தம் முன்பாக
அரசியல் பேச்சை
முன்னெடுப்பதே
காத்திரமாக இருக்கும்!

தமிழ் பேசும் தரப்பால்
ஏற்கமுடியாத பொதியை
தோளில் சுமந்துகொண்டு
கூத்தாடுவது
போர் அவலங்களை
மறைக்கப் போவதில்லை!

"தாம் பிடித்த
முயலுக்கு மூன்றுகால்"
என்பது போல,
பேரினவாதிகளை
திருப்திப்படுத்தும் விதமான
பிடிவாதப் போக்கே
ஆட்சியாளரிடம் தென்படுகிறது?!

பேரினவாதிகளை மட்டுமன்றி
படைத்தரப்பையும்
திருப்தி செய்யும்
கட்டாயமும்
புதிதாகச் சேர்ந்திருக்கிறது!

இந்த நிர்ப்பந்தங்கள்
தளருவதற்கு வாய்ப்பில்லை!

பேரினவாத முகாமை
பகைத்துக் கொள்ள
எந்த ஆட்சியாளரும்
துணிந்ததில்லை!

அதற்கு விதிவிலக்காக
இருக்கக்கூடியவர்
என்று கருதப்பட்ட
சந்திரிக்கா அம்மையாரும்
பேரினவாதம்
தன்னை முற்றுகையிட
தானாகவே சந்தர்ப்பம்
வழங்கிவிட்டார்!

படையினரின்
மனித உரிமைமீறல்களை
கண்டித்து புகழ் பெற்றவர்,
வடக்கு-கிழக்கில்
படையினரின்
மனித உரிமை மீறல்களை
அலட்சியம் செய்திருக்கிறார்!

சமீபத்தில்
வடமேல்மாகாணசபை
பிரசாரக் கூட்டத்தில்
ஐ.தே.க. ஆட்சியில்
காணாமல் போனோரைப்பற்றி
ஜனாதிபதி கவலைப்பட்டுள்ளார்!

அந்த உரையை
பத்திரிகைகளில் கண்ணுற்ற
தமிழ் பேசும் மக்களிடம்
பெருமூச்சே எழுந்தது!

மாற்றான்தாய்
மனப்போக்குடன்
தமது பிரச்சனைகள்
ஒவ்வொன்றும்
அணுகப்படுவதாகவே
தமிழ் பேசும் மக்கள்
அதிருப்தி கொண்டுள்ளனர்!

செம்மணி விவகாரத்தில்
மௌனம் சாதிக்கும் அரசு
தெற்கில் காணாமல்போன
தமது இனத்து
கண்மணிகளுக்காக மட்டும்
கண்ணீர் வடிக்கிறது
என்றுதானே நினைப்பர்!

அரசியல் தீர்வுக்கான
அணுகுமுறைகளிலும்,
தமிழ் பேசும் மக்களது
அன்றாட அவலங்கள்,
மனித உரிமைகள்
விடயங்களிலும்
அலட்சியமும், பிடிவாதமுமே
ஆளும் தரப்பின் அணுகுமுறையில்
மேலோங்கிவருகிறது!

இந்த பிடிவாதம்
விடிவைத் தராது.
நாட்டை மீளமுடியாத
பக்கவாதத்தில்
வீழ்த்தி முடமாக்கிவிடும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## ஆலய வழிபாட்டின் முக்கியத்துவம்



'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என ஔவையார் கூறியுள்ளார். ஆம், ஒவ்வொரு இந்து சமயத்தவரும் தமது வாழ்வில் ஆலய வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஆலய வழிபாடு ஆன்மீக வழிபாட்டிற்கு எம்மை இட்டுச் செல்லும் என்பதை எவராலும் மறுக்க முடியாது. இருந்தும் அனேகமானவர்கள் ஆலய வழிபாட்டை விரும்புவதில்லை. அதாவது 'இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்' என்றால் ஏன் ஆலயத்திற்குப் போக வேண்டும் என முரண்பாடாக ஊகம் செய்கிறார்கள். இவர்களது இக் கருத்திற்கு சான்றோர்கள் பல உதாரணங்களை முன்வைக்கிறார்கள்.

நிலத்தின் மேற்பரப்பில் கடலில் உள்ள நீர் எமது தாகத்தைப் போக்க உதவுவதில்லை. கிணற்றில் உள்ள நீரே எமது தாகத்தைத் தீர்க்கிறது. இதேபோன்று இறைவனை எங்கும் வணங்கலாம். 'இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான்' என்ற கொள்கை காணப்பட்டாலும் ஆலயத்தின் மூலமே உண்மைப் பக்தியை, உண்மை வழிபாட்டினைப் பெறமுடியும் எனக் கூறுகின்றனர்.

இவை மட்டுமன்றி ஆலயங்களில் இடம்பெறும் நற்சிந்தனைகள், கூட்டுப் பிரார்த்தனைகள் போன்றவற்றில் நாம் நிச்சயம் கலந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் எமது மனதிற்கு அமைதி கிடைக்கும். இதனை பின்வரும் கூற்று நிரூபிக்கிறது: 'மனதுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி' ஆலயத்தில் இடம்பெறும் புறவழிபாடு, அகவழிபாடு மக்கள் மத்தியில் சமய நம்பிக்கை- பக்தியுணர்வை ஏற்படுத்தும். ஆலயத்தில் இடம்பெறும் நித்திய நைமித்திய கிரியைகள் யாவும் உடல்-உள ஆன்மீகத் தூய்மையும் வளர்ச்சியும் பெற உதவுகின்றன. உமாபதி சிவாச்சாரியார் ஆலயவழிபாட்டின் மகிமையை பின்வருமாறு கூறுகிறார். 'கோபுரதரிசனம் கோடி புண்ணியம்.' ஆகவே நாம் எமது வாழ்நாளில் ஆலயவழிபாட்டினை முக்கிய கடமையாகக் கொண்டிருப்பது நன்று.

தொகுப்பு: சி. நிதாஜினி, பெரியகல்லாறு-02.

## ஏழையின் அச்சம்

ஒரு முறை அல்லாஹ்வின் தூதர் பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் அமர்ந்தவண்ணம் இருந்தார்கள். அந்நேரம் வறுமையில் வாடிய ஓர் ஏழை அங்கு வந்தார். அவரது உடலைக்கூட மறைப்பதற்கு தேவையான ஆடைகூட அவரிடம் இருக்கவில்லை. நபிகளாருக்குப் பக்கத்தில் செல்வந்தர் ஒருவரும் இருந்தார். ஏழையின் அரை நிர்வாணக் கோலத்தைக் கண்ட அவர் தனது ஆடையைக் கூட்டி இறுக்கிப்பிடித்துக் கொண்டார்.

இவரது இச்செய்கையை பெருமானார் அவதானித்ததை அவர் காணவில்லை. உடனே பெருமானார் அவர்கள் "அவரது வறுமை உங்களில் பட்டுவிடும், அல்லது உங்களது செல்வ நிலை அம்மனிதரிடம் தாவிவிடும் என்றா அஞ்சினீர்கள்?" என்று வினவினார்கள். அதற்கு அச் செல்வந்தர், "அல்லாஹ்வின் அருமைத் தூதரே! என்னை ஒரு சைத்தான் குழப்புகிறான்" நல்ல விடயத்தைக் கெட்டதாகவும் கெட்டவற்றை நல்லவையாகவும் எனக்கு காட்டுகின்றான். என்று கூறினார்கள். தொடர்ந்து கூறிய அச் செல்வந்தர் "நான் எனது தவறை ஏற்றுக் கொண்டு அதற்கு குற்றப் பரிகாரமாக எனது செல்வத்தில் பாதியை அவருக்கு கொடுத்து விடுகிறேன்" என்றார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்வறிய ஏழையைப் பார்த்து "செல்வத்தின் பாதியை, ஏற்றுக் கொள்கிறீர்களா?" என வினயமாக வினவினார்கள். அதற்கு அந்த ஏழை, "வேண்டாம்" என்று மறுத்துவிட்டார். இந்தப் பதிலைக் கேட்ட செல்வந்தர், ஏற்க மறுத்ததற்கான காரணத்தை வினவ,

"உங்களிடம் வந்த அதே சைத்தான் என்னிடமும் வரலாம் என்று நினைத்து அஞ்சுகிறேன்," என்று பதிலளித்தார் அந்த ஏழை.

தொகுப்பு: பௌசுல் கரீமா ஜவாத், புதியபாலமுனை, ஆரையம்பதி.

# கவிதைப் போட்டி இல. 289

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**



### விண்ணின் மதி மண்ணில்

விண்ணிலே தவழும் மதி
மண்ணில் வரக் கண்டேனே!
வண்ணமதில் நானே மனம்
பறி கொடுத்தேனே!

எம்.ஐ.எம். பஸ்மி-மெயின் வீதி, கற்பிட்டி.

### பொருளாதாரத் தடை

வடகிழக்கில் கேட்கும்
மரண ஓலங்கள்
அம்மணியின்
செவிகளில்
தேனாய்ப் பாய்கிறதோ?

த. நகுலேஸ்வரன்- கல்லடி, மட்டக்களப்பு.

### மறந்தனளோ?

சுதந்திரச் சிறகொடிந்த
ஆரணங்கு சிரிக்கின்றாள்;
கிருஷாந்தி, ரீட்டா
நினைவில் இல்லைப்போலும்?

ம. திருவரசுராசா- வவுனியா.

### முகப்பில்

தினமுரசின் முகப்பினிலே
முகம் மலரும் அழகிகளில்
நீயும் ஒரு அழகியென
வெகு விரைவில் இடம் பிடிக்க
முயலுகிறாய் என்று உந்தன்
புன்னகையே சொல்கிறது!

பா. பிருந்தாபன்-மட்டக்களப்பு.

### ஆச்சரியம்

எப்போது
பூமிக்கு
வந்தது
இந்த
நிலாச் சூரியன்...?

திருமதி புவனேஸ்வரி- பசறை.

### மகிழ்ச்சி

அன்று ஒருநாள்
ஆனந்தத் திருநாள்
என்று நினைத்த
ஏந்திழை இவள் யார்...?

செ. ஞானராசா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.

### பரிசுக்குரிய கவிதை

## திசை தேடுகிறாயா?

வடக்கில் கிருஷாந்தி!
தெற்கில் ஒரு ரீட்டா!
மேற்கில் மனம்பேரி!!
கிழக்கில் பரமேஸ்வரி!
இதற்குள் நீ வந்து
திசையேது தேடுகிறாய்?

நிஜந்திக்கா கனகசிங்கம்- மட்டக்களப்பு.

### எப்போது ஒளி எமக்கு?

முத்துப்பல் சிரிப்பழகி!
முழு நிலவுப் பேரழகி!
புத்தாண்டில் இருந்தெனினும்
பூந்தமிழர் உந்தனைப்போல்
நித்தமுமே சிரித்திருக்க
நினைக்கிறார்! முடிந்திடுமா?
எப்போது வடகிழக்கார்
இருள் நீங்கி ஒளி காண்பார்?

கு. திருமால்- அமிர்தகழி, மட்டக்களப்பு.

### தென்பகுதிப் பைங்கிளியா?

வடகிழக்கு வனிதையரின்
வாய் நிறைந்த புன்னகை போய்
வருடமோ பதினாறு- நீ
தென்பகுதிப் பைங்கிளியா?
தேன் சிந்திச் சிரிக்கின்றாய்!

சாமிஷ் யோகேந்திரன்-ஆரையம்பதி-02.

### செய்திச் சிரிப்பு

செய்தியறிக்கையை
கேட்கையிலே
சிரிப்பு வருது!
சிரிப்பு வருது!

ஆர். பாலகிருஷ்ணன்- மாத்தளை.

# கவிதைப் போட்டி இல.292



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 23.01.1999

**முகவரி:** கவிதைப் போட்டி. இல.292
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## சங்கரி நாகாக்க

அன்புள்ள முரசுக்கு,

மதிமுகராசாவின் மரணச் சடங்கில் புலிகளை கண்டித்தார் ஆனந்தசங்கரி. பின்னர் இங்குள்ள பத்திரிகையில் புலிகளை தாஜா பண்ணி பேட்டி கொடுக்கிறார். இவர் மரணச் சடங்கில் ஆற்றிய உரையை புலிகள் அறிவார்கள்தானே? பின்னர் பத்திரிகைகளில் கோபப்பட்டு என்ன பிரயோசனம்? முதலில் நா காக்கப் பழக வேண்டும். அதைவிடுத்து துள்ளித்துள்ளி பேசுவது. பின்னர் கெஞ்சிக் கூத்தாடுவது என்று ஏன் இந்த குத்துக்கரணம்? சிவபாலன் மரணச்சடங்கிலும் நாவீச்சு செய்துவிட்டு, பின்னர் பத்திரிகைகள் தவறாக செய்தி போட்டதாக இவர் கூறியதை நாம் மறக்கவில்லை.

கோ. துரைராசா, யாழ்ப்பாணம்.

உன்னத முரசே! நீ கடந்து வரும் பாதையில் தடைக்கற்கள் வருவது சகஜமே! அவற்றைச் சகித்துசமாளித்து கடந்து செல்! துணிந்து சொல்! உண்மை உறைப்பதும் கசப்பதும் சகஜம்தான். வைரம் பட்டை தீட்டத்தீட்டத்தான் அதன் ஒளிமிளிர்வது போல, சொல்லடிகள் உன்னை மென்மேலும் மெருகேற்றுவதில் எமக்கும் பெருமையே! இகழ்வதும் தூற்றுவதும் கூட ஒரு வகையில் விமர்சனமே! புதுவருட வாழ்த்துக்கள்!

எஸ். பத்மா உமாஜினி, கொழும்பு-10.



## அனுதாபம் இல்லையே

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் மாவட்ட அமைப்பாளா மதி. அவரது மரணத்திற்கு சக அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் ஆளும் கட்சியோ, எதிர்க்கட்சியோ சிறு வருத்தம்கூடத் தெரிவிக்கவில்லை. தமக்குத் தேவையானால் இவர்களை பன்படுத்துவரே தவிர, இந்த மரணங்களையிட்டு அக்கட்சிகள் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. ஆனால் தமிழ்க் கட்சிகளோ, அக் கட்சிகள் கட்டளையிட்டால் சிரமேற்கொண்டு செய்து முடிக்கின்றன.

பா. நேசராசா, திருமலை.

## ஒரே ஒரு கேள்வி

திருவாளர் வி. ஆனந்தசங்கரியின் பேட்டியை பத்திரிகைகளில் படித்தேன். அன்னார் உச்சிமுதல் உள்ளங்கால்வரை குழம்பியுள்ளார் என்பது தெரிகிறது.

அரசுதான் யாழ் தேர்தலில் நிற்க நிர்ப்பந்தித்தது என்று கூறியுள்ளார். அப்படியானால் தமது நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்ட பின்னரும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து மறுபடி போட்டியிட்டது ஏன்?

ஆ. நாதன், யாழ்ப்பாணம்.

## பொறிவைத்து புகழலாமா?

"நாம் அரசை எதிர்த்து வாக்களிக்கிறோம்!" என்று கூட்டணியின் சமீபகால தலைவர்களில் ஒருவரான ஆனந்தசங்கரி கூறியுள்ளார். எதிர்த்து வாக்களிப்பதாகக் கூறிவிட்டு தொண்டாவின் அமைச்சு மீதான வாக்கெடுப்பில் அரசுக்குச் சார்பாக வாக்களித்தது ஏனாம்? ஏனைய தமிழ்க் கட்சிகளும் உத்தமமானவை அல்லத்தான். ஆனால் அவை பொதியை கூட்டணிபோல் ஆதரிக்கவில்லை. பொதியை ஆதரிப்பது தான் அரசுக்கு இன்று பெரும் ஒத்துழைப்பு. பொறியாகப் பயன்பட்டு வரும் பொதியை ஆதரித்தபடி அரசை எதிர்த்து வாக்களிப்பதில் அர்த்தம் கிடையாது.

பொதியை புலிகள் நிராகரித்து விட்டனர். 'செத்த பொதி' என்றுள்ளனர். அந்தப் பொதி உலகை ஏமாற்றும் சதி என்கின்றனர். அந்தப் பொதியை ஆதரிக்கும் கூட்டணியின் உபதலைவர் ஆனந்தசங்கரி, புலிகள் தம்மை பாதுகாக்க வேண்டும் என்று பகிரங்க வேண்டுகோள் விடுத்திருப்பது விசித்திரமே.

உங்களுக்கு எதிரான பொதிக்கு முண்டுகொடுக்க எங்களுக்கு உதவுங்கள் என்று கேட்டுள்ளாரோ?

வீ. வன்னியகுலம், மட்டக்களப்பு.

## கண்டித்தனர்

ஈராக் மேலான வல்லூறுகளது தாக்குதலில் தமிழ்க் கட்சிகளின் தூக்கம் பற்றிய இராஜதந்திரியின் கருத்து சரியே. எனினும் புளொட் உபதலைவர் மாணிக்கதாசன் கண்டனம் தெரிவித்திருந்தார். அது பாராட்டத்தக்கதே.

எஸ். யோகன், வவுனியா.

ப்ரியமுடன் முரசுக்கு!
தொக்கி நிற்கும்
தொண்டாவின்
அமைச்சர் பதவியை
தொடர் வரியில்
தொகுத்தளித்த
முரசுக்கும்
நகைச்சுவை நாயகர்
காதில பூ கந்தசாமியாருக்கும்
பாராட்டுக்கள்!
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

றுவைஸ் ஏ. மஜீத், வவுனியா.

## கையளவு உலகம்

ஈராக்கை அமெரிக்கா தாக்கியதால் உலக அரங்கில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை இராஜதந்திரி நன்கு எடுத்துக் காட்டியிருந்தார். கையளவு உலகம் இது. அதனால் ஈராக் பிரச்சனைதானே என்று எவரும் ஒதுங்கியிருக்க இயலாது. ஈராக் பிரச்சனையில் அமெரிக்காவின் 'சண்டித்தனம்' அதற்கு எதிர்முகாமை உருவாக்கி வருவதில் ஐயமில்லை. அதனை இங்குள்ள 'தமிழ் பேசும் தரப்பினர் பயன்படுத்த வேண்டும்' என்று தக்க தருணத்தில் சுட்டிக்காட்டியுள்ளார் இராஜதந்திரி.

எம். விக்னேஸ்வரன், வவுனியா.

'இவ்வுலகினில் நல்ல ஜோடியாக நீடித்திருப்போம் என்றே கனவு கண்டேன்'. ஆம் டயானாவின் கனவு விவாகரத்து என்ற கொடியோனின் கையில் சிக்கியதை எண்ணி ஒரு கணம் திகைத்தே போனேன். ஏற்கனவே என் செவிகளை உரசிச் சென்ற செய்தியாக இருந்தாலும், முரசே! உனது இதழில் இருந்து அதனைப் படிக்கும்போது அது ஒரு தனி ரகம்தான்.

எஸ்.பி. போல்சுரேன், செட்டியார் தெரு.

முரசே!

கனடாவிலிருந்து உன் அபிமான வாசகன் எழுதுகிறேன். நீ இல்லை, இல்லை- நீங்கள் எப்போது என் கரம் தவழ்வீர்கள் என்று காத்திருக்கும் (அதாவது எப்போ சனிக்கிழமை வரும்) வாசகர்களில் நானும் ஒருவன். முரசு எமக்குத் தரும் அத்தனை செய்திகளும் அருமையிலும் அருமை. குறிப்பாக 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' வெகு கச்சிதம். மென்மேலும் உங்கள் பக்கம் சாரா விமர்சனங்கள் தொடர எனது வாழ்த்துக்கள்.

றொஹான் ஜோசப், கனடா.

சர்வதேச பயங்கரவாதி பில் கிளின்டனின் புகைப்படத்தை தலைகீழாக போட்ட இனிய முரசுக்கு எங்களது உள்ளம் கனிந்த வாழ்த்துக்கள்!

ஏ.சீ.எம்.அன்ஸார், தெலியாகொன்னை, குளத்துரோட்.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல்:- 074-513266



படிப்பகம்

www.padippakam.com

# சுதந்திர தினத்தில் தாக்குதல் அபாயம்?

## 'புயலுக்கு முந்திய அமைதி' என்று சந்தேகம்!

## வான் புலிகள் அணியில் பெண் புலிகள்

கடந்த ஆண்டு சுதந்திர தினத்தில் இரு பாரிய தாக்குதல்களை புலிகள் மேற்கொண்டிருந்தனர்.

தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல், கிளிநொச்சி நகரின் மையத்தில் அமைந்திருந்த படை முகாம்கள் மீதான பாரிய தாக்குதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆண்டும் சுதந்திர தினத்தை முன்னிட்டு புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

வடமேல் மாகாணசபைத் தேர்தல் ஜனவரி 25ம் திகதி நடைபெற உள்ளது. பெப்ரவரி 04ம் திகதி சுதந்திர தினம் வருகிறது.

இந்த இரு தினங்களுமே அருகருகே வருவதால், இருதினங்களுக்கும் பொதுவாக புலிகள் ஒரு தாக்குதலை நடத்தக்கூடும் என்று பீதிகலந்த எதிர்பார்ப்பும் காணப்படுகிறது.

இதனைக் கருத்திற்கொண்டு கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது வடக்கு-கிழக்கு போர்முனையிலும் அமைதி நிலவுகிறது. இது 'புயலுக்கு முந்திய அமைதி'யாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

புலிகளது வானூர்திகளும் கடந்த சில வாரங்களாக வானில் பறப்பதை நிறுத்தியுள்ளன.

புலிகள் தரப்பில் அமைதி நிலவினால் அடுத்தொரு பாரிய தாக்குதலுக்கு ஆயத்தமாகின்றனர் என்பதே அர்த்தமாகும். ஆகவே விரைவில் ஒரு தாக்குதலை முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்று இராணுவ விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

### வான் பெண் புலிகள்

வான் புலிகள் அணியில் பெண் புலிகளும் இணைத்துக் கொள்ளப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டுள்ளனராம்.

வானூர்திகளைச் செலுத்தும் அளவுக்கு பெண்புலிகள் தேர்ச்சி பெற்றுள்ளதாகவும் தெரிகிறது.

புலிகளது வான் படையைப் பாராட்டி, புதுவை இரத்தினதுரை கவிதை ஒன்றையும் எழுதியுள்ளார். அக் கவிதை வன்னி 'ஈழநாதம்' பத்திரிகையிலும் பிரசுரமானது.

மாவீரர் தினத்தில் வான் புலிகள் மலர் மாரி பொழிந்ததை வியந்து பாராட்டியும், வானூர்தியின் உலாவை வாழ்த்தியும் அக் கவிதை எழுதப்பட்டுள்ளது.

### மட்டக்களப்பில் நெருக்கடி

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் அபிவிருத்திகளுக்குத் தடை செய்யப்பட்ட பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்படலாம் என்றும், இதற்கான முயற்சிகளில் படை அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாகவும் புலிகள் கூறியுள்ளனர்.

பிரதேச செயலாளர்களுடன் உத்தியோகப் பற்றற்ற முறையில் படை அதிகாரிகள் இதுபற்றி பேசியிருப்பதாகவும் புலிகள் தமது செய்தியில் தெரிவித்தனர்.

இவ்வாறு புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை தனிமைப்படுத்த அரசு முயற்சித்தால், அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மேலும் நெருக்கடிகள் ஏற்படும் வாய்ப்பே உள்ளது, என்று பிரதேச செயலாளர்கள் சிலர் முரசுக்குத் தெரிவித்தனர்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதி, அரச கட்டுப்பாடற்ற பகுதி என்று இரண்டாக பிரித்து, அரச கட்டுப்பாட்டுப் பகுதியை மட்டும் சகல வசதிகளும் உள்ள பகுதியாக ‹ ாண்பிப்பது, சலுகைகளையும், ஆசைகளையும் காட்டி மக்களை தம்பக்கம் இழுக்க அரசு மேற்கொள்ளும் தந்திரம் என்றே புலிகள் கூறுகின்றனர்.

"போராட்டத்தைப் பலவீனப்படுத்தி ஆசைகாட்டும் தூண்டில்களாக அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாலேயே அவற்றை எதிர்க்கிறோம்!" என்று தம்மை சந்தித்த- மட்டக்களப்பில் உள்ள பொது நிறுவன பிரதிநிதிகள் சிலரிடம் புலிகள் கூறியுள்ளனர்.

மட்டக்களப்பில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கவுள்ளதாக கூறிவிட்டு, பின்னர் புறக்கணிக்கப்பட்டதையும் புலிகள் சுட்டிக்காட்டினராம்.

இவ்வாறான நிலையில் புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதிகளை அபிவிருத்திக்குத் தடை செய்யப்பட்ட பகுதிகளாக பிரகடனம் செய்தால் நிலமை மேலும் மோசமாகும் என்று அந்த பிரதிநிதிகள் கவலை தெரிவித்தனர்.

---

## "தாமதமாக அனுமதி பெற்றதேன்?"

## யாழ் மக்கள் சந்தேகம் தெரிவிப்பு

யாழ் செம்மணி புதைகுழிகளைத் தோண்டுவதை வரவேற்பதாக தமிழ்க் கட்சிகள் கூறியிருப்பது யாழ் குடாநாட்டு மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

காணாமல் போனோர் சங்கப் பிரமுகர் ஒருவர் முரசிடம் கருத்துத் தெரிவிக்கையில், "கடும் மழைக்காலமாகப் பார்த்து நீதிமன்ற அனுமதி கோரப்பட்டுள்ளது. இப்போது நீதிபதியல்ல, அந்த கடவுளே வந்து அனுமதி கொடுத்தாலும் தோண்ட முடியாது.

மேலும் மூன்று நான்கு மாதங்கள் சென்ற பின்னரே அங்கு காலடி வைக்க முடியும். மழைக்காலம் ஆரம்பமாக முன்னர் தோண்டுமாறு பல மாதங்களுக்கு முன்னரே நாம் கூறியதை அரசு செவிசாய்க்கவில்லை. அப்போது யாழ் நீதிமன்றமும் இயங்கிவந்தது.

தற்போதுகூட சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புக்கள் விடாப்பிடியாக வற்புறுத்தியதாலேயே யாழ் நீதிமன்றத்தில் மனுப்போடப்பட்டுள்ளது. இனிமேல் மழை வெள்ளத்தை காரணம் காட்டி இழுத்தடிக்கப் போகிறார்கள்.

உண்மை இவ்வாறு இருக்க, செம்மணி புதைகுழியை தோண்டுவதை வரவேற்பதாக தமிழ்க் கட்சிகள் விழுந்தடித்து கூறியுள்ளன. இக் கட்சிகள் எதனையும் தூர நோக்கோடு பார்ப்பதில்லை என்பதற்கு இதுவும் ஒரு அத்தாட்சி!" என்று அந்தப் பிரமுகர் நீண்டதொரு விளக்கமளித்தார்.

### தடவியல் நிபுணர்

சர்வதேச தடவியல் நிபுணர்கள் தருவிக்கப்படுவார்களா, என்பது உறுதியாகத் தெரிவிக்கப்படவில்லை. தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள தடவியல் நிபுணர்கள் இருவரது பெயர்களே கூறப்பட்டுள்ளது. இதனை எப்படி ஏற்க முடியும்? இது பற்றி தமிழ்க் கட்சிகள் உட்பட மனித உரிமை அமைப்புக்கள் எதுவும் சந்தேகம் தெரிவிக்காமல் இருப்பது வருத்தமளிக்கிறது என்று யாழ் அரச சார்பற்ற அமைப்புக்களது இணையத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் முரசுக்குத் தெரிவித்தார்.

செம்மணியில் தடயங்கள் மறைக்கப்பட்டதாக சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டு வந்திருக்கின்றன. தடயங்கள் மறைக்கப்பட்டிருந்தால், அதற்கான அறிகுறிகள் தற்போதைய மழை வெள்ளத்தில் மறைந்து போயிருக்கும். எனவே இது தொடர்பான சந்தேகங்களை போக்கும் வழி வகைகள் பற்றியும் ஆராயப்பட வேண்டும் என்றும் யாழ் மக்கள் பலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

---

## நடவடிக்கை எடுக்க அதிகாரமில்லை!

## விளக்கம் கோர மட்டுமே முடியும்!

கொழும்பு வெள்ளவத்தையில் தமிழ்ப் பெண்கள் விடுதி ஒன்றில் நள்ளிரவு நேரத்தில் சோதனை நடத்தபட்டது. இதுபற்றி தொல்லை தவிர்ப்புக் குழு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அது தவறான செய்தியாகும். யார் மீதும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தொல்லை தவிர்ப்புக் குழுவுக்குக் கிடையாது.

அப்படி நடந்ததா என்று பொலிஸ் உயர் அதிகாரிகளிடமோ, படை உயர் அதிகாரிகளிடமோ விளக்கம் கோர முடியும். அவர்களும் விளக்கம் கொடுப்பார்கள். அதற்குமேல் சம்பந்தப்பட்ட பொலிஸார் மீதோ, இராணுவத்தினர்மீதோ நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கிடையாது.

நள்ளிரவில் பெண்கள் சோதனைக்கு உள்ளாவது இது முதற் தடவையல்ல. அரசுக்கும், பொலிஸ், இராணுவ உயர் மட்டத்திற்கும் முறையீடு செய்யப்படுவதும், அவர்கள் இனிமேல் நடக்காது என்று உறுதி கூறுவதும் வழக்கமானதாகிவிட்டது. இதுவரை அவ்வாறு அத்துமீறலில் ஈடுபட்டதாக எவர்மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

## கூட்டணி அமைப்பாளர்

கூட்டணியின் யாழ் மாவட்ட அமைப்பாளராக ஆவரங்கால் சின்னத்துரை நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

யாழ் மாவட்ட அமைப்பாளராக பொறுப்பேற்க, வேறு எவரும் முன்வரா விட்டால், அவரே பொறுப்பேற்கக்கூடும் என்று தெரிகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நீண்டகால உறுப்பினர் - ஆவரங்கால் சின்னத்துரை என்பது குறிப்பிடத்தக்கது.

---

## படை முகாமில் பள்ளிவாசல் தகர்ப்பு?

## ஒரே முகாமில் இரு ஆலயங்கள் கூடாதாம்

சமீப சில நாட்களாக கிழக்கு-அம்பாறையில் "புனித பூமி" என்ற தோரணையில் இன விரோத, இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் வெளிப்படையாகவே தலை தூக்கியுள்ளன. முஸ்லிம் மக்கள் பலர் தமது பாரம்பரிய குடி நிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் பல தமிழ்-முஸ்லிம் பிரதேச வாசிகளுக்கும் எச்சரிக்கை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கடந்த வாரம் முஸ்லிம்கள் பெரும் கண்டனப் பேரணியொன்றை நடத்தினர். இந்த விடயத்தில் ஆளும் தரப்பின் அப்பிரதேச அரசியல்வாதிகள், கண்டும் காணாததுபோல் மௌனம் சாதித்து வருகின்றனர்.

இது ஒரு புறமிருக்க, மட்டக்களப்பு-புணானை இராணுவ முகாமில், அங்கு கடமையில் ஈடுபடும் முஸ்லிம் படை வீரர்களின் மார்க்கக் கடமைகளுக்காக ஒரு பள்ளிவாசல் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு அனுஷ்டானங்கள் நடைபெற்று வந்தன.

சமீபத்தில் அப்பகுதி இராணுவ முகாம்களுக்குப் பொறுப்பை ஏற்றுள்ள புதிய சீருடைத் தலைமை அதிகாரி ஒருவர், தான் பொறுப்பேற்ற கையோடு முதல் வேலையாக புணானை இராணுவ முகாமில் இருந்த பள்ளிவாசலைத் தகர்த்தெறியுமாறு கட்டளையிட்டுள்ளார். அதன்படி கடந்த டிசெம்பர் 22ஆம் திகதி பள்ளிவாசல் சீருடையினரால் உடைக்கப்பட்டுள்ளது, என்று தெரியவருகிறது.

---

## தடை நீக்கம்!

சில மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது வசமுள்ள பகுதியிலிருந்து படையினரின் கண்காணிப்புள்ள பகுதிக்கு விறகு எடுத்துச் சென்று விற்பனை செய்வதற்குப் புலிகள் தடை விதித்திருந்தனர்.

அவ்விதம் அமுல்படுத்தப்பட்டு வந்த தடை, விறகு வெட்டிகளின் நன்மை கருதியும், விறகு பாவிக்கும் ஏழைப் பொதுமக்களின் நன்மை கருதியும் விலக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

---

## சிவகுமாரனுக்கு சிலை

## ஈ.பி.டி.பி. அடிக்கல்

யாழ்ப்பாணம் உரும்பிராயில் பொன். சிவகுமாரனின் சிலையை மறுபடி நிறுவ ஈ.பி.டி.பி. முன்வந்துள்ளது.

இச்சிலை 'ரிவிரச' நடவடிக்கையின் போது உடைக்கப்பட்டது. கடந்த நான்கு வருடங்களாக இச்சிலை மறுபடி நிர்மாணிக்கப்படாமல் இருந்தது. இது குறித்து ஒரு வருடத்தின் முன்னர் முரசும் சுட்டிக் காட்டியிருந்தது.

தற்போது இச் சிலை நிறுவுவதற்கான அடிக்கல்லை சிவதாசன் எம்.பி, நாட்டியுள்ளார். எதிர்வரும் ஜூன் மாதம் சிவகுமாரனின் நினைவு தினம் வருகிறது. அதற்கு முன்னர் சிலை கட்டி முடிக்கப்படும் என்று ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் கூறியுள்ளன.

தமிழ் பேசும் மக்களது உரிமைப் போராட்டத்தில் ஆயுதம் ஏந்தி முதலில் மரித்த போராளி சிவகுமாரனாவார்.

சிவகுமாரனின் சிலை நிறுவப்படுவதை யாழில் உள்ள படையினர் சிலர் ஆட்சேபித்ததாகவும் தெரியவருகிறது.

---

## சுட்டது பன்றிக்கு-பட்டது மனிதருக்கு

மட்டக்களப்பு-ஈரலக்குளம் இலுக்கு என்ற இடத்தில் க.அழகையா (64) எனும் வயோதிபர் கட்டுத் துவக்குச் சூடு பட்டுப் பலியானார்.

இது பற்றித் தெரியவருவதாவது, சேனைப் பயிர்ச்செய்கையில் பன்றித் தொல்லை காரணமாக அவற்றைச் சுருக்குப் பொறி வைத்துப் பிடிக்க முயற்சித்து சுருக்குகளைக் கட்டிக் கொண்டிருந்தபோது அச்சமயம் வேறு ஒரு நபர் கட்டுத் துவக்கை எடுத்துக் கொண்டு பன்றி வேட்டைக்காகச் சென்றுள்ளார். இவர், வழக்கமாகப் பன்றிகள் வரும் புதரில் பதுங்கியிருந்தார். அங்கு ஏற்கெனவே பன்றிக்குச் சுருக்குப் பொறி வைத்துக் கொண்டிருந்தவரை நோக்கிப் பன்றியென நினைத்துச் சுட்டுள்ளார்.

ஆளுக்குத் துப்பாக்கிச் சூடு பட்டு அவர் இறந்துவிட்டதைக் கண்டதும் சுட்டவர் தலைமறைவாகியுள்ளார். இன்னமும் அவர் எங்கிருக்கிறார் என்று கண்டு பிடிக்கப்படவில்லை.

புலிகளின் வசமுள்ள பகுதியிலேயே இச்சம்பவம் 06.01.99 அன்று இடம் பெற்றது. தமது பயிர்ச் செய்கைகளைக் காட்டு விலங்குகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக கமக்காரர்கள் பலர் புலிகளின் அனுமதியுடன் கட்டுத் துப்பாக்கிகளைப் பாவித்து வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

## விநியோகத்தில் தலையீடு!

அண்மையில் நாடெங்கும் பொழிந்த பலத்த மழை காரணமாக கிழக்கு மாகாணம் பெரும் பாதிப்பிற்குள்ளானது. அதனால் மக்கள் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்தார்கள்.

இருந்தபோதிலும் பாதிக்கப்பட்டுள்ள அம்மக்களுக்கு நிவாரண உணவுப் பொருள் வழங்குவதில் சீருடையினர் முட்டுக் கட்டையாக உள்ளனராம். மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 25 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வீடு வாசல்களை இழந்த அதிக எண்ணிக்கையானோரும் உள்ளனர்.

இந்நிலையில், "நிவாரணம் வழங்குவதாயின் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். பாதிக்கப்படாத இம்மக்களுக்கு நிவாரணம் வழங்குவது எந்த வகையில் பொருத்தம்!" என்று சீருடையினர் முணுமுணுக்கின்றனராம். பலவகையான நெருக்குதல்களின் மூலம் முழுமையான நிவாரண விநியோகத்திற்குத் தடையாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் கே.துரைராஜசிங்கம் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளைத் தவிர பிற பிரதேசங்களில் எதுவித தடையுமின்றி உணவுப் பொருள் விநியோகமும் இழப்பீடும் முழுமையாக இடம் பெற்றுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

## பௌத்த- சிங்கள மாணவர்களுக்கு அனுமதி!

## ஏனைய இன, மதத்தினருக்கு மறுப்பு

பௌத்த-சிங்கள மாணவர்களைத் தவிர்ந்த வேறு இன மதம் சார்ந்த பிள்ளைகள், மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் சேர்க்கப்படுவதில்லை. கடந்த சில வருடங்களாக இத்தகைய பாரபட்சம் அங்கு நிலவுவதாகக் கூறப்படுகிறது.

கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த 90 சதவீதமான மாணவர்களுக்கு கண்டி மாவட்டப் பாடசாலைகளில் இவ்வருடம் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் கத்தோலிக்க மதகுருமார், கன்னியாஸ்திரிகள், பெற்றோர் மற்றும் மாணவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை-10.01.99 அன்று கண்டி மாநகரில் அமைதியான கண்டன ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்.

பக்தி கீதங்களைப் பாடிய வண்ணம், பதாகைகளையும் சுலோக அட்டைகளையும் தாங்கிய சுமார் மூவாயிரம் பேர் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர்.

கண்டி அர்ச் அந்தோனியார் தேவாலயத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலம், மத்திய மாகாண கல்விக் காரியாலயம்வரை சென்று அக்காரியாலயத்தின் முன்புறம் ஒரு கூட்டம் நடைபெற்றது.

கத்தோலிக்க மாணவர்களுக்குக் காட்டப்படும் பாரபட்சம் நீக்கப்படவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கும் மகஜர் ஒன்று ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு அனுப்பப்படுவதற்காக மத்திய மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

---

## சோதனைச் சாவடியில் சோகம்–வைத்தியர் மோதுண்டார்

பல்வேறு இக்கட்டான சூழ்நிலையிலும் மட்டக்களப்பு ம்க்களுக்கு அர்ப்பணிப்புடன் வைத்திய சேவையாற்றி வந்தவர் டாக்டர் குமார் பெர்ணண்டோ அவர்கள். இதனால் அம்மக்களின் பேரபிமானத்தைப் பெற்றிருந்தார்.

பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்து தாமாக முன்வந்து தமிழ் பேசும் மக்களுக்குச் சேவையாற்றி வந்தார்.

சில தினங்களுக்கு முன் இவர் ஒரு விபத்தில் சிக்கி மோசமான காயங்களுக்குள்ளாகி கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இரவு வேளை என்றும் பாராது, நோயாளர்களைக் கவனித்துவிட்டு தனது வசிப்பிடம் நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கும்போது மட்டக்களப்பு அரசடியில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடி குறுக்கிட்டது. அங்கு இறங்கி நடந்து செல்லும் போது வீதிக்குக் குறுக்காக வைக்கப்பட்டிருந்த பெரிய இரும்புக் கேடரில் மோதுண்டு விழுந்து பாரதூரமான காயங்களுக்குள்ளானார்.

மாலையானதும் வீதியில் வருபவர்கள் தமது வாகன முகப்பு வெளிச்சங்களை அணைத்து விட்டு இருட்டில் வரவேண்டும். அவ்வாறு தனது மோட்டார் சைக்கிளில் இருந்த முகப்பு வெளிச்சத்தை அணைத்து விட்டு நடந்து செல்லும்போது இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வைத்தியர் குமார் பெர்னாண்டோ மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

---

## இயக்கத்தில் சேரும் அவா!

## யுவதி தற்கொலை!

பாடசாலைக் கல்வியைக் கை கழுவி விட்டுப் புலிகள் இயக்க நடவடிக்கையில் ஈடுபட பல முறை உத்தேசித்த யுவதி ஒருவர் தனது எண்ணம் முழுமையாகக் கைகூடாது போகவே நச்சு அலரி விதைகளை உட்கொண்டு தற்கொலை செய்துள்ளார். இச்சம்பவம் கடந்தவாரம் மட்டக்களப்பு- வந்தாறுமூலையில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: இயக்க நடவடிக்கையில் ஆர்வம் கொண்டிருந்த மேற்படி யுவதியை அவரது உறவினர்கள், தடுத்து வைத்தனர். தற்போதைய சூழ்நிலையில் இந்த விடயம் சீருடையினருக்கும், அவர்களுடன் சேர்ந்து செயற்படுபவர்களுக்கும் தெரியவந்தால் தங்களுக்கு ஆபத்து உண்டென்று பலமுறை கூறிவந்தனராம். எனினும் அவர் தொடர்ந்து இயக்க நடவடிக்கையில் ஈடுபடவே உறவினர்களும் சற்று ஒதுங்கியிருக்குமாறு தொடர்ந்து கூறிவந்தனராம். இதனால் மனமுடைந்த யுவதி நச்சு அலரி விதையை உட்கொண்டு தன்னை மாய்த்துக் கொண்டுள்ளார்.


படிப்பகம்

www.padippakam.com

# "செம்மணி விவகாரத்தை ஏன் கண்டிக்கவில்லை?"

## அமெரிக்க அதிகாரிகளிடம் வை.கோ. வினாக்கணை!

**ம.தி.மு.க. தலைவரும், இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான வை.கோ. தனது அமெரிக்க விஜயம் தொடர்பாக அளித்த பேட்டியில் ஒருபகுதி கடந்தவாரம் வெளியாகி இருந்தது. மறுபகுதி இது:**

மனித உரிமைக் கமிஷனின் துணைத் தலைவரான ஹோஸ்ட் என்பவரைச் சந்தித்தேன். இவரைச் சந்திக்க ஈழத் தமிழர் சார்பாகக் கூட இதுவரை எவருக்குமே அனுமதி கிடைத்ததில்லை. முதல் முறையாக தமிழர்கள் தரப்பில் இருந்து துணைத் தலைவரை சந்திக்கும் வாய்ப்பை நான் பெற்றேன். அவரிடம் ஒரு மணிநேரம் தமிழீழ நிலைமைகளை விளக்கினேன்.

செர்பியாவிலே இருக்கக்கூடிய செர்பிய இராணுவம், தனி நாடு கேட்டுப் போராடுகின்ற அல்பேனியர்கள் மீது இராணுவத் தாக்குதல் நடத்தியதோடு மட்டுமல்லாமல் 70,80 அல்பேனியர்களைக் கொன்று, கொசாவோ என்ற இடத்தில் புதைத்த கொடுமையை ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும், உலக நாடுகளும் பெரிய பிரச்சனையாக்கிவிட்டன. இது நியாயமான கண்டனம்தான்.

அமெரிக்க இராணுவ அமைச்சர் கொசாவோ சம்பவத்தைக் கண்டித்து, "செர்பியா மீது இராணுவத் தாக்குதல் நடத்துவோம்!" என்று சொன்னார். எல்லா பத்திரிகைகளும் கண்டித்திருக்கின்றன. ஆனால் அதைவிடக் கொடுமை செம்மணியிலே நடந்துள்ளது. ஏன் அதைக் கண்டிக்க மனிதாபிமானிகள் முன்வரவில்லை?

முன்பு யூகோஸ்லாவாக்கியாவில் ஒரு மருத்துவமனையில் இராணுவத் தாக்குதல் நடத்தப்பட்டு, கொல்லப்பட்டவர்கள் வெளியே தெரியாமல் புதைக்கப்பட்டனர். அந்த உண்மைகளை வெளியே கொண்டுவர 'பிசிசியன் ஃபார் ஹியூமன் ரைட்ஸ்' என்ற தடயங்களைக் கண்டறிவதில் உலகில் சிறந்த நிபுணர்களைக் கொண்ட அமைப்பை அனுப்பி மனித உரிமைக் கமிஷன் யூகோஸ்லாவாகியாவில் நடந்த கொடுமையின் பின்னணியைக் கண்டு பிடித்தது. அதேபோல் இப்போது அதே குழுவை செம்மணிக்கு அனுப்ப வேண்டும் என்றும் கோரியுள்ளேன்.

அகதிகளுக்கான ஆணையத்தில் அதன் தலைவரான ராஜீவ் கபூரை சந்தித்தேன். அவர் ஒரு இந்து. தீபாவளியன்று தீபாவளி கொண்டாடக்கூட போகாமல் எனக்காக பகல் 2 மணிக்கு காத்திருந்தார். அவரிடம் ஒன்றரை மணிநேரம் பேசினேன்.

உலகம் முழுவதும் இந்தக் கமிஷன் அகதிகள் நலனுக்காகக் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்கிறது. ஆனால் 91 முதல் இந்தியாவில் நரசிம்மராவ், கௌடா, குஜ்ரால், எல்லா அரசுமே இந்திய அகதிகளுக்கான எந்த உதவியும் செய்ய வேண்டாமென்று மறுத்துள்ளனர்; தடுத்துள்ளனர்.

அகதிகள் எல்லா உதவியும் பெறுவதற்கு சர்வதேசச் சட்டமும், அமைப்பும் இருக்கிறபோது அதைத் தடுப்பது என்பது அக்கிரமமானது.

அதைத் தடுப்பவர்கள் குற்றவாளிகள் தானே? மீண்டும் நான் இப்போது பேசிவிட்டு வந்துள்ளேன்.

இங்கு அந்த அமைப்பு 500 கோடி ரூபாய் வரையில் செலவழிக்கக்கூடிய வாய்ப்புள்ளது. அதைத் தடுத்திருப்பது என்ன நியாயம்? மீண்டும் அகதிகளுக்காக உதவ வேண்டியுள்ளேன்.

இப்படி என்னுடைய வெளிநாட்டுப் பயணத்தில் தமிழீழ மக்களுக்காகவும், தமிழீழப் போருக்காகவும் வாதாடிவிட்டு வந்துள்ளேன். இதையெல்லாம் பத்திரிகையாளர்களிடம் பேசினேன். ஆனால் இது குறித்து எந்தப் பத்திரிகையும் செய்தி வெளியிடவில்லை.

நானும் என் இயக்கமும் ஈழத் தமிழ் மக்களின் வாழ்வுக்காகத் தொடர்ந்து பணியாற்றி, மக்களுக்கு இந்தப் பிரச்சனைகளைப் புரிய வைப்போம் என்பதில் எப்போதும் உறுதியாக இருக்கிறேன்.

**★ தமிழகத்தில், ஈழ அகதிகளெல்லாம் சிறப்பு முகாம் என்ற பெயரில் கொடும் சிறைக்கூண்டில் கொடுமைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையை முதலில் மாற்ற வேண்டுமே?**

கடந்த நாடாளுமன்றக்கூட்டத் தொடரிலேயே இது குறித்து பேசியிருக்கிறேன். குறிப்பாக கடலில் சிக்கி 44 பேர் உயிரிழந்த சம்பவத்தைக் குறிப்பிட்டு கடுமையாகப் பேசியிருக்கின்றேன். அங்கு உயிர்வாழ வாய்ப்பில்லாத நிலையில் வருகின்ற அகதிகளுக்கு உதவி செய்யப்பட வேண்டும், அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளேன். தமிழக மீனவர்கள் மீதான சிங்கள இராணுவத் தாக்குதல்கள் குறித்தும் பேசியுள்ளேன்.

**★ ஆனாலும் சிறப்பு முகாம்களின் எண்ணிக்கையும், சிறப்பு முகாம்களில் பிடித் தடைக்கப்படும் அப்பாவி ஈழ அகதிகள் எண்ணிக்கையும் பெருகிக்கொண்டு தானே இருக்கிறது?**



ஐ.நா.சபை மனித உரிமைகள் துணைத் தலைவரிடம் இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பான ஆவணத்தை கையளிக்கிறார் வை.கோ.

சிறப்பு முகாம்களின் உண்மை விவரங்கள் கிடைக்கவில்லை. அவை கிடைத்தவுடன் அடுத்த கூட்டத் தொடரில் இது குறித்து கண்டிப்பாகப் பேசுவேன்.

**★ அகதியாய் வந்த வங்கதேசிகளுக்கு குடியுரிமை கிடைத்துள்ளது. திபெத் அகதிகளும் குடியுரிமை கோரி வருகின்றனர். அதேபோல் தமிழகத்தில் நீண்ட நாட்களாய்வாழும் ஈழத்தமிழ் அகதிகளுக்கும் குடியுரிமை வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை குறித்து?**

அவர்கள் இனிமேல் நாங்கள் அங்கு போக விரும்பவில்லை. இங்குதான் இருக்க விரும்புகிறோம் என்று கோரினால் குடியுரிமை கொடுக்கவேண்டும். வெளிநாட்டில் 5 ஆண்டுகள் இருந்தாலே குடியுரிமை கிடைத்துவிடுகிறது. இங்கும் கொடுக்க வேண்டியது அரசின் கடமை.

**★ இந்தியாவில் விடுதலைப் புலிகள்மீதான தடையை எதிர்த்து புலிகளே வழக்காடி வருகின்றனர். தடைக்கு எதிரான ஆதாரங்களை மெய்ப்பிக்க முடியாமல் அரசு தடுமாறிக் கொண்டுள்ளது. இந்தத் தடை குறித்து...?**

புலிகள் இயக்கம் ஈழ மண்ணின் விடுதலைக்காகப் போராடுகின்ற அமைப்பு. அது தன்னுடைய தேசிய இன விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட அமைப்பைச் சார்ந்த சிலரின் மீது குற்றச் சாட்டுக்கள் இருந்தால், அக்குற்றச் சாட்டுக்கள் உண்மையா? பொய்யா? என்பது நீதிமன்ற விசாரணையில் தெரியப் போகிறது. குற்றம் உண்மையென்று மெய்ப்பிக்கப்பட்டால் அதற்குத் தண்டனை தரப் போகிறார்கள். அப்படி இருக்க ஒட்டு மொத்தமாக, தம் மக்களுக்காகப் போராடுகிற அமைப்பையே தடைசெய்வதென்பது ஒட்டு மொத்த ஈழத் தமிழர்களுக்கு தீங்காகவே அமைகிறது. தடை நீக்கப்படுவது என்பதுதான் நல்லது.

**★ தமிழ் எதிர்ப்பாளர்கள் 'தமிழில் வழிபாடு சட்டப்படி செல்லாது' என்றெல்லாம் பேசிவருகின்றனர். இந்த நிலையில் தி.மு.க. அரசின் இந்தச் சட்டத்தை செயல்படுத்த ம.தி.மு.க. என்னென்ன வழிகளில் துணை நிற்கப்போகிறது?**

கொள்கையளவில் நாங்கள் வரவேற்கின்றோம். தமிழ் மொழியில் அர்ச்சனை நடைபெற வேண்டும், இந்த நாட்டில் புராதனமான தமிழ்மொழியில் அர்ச்சனை நடைபெறுவதற்கு தமிழக அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளை வரவேற்கின்றோம்.


**★ டெல்லியில் பாட்டாளி மக்கள்கட்சி நடத்திய தமிழ் உட்பட 18 மொழிகளை ஆட்சிமொழியாக்க வேண்டுமென்ற கருத்தரங்கில் மத்திய நகர்ப்புற அமைச்சர் ராம்ஜெத்மலானி இந்தியாவுக்கு ஒருபொது மொழித் தேவை என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். பொது மொழி என்பது எதுவாக இருக்கும்?**

பொதுமொழி என்ற போர்வையில் தான் இந்தியைத் திணிக்கின்ற வேலையில் ஈடுபட்டு வருகிறார்கள். அனைத்து மொழிகளும் ஆட்சிமொழியாக்கப்பட வேண்டும். பொதுமொழி என்பது எதிர்காலத்தில் இயற்கையாகவே உருவாக வேண்டும். எல்லாமொழிகளும் ஆட்சிமொழியாகி நடைமுறைக்கு வரும்வரையில், இணைப்பு மொழி தேவை என்றால் ஆங்கிலம் கூட இருக்கட்டும். இந்தி வந்துவிடக்கூடாது.

## கல்வியமைச்சு செய்த கொலை

**1998ம்** ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் திகதி க.பொ.த. (சா/த) பரீட்சை இலங்கையில் எல்லா மாவட்டங்களிலும் நடைபெற்றது நாம் அறிந்த விடயம். அதுவும் இப்பரீட்சையை இலங்கை பரீட்சைத் திணைக்களம் தான் நடத்துகின்றது. இப்பரீட்சைத் திணைக்களத்தில் ஒரு தமிழ்மொழி பேசும் அதிகாரி இல்லையா? அதாவது க.பொ.த (சா/த) பரீட்சை எழுதிய மாணவர்களின் விடைகளை பொதி பண்ணும் போது பரீட்சை மேற்பார்வையாளரினால் அப்பொதியின் மேல் ஒட்டப்படும் காகிதம் (ஒட்டி) இங்கு காணப்படுகின்றது. இதில் தமிழ் மொழியை கல்வி அமைச்சே எவ்வாறு கொலை செய்துள்ளது என்பதைப் பாருங்கள்.

கேணியூர் தமிழினியன்.





விளம்பரப் பகுதி

**O/L மாணவர்களுக்கு!!!**
* குறும் கால தொழிற்கல்விகள்
* தமிழ், சிங்கள, ஆங்கில மூலம்

பாடநெறிகள்
Δ DIPLOMA IN COMPUTER STUDIES
Δ DIPLOMA IN MICROSOFT OFFICE
Δ DIPLOMA IN PROGRAMMING
Δ AAT (LONDON) Δ IABK (LONDON)
Δ SPOKEN ENGLISH COURSE

ஆரம்பம் 18 01 1999

(எல்லா பாடநெறிக்கும் ஆங்கில பாடநெறி இலவசம்)
3 வருடகாலமாக வெற்றி நடை போடும்....
MICS
36, 2nd Cross Street, Puttalam. ☎ 032-65370

**சித்தர் மாந்திரீகம்**
அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.
1ந் திகதி முதல் 21ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE, WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067. (முன்னை பயப்பவை மட்டும் செய்து தரப்படும்.)
வியாழன் விடுமுறை

**மனோதத்துவ வைத்தியம்**
பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை
கொழும்பில் ஜனவரி 24 முதல் 31 வரை சந்திக்கலாம்
Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
BEAUTY LODGE, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
(5 லாம்புச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) (ஆட்டுப்பட்டித் தெரு) T.P:- 338165-338166
கொழும்பு நாட்கள் மட்டும் செல்டெல் No. 072-609388
கடிதத்தொடர்பு:- Dr. P.Arumugam S.A.M.P.
No. 33, Tissa Weerasingam sq, Boundary Road, Batticaloa . SRI LANKA.

**SPOKEN ENGLISH**
BY K. M. N. NALRAVI
யாருக்காக?
★ தொழில் புரிபவர்களுக்காக.
★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)
• ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் மட்டும்.
• ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனம்.
• ஆங்கிலம் சற்றேனும் பேசத்தெரியாதவர்கள் கூட சரளமாகப் பேசப்பயிற்சி. • அடிப்படையிலிருந்து இலக்கணம். • இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
• நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை.
• பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
• இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள். • Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
• வகுப்பிற்குப் பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassette கள்.
• பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
• 3 அல்லது 6 மாத காலப் பாடத்திட்டம்.
• பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
குறிப்பு: • பாடசாலை மாணவர்களுக்கு Diploma வகுப்புகள் ஆரம்பம்.
• அலுவலக நேரம்: காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
• புதன் கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்.
NALRAVI ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatte, Colombo - 6. (Hotel Ceylon Inns க்கு அருகில்)
GRAYON

**உலகப் பிரசித்தி பெற்ற உயர்தர (ரமி) இசைத்தட்டுகள்**
ஆங்கிலோ–இந்திய கூட்டுத் தயாரிப்பாளர்கள் EMI-RPG அமைப்புடன் RAMIY இணைந்து பழைய–புதிய பாடல்களை சர்வதேசத் தரத்தில் (CD's) இசைத்தட்டுக்களாகவெளியிட்டுள்ளனர்.
இவற்றை இலங்கையில் அறிமுகப்படுத்துவதில்
ஏ.கே.வி. எம்போரியம் பெருமைப்படுகிறது.
நாடெங்கும் விற்பனை முகவர்கள் தேவை.
நியாய விலையில்–சர்வதேசத் தரத்தில்–RAMIY CDS.
எமது விசேட வெளியீடு — மன்னார் மடு மாதா மீதான கிறிஸ்தவ கீதங்கள்
A.K.V. EMPORIUM
F 119, PEOPLES PARK,
COLOMBO-11.
Phone:435744, 472129
சுவிற்ஸர்லாந்தில் —
RAMIY RECORDS
GMBH
KOCHLI STR-028
8004-ZURICH.
Phone: 004181252525013
RAMY CDS RAMY CDS RAMY CDS RAMY CDS

**NISACO STEEL FURNITURE**

Special Discount on This Month Only
• Open on Every Sunday 8.am to 8.pm
நிசாகோ இன்டஸ்ட்ரீஸ்
204, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில, தெஹிவல. Tel : 074-201727 Fax : 075-515168
(Opposite Buddagosha Vidyalaya)
FACTORY & SHOW ROOM
Milagana Estate, Aturugiriya Road, Hokandara North, Hokandara. Tel: 561367
(Near the telecommunication Exchange Hokandara)

**தமிழகத்தின் தலைநகர் சென்னைக்கு வருகை தரும் தமிழ் மக்களுக்கு ஒரு நற்செய்தி!**
திருமணத் தேவைகளுக்கான பொன், தாலிக்கொடி, மோதிரம், வளையல், முதலான பொன் ஆபரணங்கள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும். தாலிக்குப் பொன் உருக்குதலுக்கு உங்கள் இல்லத்திற்கே பத்தரை அனுப்பி வைப்போம் என்பதையும் அறியத் தருகின்றோம். தவறாது விஜயம் செய்யுங்கள்.
சாந்தி கோல்ட் ஹவுஸ்
சாந்தி கோல்ட் ஹவுஸ்.
இல: 72. உஸ்மான் ரோட்.
தி.நகர்.
சென்னை –600 017.
Shanthi Gold House.
No: 72, Usman Road,
T.Nagar,
CHENNAI-600 017
PHONE:- (0091) 044 - 43 41730 - FAX: 0091.044 4334855
E-MAIL-SANTI COM MD3. VSNL-NET. IN-
HTTP. //WWW. INTAMM. COM / SHANTHI.

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தாய்லாந்தில்- புலிகளின் தளம்

தென்னாபிரிக்காவில் புலிகளுக்குள்ள ஆதரவை பலவீனப்படுத்துவதில் இலங்கை அரசும், அதன் வெளிநாட்டமைச்சரும் தோல்வியையே சந்தித்தனர்.

தென்னாபிரிக்காவில் உள்ள புலிகள் ஆதரவு அமைப்புக்கள் வெகு உற்சாகமாக இயங்கி வருகின்றன.

தற்போது இலங்கை வெளிநாட்டமைச்சின் பார்வை தாய்லாந்தை நோக்கி திரும்பியிருக்கிறது.

தாய்லாந்தை தளமாகப் பயன்படுத்தி புலிகள் ஆயுதம் கடத்துவதாக வெளிநாட்டமைச்சர் கதிர்காமரும், இராணுவப் பேச்சாளரும் கூறியுள்ளனர். 'பச்சைப் பொய்' என்று அதனை மறுத்திருக்கிறது தாய்லாந்து அரசு.

வெளிநாட்டமைச்சின் கூற்றுக்களை பார்க்கும்போது, அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக உலகெங்கும் தளம் கண்டுள்ளவர்கள் விடுதலைப் புலிகள் என்றுதான் எண்ணத் தோன்றும்.

ஆயுதக் கடத்தல், ஆயுதக் கப்பல்கள் பற்றிய கதைகள் ஒரு வருடத்திற்குள் பல முறை அரச தரப்பாலும், படைத்தரப்பாலும் கூறப்பட்டுவிடுகிறது.

சென்ற ஆண்டு புலிகளது ஆயுதக் கப்பல் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் சென்ற ஆண்டில் பல தடவைகள் ஆயுதக் கப்பல் கதைகள் உலாவின.

அரசும், படைத்தரப்பும் புலிகளது ஆயுதக் கப்பல் வருவதாக தகவல் கிடைத்ததாக கூறியதையெல்லாம் கூட்டிப் பார்த்தால், இப்போது வன்னியிலேயே ஆயுதம் வைக்க இடமிருந்திருக்காது. அந்தளவுக்கு ஆயுதங்கள் குவிந்திருக்கும்.

விமான எதிர்ப்பு ஆயுதங்கள், நவீன மோட்டார்கள், மோட்டார் குண்டுகள், மற்றும் வெடிமருந்துகள், வானூர்தி உதிரிப்பாகங்கள், கடற்புலிகளுக்குரிய சில சாதனங்கள், மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் போன்றவை புலிகளால் தமது கப்பல்மூலம் கொண்டுவந்து சேர்க்கப் பட்டவைதான்.

ஆட்டிலெறிகள் போர் முனையில் கைப்பற்றப்பட்டவையே தவிர புலிகளால் சொந்தமாக வாங்கப் பட்டவையல்ல.

ஏனெனில் ஆட்டிலெறிகள், டாங்கிகள் போன்றவற்றை வெளிச் சந்தைகளில் கொள்வனவு செய்வது சிரமம். அடுத்தது, அவற்றின் விலையும் எக்கச்சக்கம். ஏதாவது ஒரு நாடு உதவி செய்தால்தான் ஆட்டிலெறிகள் போன்றவற்றை பெறமுடியும்.

இலங்கை அரசால்கூட நவீன ஆட்டிலெறிகளை வாங்குவதற்கு வசதி போதவில்லை.

வெளிநாட்டு தமிழர்களது நிதி உதவி, மற்றும் சில வர்த்தக நடவடிக்கைகள் மூலமே வெளிநாடுகளில் புலிகள் நிதி சேகரித்துக் கொள்கின்றனர். அந்த நிதித் தொகை பாரிய கனரக கள ஆயுதங்களை கொள்வனவு செய்யப் போதுமானதல்ல.

ஆகவே, போர் முனையில் உள்ள கள ஆயுதங்களை கைப்பற்றித் திருப்பித் தாக்குவதே புலிகளது உத்தி.

முல்லை முகாம், மற்றும் ஜயசிக்குறுய் போர் முனைகளில் ஆட்டிலெறிகள், மோட்டார்கள், கவச வாகனங்கள், ஆட்டிலெறி குண்டுகள், மோட்டார் குண்டுகள் என்பவை கணிசமானளவு புலிகளால் கைப்பற்றப்பட்டன.

அதாவது கள ஆயுதங்கள் பலவற்றை உள்நாட்டு போர்முனைகளிலேயே புலிகள் பெற்றுக் கொண்டனர்.

அதேசமயம் குறும்தூர ஆயுதங்கள் தேவைக்கு அதிகமான அளவில் புலிகளிடம் இருக்கின்றன. 'எங்களிடம் போதிய ஆயுத வளம்இருக்கிறது. அதைப் பயன்படுத்த ஆட்கள் தான் தேவை' என்று புலிகள் கூறியுமிருந்தனர்.

எனவே ஆயுதக் கடத்தலில் அடிக்கடி ஈடுபடவேண்டிய தேவை புலிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

கப்பல் அடிக்கடி வந்து போவதற்கு ஆகும் செலவும் கொஞ்ச நஞ்சமல்ல.

நேரத்தில் இரண்டு இலக்குகளை எட்ட நினைக்கிறது.

ஒன்று: சர்வதேச அரங்கில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான தளங்களை இல்லாதொழிப்பது.

இரண்டாவது இலக்கு: புலிகளது வர்த்தக நடவடிக்கைகளை சீர்குலைத்து, பொருளாதார ரீதியாக புலிகளை பலவீனப்படுத்துவது.

இவற்றில் முதல் இலக்கை எட்டுவதற்கு பயங்கரவாத இயக்கத்திற்கு புகலிடம் கொடுக்க வேண்டாம் என்றும், இரண்டாம் இலக்கை எட்ட, ஆயுதக் கடத்தல் தளத்தை புலிகள் வைத்திருப்பதாகவும் காரணங்கள் கூறப்படுகின்றன.

தென்னாபிரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்க வைக்க வெளி



120 எம்.எம். ஹெவிச்சர் ஆட்டிலெறிகளுடன் பிரபா.

## பிரசாரமும்-பின்னணியும்

ஆனால் அடிக்கடி இவற்றைக் கொண்டுவருவதற்கான தேவை புலிகளுக்கு கிடையாது.

ஆயுதங்கள் பிரதானமாக இரண்டு வகைப்படும்.

1) கள ஆயுதங்கள்

2) குறும்தூர ஆயுதங்கள்.

கெரில்லா யுத்தத்திலும், அதிரடி தாக்குதல்களிலும் குறும்தூர ஆயுதங்களே பயன்படுகின்றன. சிறியரக மோட்டார்கள், ஆர்.பி.ஜி.க்கள் போன்றவற்றையும் இவற்றோடு தற்போது சேர்த்துக் கொள்ளலாம்.

விரைவாக கொண்டு செல்லத்தக்க பாரம் குறைந்த ஆயுதங்களாக இவை இருக்கின்றன. அதனால் துரித நகர்வுகள், துரித தாக்குதல்களில் இவற்றை பயன்படுத்துவதில் சிரமம் இருக்காது.

கள ஆயுதங்களுக்குள் பெரியரக மோட்டார்கள், ஆட்டிலெறிகள், விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் என்பவை அடங்கும்.

மோட்டார்களில் நவீனரக மோட்டார்கள் பல தற்போது வெளிநாடுகளில் பாவனைக்கு வந்துள்ளன.

120 எம்.எம். ஆட்டிலெறி புலிகளிடம் இருக்கிறது. 155 எம்.எம்., 152 எம்.எம்., 180 எம்.எம். என்று மேலும் பல ரகமான ஆட்டிலெறிகள் வெளிநாடுகளில் உள்ளன.

இவை தவிர மோட்டார்களில் தன்னியக்க மோட்டார்களும் உள்ளன. 82 எம்.எம். தன்னியக்க மோட்டார் நம் நாட்டு களங்களுக்கும் ஏற்றது. இம் மோட்டார் புலிகளிடம் இல்லை. படைத் தரப்பிடமும் இருப்பதாகத் தெரியவில்லை.

நீண்ட தூரடாங்கி எதிர்ப்பு ஆட்டிலெறி துப்பாக்கிகளும் உள்ளன.

இதுவரை புலிகளிடம் உள்ள ஆட்டிலெறிகள் போர் முனையில் ...

வன்னியில் படை நடவடிக்கையை எதிர்கொள்ள புலிகள் தமது அணிகளையும், வளங்களையும் சீரமைக்க வேண்டியிருந்தது. அப்போது புலிகளது கப்பலும் வந்து போனது.

தற்போது புலிகளது கப்பல்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம். வெளிநாடுகளில் புலிகளது வர்த்தக நடவடிக்கைகளோடு தொடர்புடையவர்கள் கம்போடியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கும் அடிக்கடி சென்று வரக்கூடும்.

இதனை அரசல் புரசலாக அறியும் இலங்கையின் புலனாய்வு நிறுவனங்கள், தாய்லாந்து புலிகளது ஆயுதக் கடத்தல் தளம் என்று தீர்மானம் எடுத்து அறிவிக்க, அதனையே வெளிநாட்டமைச்சும் உலகறியக்கூறி முக்குடைபட்டுள்ளது.

தாய்லாந்திலோ, கம்போடியாவிலோ புலிகளது கப்பல்கள் வர்த்தக நடவடிக்கைகள் கருதி தரித்து நிற்பதையோ, போக்குவரத்தில் ஈடுபடுவதையோ அந்தந்த நாட்டு அரசுகள் கூட தடுக்க முடியாது. புலிகளின் பெயரில் அக் கப்பல்கள் பதிவு செய்யப்பட்டவையும் அல்ல.

கம்போடியாவில் புலிகளது நடமாட்டம் என்பது பழைய தகவல். குட்டி யாழ்ப்பாணமாக காட்சிதரும் கம்போடியாவில் புலிகள் இயக்கத்தின் வர்த்தக நடவடிக்கைகளோடு தொடர்புடைய பிரமுகர்கள் தங்கியிருந்தனர். தற்போதும் தங்கிச் செல்கின்றனர்.

அதுபோல தாய்லாந்திலும் தங்கிச் செல்லக்கூடும். ஆனால் எக்கட்டத்திலும் அவர்கள் தங்களைப் புலிகள் என்று பிரகடனப்படுத்த மாட்டார்கள். அவர்கள் வர்த்தகர்கள் அல்ல புலிகள் என்று இலங்கை அரசு கூறினாலும் நிரூபிக்க ஆதாரம் வேண்டும்.

இலங்கையின் வெளிநாட்டமைச்சு ஒரே

நாட்மைச்சர் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. அந்த நாடுகளில் மேலும் புலிகளுக்கு ஆதரவு பெருகி உள்ளது.

கடந்த நவம்பர் மாதம் புலிகளது மாவீரர் தினக் கூட்டம் இலண்டனில் நடந்தது. அக் கூட்டத்தில் பிரிட்டிஷ் எம்.பி ஒருவரும் கலந்து கொண்டார்.

அவரை கலந்து கொள்ளாமல் தடுப்பதற்கு இலங்கைத் தூதரகமும் முயற்சித்தது. அது பயனளிக்கவில்லை.

பின்னர் மாவீரர் தினம் நடைபெற்ற மண்டபம் முன்பாக சிங்களவர்கள் சிலர் சுலோக அட்டைகளுடன் நின்றனர். பிரிட்டிஷ் எம்.பி.யை தடுக்க முயன்றனர். முடியவில்லை. இறுதியில் வெறுத்துப்போய் சுலோக அட்டைகளை எறிந்துவிட்டு அவர்கள் போய் விட்டனர்.

இலண்டனில் உள்ள இலங்கைத் தூதரகமே சுலோக அட்டைகளை கொடுத்து அவர்களை அனுப்பியதாக நம்பப்பட்டது.

பிரிட்டனிலும், தென்னாபிரிக்காவிலும் புலிகளை பயங்கரவாதிகளாக காண்பிக்கும் முயற்சிகள் தோல்விகளையே தழுவியுள்ளன. வெளிநாட்டமைச்சருக்கும் இதில் வருத்தம்தான். அதுதான் பார்வையை தாய்லாந்தை நோக்கி திருப்பியிருக்கிறார் அங்கும் சறுக்கல்தான்.

●●●

**வ**ன்னியில் வெடி விபத்துகள் கடந்த இரு மாதத்தில் அதிகரித்துள்ளன. கிட்டத்தட்ட 30 புலிகள் வெடி விபத்தில் பலியாகியுள்ளனர். இவர்களில் இரண்டுபேர் லெப்டினன்ட் கேணல்கள். அதாவது களத்தளபதிகள்.

கடந்த வாரத்திலும் ஐந்து புலிகள் வெடி விபத்தில் பலியாகி உள்ளனர்.

இவர்களில் ஒருவர் களப்படப்பிடிப்பாளர் தமிழ்வாணன்.

வெடிகுண்டுத் தாக்குதல் ஆயத்தங்களில் புதிய உறுப்பினர்களுக்கு அவசரமாக பயிற்சி கொடுக்க வேண்டியிருப்பதும் வெடி விபத்துக்களுக்கு ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

தாக்குதலுக்கான ஒத்திகை ஒன்றை படமாக்கிக் கொண்டிருந்தபோது, நடைபெற்ற வெடி விபத்திலேயே களப் படப்பிடிப்பாளர் தமிழ்வாணன் பலியானதாகவும் தகவல் ஒன்று கூறுகிறது.

வெடி விபத்துக்கள் சில சமயங்களில் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. அடிக்கடி ஏற்படுகிறது என்றால் கவனக் குறைவுதான் காரணம்.

ஆனால் தமது வெடி விபத்துக்களை மறைக்காது புலிகள் அறிவித்துள்ளனர். அவர்கள் நினைத்திருந்தால் அவற்றை தமது முகாம்களுக் குள்ளேயே அமுக்கி மறைத்திருக்கலாம்.

தமது இழப்பு விபரங்களை புலிகள் மறைப்பதில்லை. அதனால்தான் வெடி விபத்து விபரங்கள் வெளியே தெரிவிக்கப்பட்டன.

இதிலே வேடிக்கை என்னவென்றால், புலிகள் தமது இழப்புக்களை பகிரங்கமாக கூறியவுடன், அதைக் கேட்டுவிட்டு 'புலிகளுக்குள் உள் பிரச்சனை' என்று அரச தகவல் தொடர்புச் சாதனங்கள் கூறிவிட்டன.

உள்பிரச்சனை என்றால் அதனை வெளியே தெரியாமல் புலிகள் முடித்துக் கொள்வார்கள். தாமே கூறிக்கொண்டிருக்கமாட்டார்கள்.

◻◻◻

**வ**ட கடலில் கடற்பரப்பில் எதிர்பாராத மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

07.01.99 அன்று திருமலையில் இருந்து வன்னி நோக்கி புலிகளது அணிகள் படகுகளில் சென்றன.

தமது ராடார்களில் புலிகளின் படகுகளது நடமாட்டத்தை அவதானித்த கடற்படை ரோந்துப் படகுகள் விரைந்து சென்று தாக்குதல் நடத்தின.

படகுகளில் இருந்த புலிகளும் பதிற் தாக்குல் நடத்தினர். இருதரப்புக்கும் இடையே கடற் சண்டை மூண்டது. கடற்படையினரின் பலமே மேலோங்கியது.

சண்டைக்கு போதிய தயாரிப்போடு இல்லாத புலிகளது படகுகள் தற்காப்பு தாக்குதல் மட்டுமே நடத்தியபடி கரையை நோக்கி விரைந்தன.

இச் சண்டையில் தமது கடற்கலங்கள் இரண்டு சேதமானதாகவும், இரண்டு கடற்படை சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் படைத்தரப்பு கூறியது. புலிகள் தரப்பில் பத்துப்பேர் பலியானதாகவும், இரு படகுகள் முற்றாக நாசமானதாகவும் கூறினர்.

புலிகள் தமது தரப்பில் பலியான உறுப்பினர் ஒருவரது பெயர் விபரத்தை வெளியிட்டனர். அவரும் கடற்புலியல்ல.

இதன் பின்னர் முல்லைக்கடலில் மீனவர்களது படகுகள்மீது தாக்குதல் நடத்தப் பட்டது.

புலிகளது படகுகள் தாக்குதலிலிருந்து தப்பிச் செல்ல, மீனவர் படகுகள்மீது தாக்குதல் நடந்துள்ளது. இரு படகுகள் முற்றாக நாசமாகின. ஏனைய மீன்பிடிப்படகுகள் தப்பிச் சென்றுவிட்டன.

இரு படகுகளில் இருந்த மீனவர்களும் உயிர்தப்பக் கடலில் குதித்தனர்.

இவர்களில் ,செல்லர் கந்தசாமி (வயது 35) என்பவர் கடற்படையினரால் மீட்கப்பட்டு திருமலை வைத்தியசாலையில் கடும் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரையும் புலி என்று கருதி விட்டாருடன் தொடர்புகொள்ள முடியாமல் கடும் பாதுகாப்புடன் வைத்திருப்பதாக 'முரசு'க்கு தகவல் கிடைத்துள்ளது.

புலிகளது இரு படகுகள் முற்றாக நாசம் என்று அரச தகவல் தொடர்பு சாதனங்களில் கூறப்பட்டது. ஆனால் தாக்கப் பட்டது மீனவர் படகுகள்தான்.


11.01.99 அன்று இரவு புல்மோட்டை கடற்பரப்பில் புலிகள் மீது தாக்குதல் நடத்தியதாக கடற்படையினர் தெரிவித் துள்ளனர்.

இது பற்றிய தரவுகள் இதுவரை பூரணமாக கிடைக்கவில்லை. கிடைத்த பின்னர் பார்க்கலாம்.

கடற்பரப்பில் கடற்படையினரின் தாக்குதல்கள் கடற்புலிகளின் பதிற்தாக்குதலுக்கு தூண்டுகோலாகவும் அமையலாம்.

நாரதர்

### 82 எம்.எம். தன்னியக்க மோட்டார்



1971 இல் சோவியத் யூனியனில் தயாரானது. தற்போது ஹங்கேரி போன்ற நாடுகளில் பாவனையில் உள்ளது. மொத்தம் எடை: 632 கிலோ.

உச்ச சுடுதூரம்: 4700 மீட்டர் (4.7 கிலோமீட்டர்)

குண்டின் எடை: 3.1 கிலோ

இது நிமிடத்திற்கு 100 ஷெல்களை ஏவக்கூடியது. ஆட்டிலெறி போன்று, காவுவண்டி போன்ற தளத்துடன் இணைத்தே இதனை இயக்க முடியும்.

தானியங்கியாக பாவிக்க விரும்பாவிட்டால் ஏனைய மோட்டார்கள்போல் குழாயின் முன்புறமாக ஷெல்லை செலுத்தி வெடிக்கவைக்கலாம். இயக்க 4பேர் தேவை.

## அதிரடி அப்பாத்துரை



***தேர்தல் நடக்கும்*** பகுதியில் அதிகாரத் தரப்பாருக்கு ஒத்துழைக்க மறுத்த ஆளவந்தார் தன் பதவியை விட்டு விலகிவிட்டார். ஆனாலும் ஏன் விலகினார் என்பதை அவர் வெளியே சொல்லவில்லை. விலகியது பற்றி பரவாயில்லை. "வில்லங்கம் ஏற்படுத்த வேண்டாம்" என்று மேலிருந்து கேட்கப்பட்டுள்ளாராம். மௌனமாக இருந்தால் வெளிநாடு ஒன்றுக்கு தூதராக அனுப்பப்படுவாராம்.

***'தமக்கு ஒத்துழையார்கள்'*** என்று சீருடை அதிகாரிகள் சிலரை அதிகாரத் தரப்பு மாற்றினாலும், கீழ்மட்ட சீருடையினர் பச்சை அணியுடன்தான் பாசமாக இருப்பதாகத் தகவல். தம் அதிகாரிகளை மாற்றியதில் அவர்கள் அதிருப்தியுடன் இருப்பதாகவும் தகவல்.

***யாழ் குடாநாடு*** அரசுக்கு எதிரான போராட்டங்கள் பலவற்றைக் கண்டுள்ளது. சமீபத்தில் வித்தியாசமான ஒரு போராட்டத்தைக் கண்டது. தனியார் கல்வி நிலையத்தினர் மாதாந்த கட்டணங்களை 'கிபீர்' விமானம்போல வானத்தில் பறக்கவிட்டு மிரட்டியதால், மாணவர்கள் வெகுண்டு எழுந்து ஆர்ப்பாட்டம் நடத்தி, கட்டணத்தை குறைக்குமாறு கோரினார்கள். முன் ஒரு காலத்தில் தரப்படுத்தலுக்கு எதிராக யாழிலும் போராட்டங்கள் நடந்தன. இம்முறை ரியூட்டரிகளுக்கு கூடுதல் கட்டணம் தரப்படுதல் இயலாது என்று போராட்டம் நடந்திருக்குது!

***செம்மணி விவகாரத்தை*** தோண்ட வேண்டிய நேரத்தில் தோண்டாமல் இழுத்தடிப்பு நடந்திருக்குது. ஆதாரங்கள் மாயமாகி இருக்கலாம் என்று சனம் சந்தேகப்படுகுது. ஆனால் இந்தத் தமிழ்க் கட்சிகளோ தோண்டுவதை வரவேற்பதாக அபிப்பிராயம் சொல்லியிருக்கினம். இந்த விஷயத்தில் கழக மாணிக்கம் விட்ட அறிக்கையை சத்தியமாகப் பாராட்டத்தான் வேணும்.

***வெற்றிட எம்.பி.*** பதவியை நிரப்ப யாழ்ப்பாணத் தமிழர் ஒருவரை அம்மையார் தேடிவருகிறாராம். பிரபலமான தமிழராக இருக்க வேண்டும் என்றும் விரும்புகிறாராம். இது சக பத்திரிகை ஒன்றில் கடந்த வாரம் வந்த செய்தி. பார்த்தியளோ, தம்மை ஆதரிக்கும் 'டமில்' கட்சிகளில் பிரபலமான ஆட்கள் இல்லையென்றுதானே அம்மையார் நினைக்கிறார்.

***யாழ்ப்பாண விமான*** சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் என்று ஒரு தகவல் பரவிக்கொண்டிருக்குது. நம்பி ஏமாறவேண்டாம். தற்போதைக்கு அதற்கான சாத்தியம் இல்லை. கெட்டியாக பாதுகாப்பு இருந்தாலும், அங்குலம் அங்குலமாக தடவிப்பார்த்து பயணிகளை அனுமதித்தாலும், எப்படியாவது ரெண்டு எழுத்தார் புகுந்து கடத்திப்போகலாம் என்று நம்புகினம். மற்றப் பக்கமாக பார்த்தால் இரண்டு எழுத்தாரின் திறமையில் அப்படியொரு நம்பிக்கை என்றும் கூறலாம்.

***பொங்கலுக்கு*** பால்தான் பொங்கவேண்டும். யாழ்ப்பாணத்தில் விலைவாசி பொங்கியிருக்கு. பயணிகள் கப்பல்தான் ஒழுங்காக விடவில்லை. தனியார் சரக்குக் கப்பல்கள் பொருட்களோடு தயாராக நின்றும் ஏன் கொழும்புதுறைமுகத்தில் தடுத்து வைத்து இழுத்தடிக்கினம். இதனை மட்டும் 'டமில்' கட்சிகள் கண்டிக்கமாட்டினமோ?

***தலைநகர தனியார்*** 'பிரகாச' வானொலியில் வன்னியை 'விடுவிக்கப்படாத பிரதேசம்' என்றுதான் செய்தியில் குறிப்பிடுகினம். ஏதோ ஒருவகையில் பின்னணி வெளிப்படுகிறதா? அல்லது குறிப்பிட்ட செய்தி அறிக்கையை எழுதியவரின் கருத்தோட்டமா? பல செய்தி அறிக்கைகளில் அப்படிக் கூறப்பட்டதால் ஒருவருடைய கருத்தோட்டமாக மட்டும் தெரியவில்லை.

***தமிழக 'சன் ரி.வி.'யைப்*** பார்த்து அப்படியே பிரதிபண்ணும் வேலை இங்கும் நடக்கிறது. தமிழில் தேவையற்று ஆங்கிலத்தை கலப்பது, 'வணக்கம்' என்று இனிய தமிழ் இருக்க, ஆங்கிலத்தில் வணக்கம் சொல்லி தங்கள் புலமையை காட்டுவது போன்ற பழக்கங்கள் இங்கும் தலைகாட்டப் பார்க்குது. தற்போது வளர்ந்துவரும் ஒரு பெண் அறிவிப்பாளருக்கு வளமான எதிர்காலம் இருக்கிறது. வளமான தமிழை மறக்காமல் இருந்தால் பாராட்டலாம். அதிலாவது தமிழக அறிவிப்பாளர்களைவிட நாம் தனித்துவமானவர்கள் என்று காட்டலாம்தானே.

***இம்முறை*** ஒரு தமாஷ் கவிதை: (உபயம்: மணிமதியண்ணன்)

**"எட்டப்பனின் வாரிசு**
**இன்னும் உயிரோடு;**
**கடன்காரனிடம்**
**காட்டிக்கொடுக்கிறதே**
**வாசலில் கிடக்கும்**
**செருப்பு!"**



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



# கொக்கட்டிச்சோலை படுகொலைகள்

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச் சோலையிலும், அதன் அருகிலுள்ள கிராமங்களிலும் வாழ்ந்த தமிழ் மக்கள் தங்களுக்கு ஏற்படப்போகும் கொடூர அனுபவம் பற்றி அறிந்திருக்கவில்லை.

12.06.91 புதன்கிழமை மாலைவரை வழக்கம்போலத்தான் கழிந்தது. மாலையில்தான் இராணுவத்தினரின் வாகனங்கள் கிராமங்களுக்குள் புகுந்தன.

எதிர்ப்பட்ட மக்கள் மீதெல்லாம் துப்பாக்கிகள் வேட்டுக்களைத் தீர்த்தன. கூரிய கத்திகளும் குடி மக்களது உடல்களில் விளையாடின.

பெண்கள், சிறுவர்கள் முதியோர் என்ற பேதம் இல்லாமல் படுகொலைத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

புதன்கிழமை மாலை ஆரம்பமான தாக்குதல்கள் வியாழன் காலை வரை தொடர்ந்தது.

முதலைக்குடா கிராமத்தில் 21 தமிழர்கள் புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் நான்கு பேரை மட்டுமே விடுவித்த இராணுவத்தினர், ஏனைய 17 பேரையும் சுட்டுக் கொன்றனர் என்றும், அவ்விடத்திலேயே எரித்தனர் என்றும் தகவல்கள் கூறின.

துப்பாக்கி வேட்டுக்கள், இராணுவ வாகன உறுமல்கள், அவலக்குரல்கள் போன்றவற்றைக் கேட்டு பீதியடைந்த மக்கள் தம் வீடுகளைவிட்டு தப்பியோடினார்கள்.



கனடாவில் நடைபெற்ற உண்ணாவிரதமும் பொதுக்கூட்டமும்

வீடுகளுக்குள் புகுந்த இராணுவத்தினர் அங்கிருந்த உடமைகளை தொறுக்கிவிட்டு, வீடுகளுக்கு தீவைத்தனர்.

பெண்கள் பலர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார்கள். அவர்கள் மட்டக்களப்பு வைத்தியமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

தப்பியோடிய மக்களில் பலரை கைது செய்த இராணுவத்தினர் அவர்களை புதை குழிகள் தோண்டுமாறு மிரட்டினார்கள்.

அவ்வாறு தோண்டப்பட்ட புதைகுழிகளுக்குள் 56 சடலங்கள் புதைக்கப்பட்டதாக நேரில் கண்ட ஒருவர் பின்னர் அரச விசாரணைக் குழுவிடமே தெரிவித்திருந்தார்.

166 பேர்வரை இராணுவத்தினரால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கணக்கிடப்பட்டது.

இக்கொடூர சம்பவத்துக்கு பலத்த கண்டனங்கள் எழுந்தன. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் கண்டித்தன.

## விசாரணை

இக் கோரக்கொலைகள் சர்வதேச ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்று தெரிந்துகொண்ட ஜனாதிபதி பிரேமதாசா உடனடியாக சில நடவடிக்கைகளை எடுத்தார்.

பிரதமர் டி.பி.விஜயதுங்கா தலைமையில் உயர்மட்டக் குழுவொன்றை கொக்கட்டிச் சோலைக்கு அனுப்பிவைத்தார்.

அந்தக் குழுவில் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், பாதுகாப்பமைச்சின் பதில் செயலாளர் வோல்டர் பெர்னான்டோ, இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா ஆகியோர் அடங்கியிருந்தனர்.

மட்டக்களப்பு கச்சேரியிலும், கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமிலும் வைத்து, நடந்த சம்பவங்கள் பற்றி அக்குழு பாதிக்கப்பட்ட மக்களிடம் விவரங்களை கேட்டறிந்தது.

கிழக்கு மாகாண இராணுவத் தளபதி ஜெனரல் ஜெரி சில்வா, மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்னா ஆகியோரும், பாராளுமன்ற உறுப்பினர்களான பிரின்ஸ் காசிநாதர், கோ. கருணாகரன், எம். ஹிஸ்புல்லா, இம்மானுவேல் சில்வா ஆகியோரும் உடன் இருந்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சென்று பார்க்குமாறு அரச குழுவினரை எம்.பிகள் வற்புறுத்தினார்கள்.

அங்கு சென்று பார்வையிடுவது பாதுகாப்புப் பிரச்சனை என்று இராணுவத்தினர் தடுத்துவிட்டனர். அரச உயர் குழுவும் அதனை ஏற்றுக்கொண்டு கொழும்புக்கு திரும்பியது.

சம்பவ இடத்தை பார்வையிடாது அவர்கள் திரும்பிச் சென்றதை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபித்தனர்.

## ஆணைக்குழு

கொக்கட்டிச் சோலை படுகொலைகள் குறித்து ஆராய ஓய்வுபெற்ற நீதியரசர் டி.ஜி. ஜெயலத் தலைமையில் விசாரணைக் குழுவொன்றையும் பிரேமதாசா நியமித்திருந்தார்.

இக்குழுவினர் உடனடியாக மட்டக்களப்பு சென்று, அங்கிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சென்றனர்.

ஹெலியில் இருந்து இறங்கி மகிழடித் தீவுக்குச் செல்ல ஒன்றரை மைல் தூரம் அவர்கள் நடக்க வேண்டியிருந்தது.

அவ்வாறு நடந்து செல்லும்போது படுகொலைகள் நடந்து முடிந்தமைக்கான தடயங்களை அவர்கள் கண்டனர்.

எரிக்கப்பட்டுக் கிடந்த உடல்கள், அரை குறையாக புதையுண்டு கிடந்த உடல்கள், எரிந்த உடல்களது மண்டையோடுகள், எலும்புக் கூடுகள் போன்றவற்றை வழிநெடுகவும் அவர்கள் கண்டனர்.

அரிசி ஆலை ஒன்றுக்குள் 15 சடலங்கள் கிடந்தன. வெளியே 16 உடல்கள் எரிந்தநிலையில் கிடந்தன. அதற்கு முன்னர் அப்படியொரு காட்சியைக் கண்டிருக்காத விசாரணைக் குழுவினருக்கு கிலி பிடித்துவிட்டது. தலையில் கைவைத்தனர்.

அதனால் முதலைக்குடா போன்ற ஏனைய பகுதிகளுக்கு அவர்கள் செல்லவில்லை.

முதலைக் குடாவில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் மகிழடித்தீவில் வைத்து எரிக்கப்பட்டார். அவ்வாறு எரியுண்டவரின் தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு விசாரணைக் குழுவிடம் கையளிக்கப்பட்டது.

பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகி மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களையும் சந்தித்து வாக்குமூலம் பெற்றனர்.

## புலிகள் குற்றச்சாட்டு

கொக்கட்டிச்சோலை படுகொலையில் படையினருடன் ரெலோவும், புளொட்டும் இணைந்து நின்றதாக புலிகள் குற்றம் சாட்டினார்கள்.

இரு கட்சிகளும் வெளியிட்ட கண்டனம் வெறும் கண்துடைப்பே என்றும் புலிகள் கூறினர்.

ஆயினும் ரெலோ, புளொட் ஆகியன நேரடியாக பங்குகொண்டதற்கான ஆதாரங்கள் எதுவும் கிட்டவில்லை. அவற்றில் இருந்து வெளியேறிய சிலர் படையினருக்கு உதவி செய்திருக்கக்கூடும்.

## புலிகளின் கருத்து

கொக்கட்டிச் சோலை படுகொலைகள் குறித்து புலிகள் பின்வருமாறு தெரிவித்திருந்தனர்:

"கொக்கட்டிச்சோலை வெறியாட்டத்தில் 200ற்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலையாகியுள்ளனர். பலநூறு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

சிறீலங்கா அரசின் சுயரூபம் இதன்மூலம் அம்பலமாகியுள்ளது. உலகின் கண்களில் மண்ணைத் தூவும் முயற்சியாக வழக்கம்போல விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

கொக்கட்டிச் சோலை படுகொலை ஏதோ தற்செயலாக நடந்த, கட்டுப்பாடற்ற இராணுவத்தினரின் செயல் என்று உலகை நம்பவைக்க சிறீலங்கா அரசு படாதபாடு படுகிறது.

'ஈழப்போர்' தமிழ் மக்களுக்கு எதிரான போர் அல்ல, புலிகளுக்கு எதிரான போர் என்று விளக்கம் கொடுத்த சிறீலங்கா அரசின் கூற்று படுபொய் என்பது இப்போது நிரூபணமாகியுள்ளது.

சிறீலங்கா பௌத்த சிங்கள நாடு. இந்த நாட்டில் வேறு இனங்களுக்கோ, மதங்களுக்கோ இடமில்லை என்ற அநாகரிக தர்ம பாலாவின் கனவை நனவாக்கவே சிறீலங்கா அரசுகள் பாடுபடுகின்றன.

அது பச்சையானாலும் சரி, நீலமானாலும் சரி, கடந்த அரை நூற்றாண்டாக அநாகரிக தர்ம பாலாவின் சிந்தனையே முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

## அநாகரிக தர்மபாலா

பௌத்த சிங்களவர்கள்தான் சிறீலங்காவின் உண்மையான பூமி புத்திரர்கள் என்ற கருத்தை பகிரங்கமாக பிரகடனப்படுத்தியவர் தர்மபாலாதான்.

துட்டகெமுனு என்ற பெயரில் இருக்கும் 'துட்ட' என்பதை நீக்கிவிட்டு 'அரசிளம்குமரன் கெமுனு' என்று பட்டாபிஷேகம் செய்து வைத்தவரும் அவர்தான்.

அதுமட்டுமல்ல சிங்களவர்கள் ஆரியர்கள். தமிழர்கள் திராவிடர்கள். ஆரியர்கள் பூர்வீகக் குடிகள். திராவிடர்கள் வந்தேறு குடிகள் என்று போதித்தவரும் அவரே.

சிறீலங்கா அரசுத் தலைவர்கள் தர்மபாலாவின் சிந்தனையை படைகள் மூலம் நனவாக்கப் பார்க்கிறார்கள். அதன் விளைவே கொக்கட்டிச் சோலை படுகொலை.

முன்பும் நாம் பல கொக்கட்டிச் சோலைகளைப் பார்த்திருக்கிறோம். இன்னமும் பலவற்றை பார்க்கத்தான் போகிறோம். நம்

இலட்சியம் ஈடேறும்வரை கொக்கட்டிச் சோலைகள் நிகழ்ந்து கொண்டே இருக்கும்" என்று புலிகள் தெரிவித்திருந்தனர்.

## வெளிநாடுகளில்

கொக்கட்டிச்சோலை படுகொலைகளைக் கண்டித்து வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தின.

பிரான்ஸ், நோர்வே, கனடா, ஜேர்மன், இலண்டன் உட்பட பல நாடுகளில் கொக்கட்டிச்சோலைப் படுகொலைகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களும், உண்ணாவிரதங்களும் நடைபெற்றன.

'கொக்கட்டிச்சோலை படுகொலை திட்டமிட்ட இன ஒழிப்பே' என்பது இப்போராட்டங்கள் அனைத்திலும் பொதுவான கோஷமாக இருந்தது.

கனடாவில் ரொரண்டோவில் அடையாள உண்ணாவிரதமும், கண்டனப் பொதுக் கூட்டமும் நடத்தப்பட்டது.

கியூபெக் ஈழத் தமிழர் ஒன்றியம், உலகத் தமிழர் இயக்கம் ஆகியவை கனடாவில் போராட்டங்களை ஒழுங்கு செய்திருந்தன.

ஜெர்மனியில் உலகத் தமிழர் இயக்கம் நடத்திய ஊர்வலத்தில் சுமார் ஆறாயிரம் தமிழர்கள் பங்கு கொண்டனர்.

இத்தகைய எதிர்ப்புப் போராட்டங்கள் அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் ஊடாக இலங்கை அரசை எட்டின.

சர்வதேசரீதியாக தமிழர் அமைப்புக்கள் நடத்திய இத்தகைய போராட்டங்கள் தொடர்ச்சியாக பல கொக்கட்டிச் சோலைகள் நிகழாது தடுத்தன என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

## முத்தமிழ் விழா

யாழ் குடாநாட்டில் சாவகச்சேரியில் முத்தமிழ் விழா ஒன்றை புலிகள் நடத்தினார்கள்.

நாடகப்போட்டிகள், கவியரங்குகள், சிறுவர் நிகழ்ச்சிகள், விடுதலைக் கீத இன்னிசை என்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

சாவகச்சேரியில் பிரமாண்டமாக அமைக்கப்பட்ட மேடையில் இறுதி நிகழ்சிகள் நடத்தப்பட்டன.

முத்தமிழ் விழா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட இருந்தன.

பெரும்திரளான மக்கள் அங்கு கூடியிருந்தனர்.

திடீரென்று மேடையில் ஒரே பரபரப்பு. கூடியிருந்த மக்களுக்கு எதுவுமே புரியவில்லை. அவர்களையும் பரபரப்பு ஆட் கொண்டது.

சில நிமிடங்களில் பரபரப்புக்கான காரணம் புரிந்துவிட்டது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மேடையில் தோன்றினார். மக்களுக்கு வணக்கம் தெரிவித்தார்.

யாருமே பிரபாகரன் வருவார் என்று எதிர்பார்க்கவில்லை. பாதுகாப்புக் கருதி அத்தகவலை இரகசியமாக வைத்திருந்தனர்.

பிரபாகரன் இறந்துவிட்டதாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கமும், இந்திய புலனாய்வுத் துறையினரும் பிரசாரம் செய்த பின்னர் பகிரங்க கூட்டம் ஒன்றில் பிரபாகரன் தோன்றியது அதுதான் முதற் தடவை.

தனது கையாலேயே பரிசில்களை வழங்கிய பிரபாகரன், "நான் சாகவும் இல்லை. காயப்படவும் இல்லை" என்று சிரித்தபடியே கூறியதும் கூடியிருந்த மக்கள் ஆரவாரம் செய்தனர்.

விழா முடிந்ததும், விழாவுக்கு வந்த பாதையால் செல்லாமல், வேறு பாதை வழியாக மெய்ப்பாதுகாப்புப் பிரிவினரால் பிரபாகரன் அழைத்துச் செல்லப்பட்டார்.

(தொடர்ந்து வரும்)

# ஆனந்த சங்கரியும் ஆலால சுந்தரமும்

வரலாறுகள் சரியாக எழுதப்படுவதில்லை. யாருக்கும் வரலாறு தெரியவில்லை என்று கூட்டணி உபதலைவர் ஆனந்தசங்கரி சமீபத்தில் வருத்தப்பட்டிருக்கிறார். அவரது வரலாறு பற்றி நாம் கூறினால் கோபப்படுவார். 1970ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக கிளிநொச்சியில் போட்டியிட்டவர் சங்கரி. அவருக்கு எதிராக போட்டியிட்ட தமிழரசுக்கட்சி வேட்பாளர் ஆலாலசுந்தரம் ஆற்றிய உரையைப் படித்துப் பாருங்கள்:

கிளிநொச்சித் தொகுதியில் தமிழரசு வேட்பாளனாக நாம் இம்முறை போட்டியிடுகின்றேன், 1965ல் திரு.கா.பொ.இரத்தினம் போட்டியிட்டு அமோக வாக்குகளால் காங்கிரஸ் வேட்பாளரான திரு.வீ.குமாரசாமியையும், கூட்டாட்சி வேட்பாளரான வீ. ஆனந்தசங்கரியையும் தோற்கடித்தார்.

1960 ஆடித்தேர்தலில் சமசமாஜக் கட்சி வேட்பாளரான திரு. ஆனந்த சங்கரியை தமிழரசுக் கட்சி நேரடிப் போட்டியில் தோற்கடித்தது. 1960 பங்குனித் தேர்தலில் சுயேட்சை அபேட்சகரையும் தோற்கடித்து ஆனந்த சங்கரி தனது கட்டுப்பணத்தையும் பெற முடியாமல் நீங்கள் தமிழரசுக் கட்சிக்கே வாக்களித்தீர்கள். 1956ல் அரை மந்திரி குமரசாமியைத் தோற்கடித்தீர்கள்.

இத்தனை வீரம் மிக்க, தமிழரசின் கொள்கைகளில் உரமுள்ள, தியாகத்துக்கு பெயர் பெற்ற, இலட்சியப் பற்றுள்ள, விடுதலைக்காக உழைக்கின்ற உங்கள் மத்தியில் நான் தமிழரசுக் கட்சியின் இலட்சியங்களையும், கொள்கைகளையும் பேசுவது கம்மாள தெருவில் ஊசி விற்ற கதை போன்றதாகும்.

இன்று காங்கிரஸ் கட்சியில் போட்டியிடுகின்ற திரு. ஆனந்த சங்கரி அவர்கள் என்ன கொள்கையில் போட்டியிடுகின்றார்? கடந்த தேர்தலில் அவர் கொள்கை என்ன? கடந்த தேர்தலில் தமிழ் காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளைக் கண்டித்துப் பேசினார். இன்று அதே கட்சியின் கொள்கைகளை ஆதரித்துப் பேசுவதைப் பார்க்கும்போது அவர்களது இலட்சியங்களை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

எனவே தான் இலட்சியமற்றவர்களை நீங்கள் ஆதரிப்பதில் தமிழ் மக்களுக்கோ தமிழ் மண்ணுக்கோ பிரயோசனமில்லை என்பதை அறிவீர்கள்.

## குடியேற்றம்

வவுனியாத் தொகுதியில் மீன் பிடிக்கரையான முல்லைதத்வுப் பகுதியில் நடைபெற்ற சிங்கள மீனவர் குடியேற்றத்திட்டம் போன்ற எதையும் இதுவரை மன்னாரிலிருந்து வடக்கேயும், பருத்தித்துறையிலிருந்து திருக்கோவில் வரையும் தமிழரசுக் கட்சியின் பிரதி நிதித்துவம் வகிக்கும் தொகுதிகளில் குடியேற்ற விடாது காப்பாற்றி வைத்திருக்கின்றோம். விவசாயம் என்ற போர்வையில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றமாக 1956க்குப்பின் அரசாங்கம் குடியேற்றவில்லை. எமது தலைவர் செல்வநாயகம் அவர்கள் பண்டாரநாயக்கா அவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தினால் எமது நிலம் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது.

இராணுவத்தின் கொடுமைகளையும் தொல்லைகளையும் நாம் நன்கு அறிகின்றோம். இன்று இக்கூட்டத்தின் தலைவராக இருக்கின்ற பருத்தித்துறைப் பிரதிநிதி திரு.க.துரைரெத்தினம் அவர்களை நீங்கள் நன்கு அறிவீர்கள். அவருக்கும் அண்மையில் இராணுவத்தினர் அடித்திருக்கின்றார்கள். இது நியாயமற்றது; தேவையில்லாதது. இதை எத்தனையோ தடவை நாம் பிரதமர் உட்பட அமைச்சர்களுக்குத் தெரிவித்தோம். இந்தத் தேசியம் பேசுகின்ற அரசினர் எமக்கு ஏதாவது நன்மை செய்வார்கள் என நாம் எதிர்பார்க்கவில்லை!.

1956ல் எமது தலைவர்களை சிங்களக் காடையர்கள் அடித்து நொறுக்கியபோது சும்மா பார்த்துக் கொண்டும் 1958 வகுப்புச் கலவரத்தில் தமிழர்கள் கண்ணீர் உடமைகளை இழந்து, அநாதைகளாக கப்பல்களில் யாழ்ப்பாணம் வந்திறங்கியதைப் பார்த்துக் கொண்டுமிருந்த பிரதமர் புத்தகுருவாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

1961-ம் ஆண்டு இராணுவத்தால் ஆட்சிபுரிந்த சிறிமா அரசாங்கம் 1965ல் இல்லை. எனவே இன்று இராணுவத்தினரின் கொடுமைகளை வரவேற்பவர்கள் அதாலேயே அழிவார்கள்.

## எட்டப்பர்கள்

1960ல் உரிமைகளா? தரமாட்டோம் என்ற டட்லி சேனநாயக்க 1965ல் தமிழரசுக் கட்சியுடன் ஒப்பந்தம் எழுதினார். எனவே எமது கொள்கைகள் என்றும் நிலையாக நிற்பதைப் பாருங்கள். தியாக சுத்தியினாலும், உரிமையைப் பெறும்வரை போராடுவோம் என்ற நெஞ்சுரத்தாலும் இன்று வரை இலங்கையில் மதிப்பு மிக்க தலைவர்களாக எமது தலைவர்களும், மதிப்புமிக்க கட்சியாக தமிழரசுக் கட்சியும், பெருமை பெற்று ஒரே கொள்கையில் அன்றும், இன்றும் இருந்து வருகின்றது.

இந்த நாட்டின் சரித்திரத்தை, குடியியலை படிக்கின்ற சரித்திர மாணவர்கள் நீங்கள் போராடிய வரலாற்றைப் படிப்பார்கள். உங்கள் தொகுதியில் எட்டப்பர்கள் காட்டிக் கொடுத்தவர்கள் நிராகரிக்கப்பட்ட நிகழ்ச்சியைப் புரிந்து கொள்ளுவார்கள். இலட்சியப் பற்றோடு வாழுகின்ற 'விவசாயத்தையும், கடற் தொழிலையும்,' மிக முக்கியமான தொழிலாகக் கொண்டு, தன் நம்பிக்கை நிறைந்த உழைப்பாளிகள் வாழுகின்ற இத்தொகுதியின் பெருமையை தொடர்ந்து எந்நாளும் காப்பாற்றுவீர்கள் என நம்புகின்றேன்.

*நன்றி: சுதந்திரன்,*
*4.4.1970*

www.padippakam.com

# தீகவாபி புனித நகர் திட்டம்
## நிலப்பறிப்பில் ஒரு கட்டம்

அலசுவது- இராஜதந்திரி



> ❑ அம்பாறையை முஸ்லிம்கள் ஆக்கிரமித்துவிட்டனர்.
> ❑ தீகவாபி புனித நகரின் 12 ஆயிரம் ஏக்கர் நிலத்தை பாதுகாப்போம்.
> ❑ கல்முனை வீதி அபிவிருத்திக்கு புனித நகர் பறிபோவதா?
> —பௌத்த அமைப்புக்களது ஆர்ப்பாட்டத்தில் ஒலித்தவை—

அம்பாறையில் தமது பூர்வீகக் காணிகள் பறிக்கப்படுவதை எதிர்த்து முஸ்லிம்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர்.

ஆலிம்சேனை, ஒலுவில் பகுதிகளில் பௌத்த சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவித்து, அப்பகுதி முஸ்லிம்களை வெளியேற்றுவதற்கு பௌத்த மதகுருமார் ஒற்றைக்காலில் நிற்கின்றனர்.

கிழக்கின் பெரும்பாலான முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசின் பங்காளிகளாக இருப்பதால், இந்த அத்துமீறலை பெரிதாக்க விரும்பவில்லை.

ஆயினும் அங்குள்ள முஸ்லிம் மக்கள் போராட்டங்களை நடத்துவதற்கு தலைப்பட்டுள்ளனர். இவ்விடயத்தில் வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளும் பாராமுகமாகவே இருந்து வருகின்றன. அக் கட்சிகளும் அரசுக்கு தலையிடியை கொடுப்பதற்கு விரும்பாத கட்சிகளேயாகும்.

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் தரப்பினருடன் கைகோர்த்து களம் கண்டிருக்கிறது.

இக்கட்டத்தில் அம்பாறையில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை பெரிதாக்கினால், தேர்தலில் முஸ்லிம் வாக்காளர்களை அதிருப்திப்படுத்தும் செயலாகிவிடும் என்றே முஸ்லிம் காங்கிரஸ் கருதியுள்ளது.

அதனால் எச்சரிக்கையுடனேயே இப்பிரச்சனையை அணுகியுள்ளது.

அம்பாறையில் முஸ்லிம்களது பூர்வீகக் காணிகள் இனிமேல் சுவீகரிக்கப்படமாட்டாது என்னும் உறுதிமொழியை ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுக் கொடுக்க முஸ்லிம் காங்கிரஸ் தவறியுள்ளது.

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடப் போவதாக ஒரு குண்டைத் தூக்கிப்போட்டு பொதுஜன முன்னணியை மிரட்டியிருந்தது முஸ்லிம் காங்கிரஸ்.

வடமேல் மாகாண சபைத் தேர்தலை பலப்பரீட்சையாக கருதும் பொதுஜன முன்னணி, அங்கு கடும் சவாலை எதிர்நோக்கி நிற்கிறது.

இந்நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிட்டு வாக்குகளை பிரிக்குமானால் மேலும் நெருக்கடியே ஏற்படும்.

ஆகவே தம்முடன் சமரசம் காணவே ஜனாதிபதி முன்வருவார் என்பது தெரிந்தே அப்படியொரு குண்டைத் தூக்கிப் போட்டிருந்தது.

முன்னர் அமைச்சர் அஷ்ரப்போடு பிரச்சனை ஏற்பட்டபோது, கடும் தொனியிலேயே ஜனாதிபதி பேசினார். கப்பற்துறையையும் அவரிடம் இருந்து பறித்திருந்தார்.

ஆனால் இம்முறை மருந்துக்கு வலியோ, புண்ணுக்கு வலியோ என்ற சூழ்நிலை. புண் பொதுஜன முன்னணிக்கு.

கிடைக்கக்கூடிய சகல மருந்துகளையும் உபயோகித்தாவது தேர்தலில் மீண்டு எழவேண்டும் என்பது கௌரவப் பிரச்சனை. அதனால் முஸ்லிம் காங்கிரசுடன் சமரசமாக போயிருக்கிறார் ஜனாதிபதி. அவர்களது நிபந்தனைகள் சிலவற்றுக்கு இணங்கவும் முன்வந்தார்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் 'தீகவாபி புனித பிரதேசம் என்ற பெயரில் முஸ்லிம் காணிகளை அபகரிக்கும் திட்டத்துக்கு அரசு ஒத்துழைக்காது என்னும் உறுதிமொழியையும் ஜனாதிபதியிடமிருந்து முஸ்லிம் காங்கிரஸ் பெற்றிருக்குமானால், சமயோசித நடவடிக்கையாக அமைந்திருக்கும்.

தேர்தலுக்கு சில வாரங்களே இருப்பதால், தற்போதுகூட ஜனாதிபதிக்கு அரசியல் நிர்ப்பந்தத்தை கொடுத்து அத்தகைய உறுதிமொழியை பெறமுடியும்.

எனினும், முஸ்லிம் காங்கிரஸ் அத்தகைய அணுகுமுறையை மேற்கொள்ள முன்வருமா என்பது சந்தேகமே.

முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமன்றி தமிழ் அரசியல் கட்சிகளும் அன்று முதல் இன்றுவரை அரசை நிர்ப்பந்திக்க தங்களுக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பங்களை நழுவவிட்டே வந்திருக்கின்றன.

நிர்ப்பர்ந்தம் கொடுக்க வேண்டிய நேரத்தில் இக் கட்சிகள் நிர்ப்பந்தம் கொடுப்பதில்லை. ஆனால் இவற்றை கைவிட வேண்டிய நேரமறிந்து கைவிடுவதற்கு சிங்களக் கட்சிகள் தயங்கியது கிடையாது.

தற்போது ஆலிம்சேனையில் உள்ள முஸ்லிம்களை உடனடியாக வெளியேறுமாறு பேரினவாத சக்திகள் மிரட்டுகின்றன. திருமலை மாவட்டத்தில் லிங்கநகரில் உள்ள தமிழ்க் குடும்பங்களை அங்கிருந்து வெளியேறுமாறு இராணுவத்தினர் அச்சுறுத்தி வருகின்றனர்.

திருமலையில் பச்சனூர் உட்பட பல தமிழ்க் கிராமங்களில் இருந்து மக்களை விரட்டியடிக்கும் நடவடிக்கைகளும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

அம்பாறையில் தமிழ்க் கிராமங்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. ஊர்க்காவல் படையினரோ, இராணுவத்தினரோ தாக்கப்பட்டால் தமிழ்க் கிராமங்கள்மீது தாக்குதல் நடத்தி விரட்டியடிக்கின்றனர்.

திருமலையில் புதிய சந்தை திறப்பது சிங்கள வியாபாரிகளை பாதிக்கும் என்று கூறி, புதிய சந்தை திறப்பதை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

மொத்தத்தில் வடக்கு-கிழக்கில் சிங்கள பௌத்த மேலதிக்கத்தை நிலைநிறுத்துவது என்னும் நீண்டகாலத் திட்டம் தற்போதும் முனைப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஆனால், தற்போது பொதுஜன முன்னணி அரசாங்கம் தமிழ், முஸ்லிம் கட்சிகளது ஆதரவிலேயே பாராளுமன்றத்தில் நிலைத்து நிற்கிறது.

இக் கட்சிகள் அரச ஆதரவை ஒன்றுபட்டு விலக்கிக் கொண்டால், மறுநிமிடமே பாராளுமன்றத்தை கலைக்க வேண்டியிருக்கும்.

தமிழ்க் கட்சிகள் மட்டுமே ஒன்று பட்டு எதிர்த்தால்கூட அரசாங்கம் பாராளுமன்றத்தில் தோல்வியையே தழுவும்.

அரசாங்கத்தை கவிழ்க்க இக் கட்சிகள் முன்வராவிட்டாலும், மிக முக்கியமான குடியேற்ற பிரச்சனை போன்றவற்றில் நியாயமான முடிவை எடுக்குமாறு அரசை நிர்ப்பந்திக்க முடியும்.

உதாரணமாக: லிங்கநகரில் தமிழ்க் குடும்பங்களை வெளியேறுமாறு கோரவேண்டாம் என்று அங்குள்ள படை அதிகாரிக்கு ஜனாதிபதி உத்தரவிடுமாறு நிர்ப்பந்திக்கலாம்.

தீகவாபி புனித பூமி என்ற பெயரில் ஆலிம்சேனை, ஒலுவில் பகுதி மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாது என்று தீர்மானம் எடுக்குமாறு அரசை நெருக்கலாம்.

ஆனால் இக் கட்சிகள் தாம் அரசுக்கு கொடுக்கும் ஆதரவுக்கு கைமாறாக, தமது தலைமைகளுக்குரிய பதவிகளையும், மற்றும் முக்கியத்துவமற்ற சலுகைகளையுமே நாடி நிற்கின்றன.

இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை பிரிட்டிஷார் சிங்கள பௌத்த ஆளும் வர்க்கத்திடம் கையளித்த சூட்டோடு திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற வெள்ளமும் வடக்கு-கிழக்கு நோக்கி திருப்பி விடப்பட்டது.

சேனநாயக்காக்களும், பண்டார நாயக்காக்களும் தமிழ்த் தலைமைகளுடன் கைகுலுக்கி புன்னகைத்தபடியே, தமிழ் பேசும் மக்களது தாயகத்தை சிதைக்கும் திட்டங்களை தீட்டினர். நடைமுறைப்படுத்தினர்.

குடியேற்றத் திட்டங்களை எதிர்த்து மேடையில் முழக்கமிட்டு, அவற்றை தேர்தல் பிரசாரத்திற்கு இலாபகரமாக பயன்படுத்தின தமிழ் பேசும் தலைமைகள்.

இவற்றுக்கு அப்பால் குடியேற்றத் திட்டங்களை தடுத்து நிறுத்துவதற்கான உருப்படியான நடவடிக்கை எதிலும் அவர்கள் ஈடுபடவில்லை.

இன்னும் அதே நிலையே காணப்படுகிறது.

முன்னர் ஆயுதம் ஏந்தியவர்களாக தம்மை அடிக்கடி பிரகடனப்படுத்திக் கொள்ளும் இந்நாள் மிதவாதக் கட்சிகள் முன்பிருந்த தலைமைகளைவிட மோசமான சரணடைவுக் கட்சிகளாகவே திகழ்கின்றன.

இக் கட்சிகளது சரணடைவுப் போக்குகள் பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு துணிச்சலை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளன.

அதுமட்டுன்றி, அம்பாறைத் தொகுதியை விட்டுக் கொடுக்கத் தயார் என்று கூட்டணியும், முஸ்லிம் காங்கிரசும் உடன்பாடு கண்டுள்ளன.

அரசோ, பேரினவாத சக்திகளோ எதனையும் விட்டுக்கொடுக்க முன்வராத நிலையில், கூட்டணியும், முஸ்லிம் காங்கிரசும் விழுந்தடித்து விட்டுக்கொடுப்பு தீர்மானம் எடுத்திருந்தன. அரசுக்கும் இதனை எடுத்துக் கூறி தமது பெருந்தன்மையான போக்குக்கு பாராட்டுப் பெற்றிருந்தன.

இந்த விட்டுக் கொடுப்பில் உள்ள நியாயம், அநியாயங்களை நோக்குவது ஒருபுறமிருக்க, தமிழ் பேசும் தரப்பு தாமாக முன்வந்து விட்டுக் கொடுப்புக்களை செய்வதால், பேரினவாதிகள் அதனை பலவீனமாகவே எடுத்துக் கொள்ளுகின்றனர்.

மேலும் இறுக்கிப் பிடித்தால் விட்டுக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் வடக்கு-கிழக்கில் மேலும் பகுதிகளை கோதி எடுத்து அருகிலுள்ள சிங்கள மாவட்டங்களுடன் இணைக்கவே துணிவர்.

வடக்கு-கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களது பாரம்பரிய தாயகப்பிரதேசமாகும். இங்கு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் தமிழ் முஸ்லிம் காணிகளே பறிபோயுள்ளன. எனவே பறிகொடுத்து நிற்பவர்களிடம் ஆட்சியாளர்களோ, பேரினவாதிகளோ விட்டுக் கொடுப்பை கோரி நிற்க முடியாது.

சுதந்திரம் கிடைத்ததாகக் கூறப்படுகின்ற 1948ம் ஆண்டின் பின்னர் வடக்கு-கிழக்கில் நடைபெற்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் பற்றிய தமது நிலைப்பாட்டை ஆட்சியாளர்கள் முதலில் கூறவேண்டியவர்களாகின்றனர்.

ஆனால் ஆட்சியாளர்களோ தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய தாயகக் கோட்பாட்டை முற்றாக நிராகரித்துள்ளதோடு, பல கூறுகளாக கோதி எடுக்கும் திட்டத்தையும் முன்வைத்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் தமிழ் பேசும் தரப்பு தம் நிலங்களை விட்டுக் கொடுப்பதற்கு முதலில் முன்வருவது, பேரினவாதத்தின் குடியேற்றக் கொள்கைக்கு உற்சாகம் கொடுப்பது போன்றதேயாகும்.

அம்பாறைத் தொகுதியை விட்டுக் கொடுப்பதாக முஸ்லிம் காங்கிரசும், கூட்டணியும் கூறியிருந்தன. இப்போது அவர்கள் விட்டுக் கொடுப்பதாக கூறியதிலும் மேலாக புதிய பகுதிகளை சுவீகரிக்க பேரினவாதிகள் திட்டம் தீட்டியுள்ளனர்.

காணிகளை பிடித்துவிட்டால் பின்னர் தமிழ் பேசும் தலைமைகள் விட்டுக்கொடுத்துவிடும்.

அப் பிரதேசத்தையும் அயலில் உள்ள சிங்கள மாவட்டத்துடன் இணைத்துக் கொள்ளலாம் என்று பேரினவாத சக்திகள் திட்டம்போடுவதற்கு விட்டுக்கொடுப்புக்களும் ஒரு காரணமாக அமைகின்றன.

அம்பாறையில் தீகவாபி புனித நகர் என்ற போர்வையில் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் சுமார் ஐநூறு ஏக்கர் காணிகள் பறித்தெடுக்கப்பட்டன. முஸ்லிம்கள் அங்கிருந்து விரட்டப்பட்டனர். அப்போதும் அரசாங்கத்தில் கிழக்கு மாகாண முஸ்லிம் அமைச்சர்கள் அங்கம் வகித்திருந்தனர்.

இன்றுவரை அந்தக் காணிகளுக்கான நஷ்டஈடுகூட வழங்கப்படவில்லை. இப்போது மீண்டும் ஒரு சுவீகரிப்புக்கு அடித்தளம் போடுகின்றனர்.

"அம்பாறையை முஸ்லிம்கள் அபகரித்துவிட்டனர். தீகவாபியின் 12 ஆயிரம் ஏக்கர் காணியை பாதுகாப்போம்" என்று அம்பாறையில் பேரினவாதிகள் ஆர்ப்பட்டம் ஒன்றையும் நடத்தியிருந்தனர்.

சிங்கள மக்களது பாரம்பரிய பிரதேசம் ஒன்றில், இந்து மத சின்னங்களோ, இஸ்லாம் மத சின்னங்களோ காணப்பட்டால், அப் பகுதியில் உள்ள சிங்கள மக்கள் வெளியேற வேண்டும் என்று கோர முடியுமா? அவ்வாறு கோரவும் தமிழ் பேசும் தரப்பு முன்வரமாட்டாது.

ஆனால் தாம் பேரினம், ஆட்சி அதிகாரம் தமது கையில் இருக்கிறது என்னும் மேலாதிக்க மனப்போக்குடன் பேரினவாதிகளை இத்தகைய கோரிக்கைகளை எழுப்புகின்றனர்.

தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய பூமியை அபகரித்துள்ளதோடு, இப்போது அப் பூமியின் மைந்தர்களையே ஆக்கிரமிப்பாளர்கள் என்று கூறுமளவுக்கு பேரினவாதம் துணிந்து நிற்கிறது.

12 ஆயிரம் ஏக்கர் நிலம் என்ற இலக்கில் மேலும் முஸ்லிம்களின் காணிகளை குறிவைத்துள்ளதையும் அறியக்கூடியதாகவுள்ளது.

பௌத்த சின்னங்களை இரவோடு இரவாக புதைத்துவிட்டு, மறுநாள் காலையில் தோண்டியெடுத்து அப்பகுதியை பௌத்த பூமியாக உரிமை கொண்டாடிய சம்பவங்களும் கடந்த காலத்தில் நடைபெற்றுள்ளன என்பதையும் மறந்துவிடலாகாது.

'தீகவாபி புனித நகர் திட்டம்' என்ற போர்வையில் நடைபெற்று வரும் குடியேற்ற முயற்சிகள், தனியே முஸ்லிம்களுக்கு எதிரானது மட்டுமல்ல. வடக்கு-கிழக்கை பௌத்த சிங்கள மயப்படுத்தும் நீண்டகால திட்டத்தின் ஒரு பகுதியுமாகும்.

நேற்று தமிழர்களுக்கு, இன்று முஸ்லிம்களுக்கு, நாளை தமிழர்களுக்கு என்ற விதமாக மாறிமாறி பேரினவாதத்தின் கரங்கள் நீண்டுகொண்டேயிருக்கும்.

தமிழ், முஸ்லிம் சமுகங்களை பிரித்து வைத்துக் கொண்டு, அந்த இரு சமுகங்களையுமே ஒட்டுமொத்தமாக பலவீனமாக்கும் சதித் திட்டங்கள்தான் கடந்த 50 ஆண்டுகளாக அரங்கேறி வந்துள்ளன.

தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தமக்குள் ஒன்றுபட்டு நின்று தம் பாரம்பரிய தாயகப் பிரதேசத்தை பாதுகாக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் கண்களை விற்றுச் சித்திரம் வாங்குவதுபோல, சில சலுகைகளுக்காக தம் நிலங்களை இழந்து தம் பூமியிலேயே 'ஆக்கிரமிப்பாளர்கள்' என்ற பட்டத்தையும் சுமந்து வாழும் நிலையே உருவாகும்.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

தமிழர் ஒருவருக்கு அமைச்சர் பதவி புதிதாக தரப்பட உள்ளதாக செய்திகள் வெளியாகின.

வடக்கு-கிழக்கு தமிழ்க் கட்சிகளில் உள்ள தமிழர்கள் எவருக்கும் மந்திரிப் பதவி வழங்கப்பட மாட்டாது என்பது உறுதியிலும் உறுதி.

"புதிதாக ஒரு தமிழருக்கு அமைச்சர் பதவி கொடுக்கலாம். அவர் புலிகளுடன் பேசக்கூடியவராக இருந்தால் நன்று" என்று பொதுஜன முன்னணி பொதுச் செயலாளர் ஜயரத்தினா கூறியிருக்கிறார்.

அவரது கூற்று தமிழ்க் கட்சிகளுக்கு வயிற்றெரிச்சலை உருவாக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

புலிகளை எதிர்த்தால் மேலும் பலாபலன்கள் உண்டு. நம்பிக்கையோடு பொறுப்புக்களும் தேடி வரும் என்று எண்ணியோருக்கு இடிதான்.

எம்.பி பதவி காலியானால் தமக்கு கிட்டாதோ? என்று படக்கு படக்கு என்று இதயம் துடிக்கும்.

அமைச்சர் பதவி மேலும் ஒரு தமிழருக்கு என்று செய்தி வந்தால் 'எமக்கு தரப்போகிறார்களோ?' என்று இதயம் துடிக்கும்.

இதுதான் தமிழ்க் கட்சிகளது இன்றைய அரசியல். குறித்து வைத்துக் கொள்ளுங்கள், எந்தவொரு வடக்கு-கிழக்கு கட்சிக்கும் மந்திரிப் பதவிகள் கிடையவே கிடையாது. தேவையானால் சின்ன சின்ன முந்திரிகள் தரப்படும்.

***

## தொண்டாவும் பௌத்த அமைப்புக்களும்

யாழ்ப்பாணத்தில் கூட்டணி உபதலைவர் ஆனந்த சங்கரி பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடத்தியிருந்தார்.

யாழ் நகரிலுள்ள தமிழர்களுக்கு மலசல கூடம் கட்ட வேண்டிய அவசியத்தை அழகாக விபரித்தார்.

யாழ் நகரில் மலசல கூடம் கட்டினால், உள்ளே செல்வதற்கும் சீருடையினரின் அனுமதியும் தேவைப்படுமே. சங்கரியார் தினம் நின்று பெற்றுக் கொடுப்பாரோ?

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறும் நிர்வாகம் மட்டும்தான் மலசலகூடம் கட்டலாம், கழிவு வாய்க்கால் கட்டலாம் என்று எந்தச் சட்டத்தில், எத்தனையாம் பிரிவில் இருக்கிறது?

மாநகர சபை ஆணையாளர் தலைமையிலான நிர்வாகமும் அதனைச் செய்யலாம்தானே. முன்பு உள்ளூராட்சி சபைகளுக்கு கூட்டணி போட்டியிட்டபோது தமிழீழத்தின் நிர்வாகம் யாவும் எம் கையில் இருப்பதை உலகுக்கு காட்டவே போட்டியிடுகிறோம் என்றனர்.

இப்போது மலசல கூடமும் யாழில் இருக்க வேண்டும் என்பதற்காகவே போட்டியிட்டோம் என்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் குட்டித் தேர்தல் நடந்து ஒருவருடமாகப் போகிறது. இன்னமும் மலசல கூடம் ஒன்றுகூட கட்டி முடிக்கவில்லையே!

1977ல் தமிழீழம் அமைப்பதாக கூறி வாக்குப் பெற்றனர். அது மிகவும் பெரிய காரியம். 1998ல் மலசலகூடம் அமைக்க போட்டியிட்டதாக கூறுகிறார். அதையாவது அமைத்து முடிக்கக்கூடாதோ?

●●●

பாராளுமன்றத்தில் தனது அமைச்சுமீதான பிரேரணை தோல்விகண்டதும், இனவாதிகளது சதி என்று உசுப்பிவிட்டது இ.தொ.கா. பின்னணியில் நீலவானம் தெரிந்தது.

நுவரெலியா சீத எலிய அம்மன் கோவிலுக்கு காணி ஒதுக்கப்பட்டதை பௌத்த அமைப்புக்கள் கண்டித்தன.

மலையகத்தில் காணிகளை அபகரித்து, அங்கு தனிராஜ்யம் அமைக்க தொண்டமானும், இந்தியாவும் சேர்ந்து திட்டம் போடுவதாக கூறினார்கள்.



உண்மையில் இந்த விவகாரத்திற்கும் தொண்டமானுக்கும் சம்பந்தமில்லை.

அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காதான், இந்திய சுற்றுலா பயணிகளுக்கு தூண்டில் போட, சீத எலிய அம்மன் கோவில் பகுதியை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை போட்டார்.

ஆனால், பௌத்த அமைப்புக்கள் தொண்டமானின் தலையை பந்தாடிக் கொண்டிருக்கின்றன.

இது மட்டும் இ.தொ.கா.வுக்கு இனவாதமாகப்படவில்லையா?

பௌத்த அமைப்புக்களது எதிர்ப்புக்கு பணிந்து காணி ஒதுக்குவதையே அமைச்சர் நிறுத்திவிட்டார்.

இத் திட்டத்துக்கு முதலிலேயே தொண்டா உடன்படவில்லை. பௌத்தர்கள் எதிர்ப்பர் என்று அமைச்சருக்கு கூறியதாகவும் தெரிகிறது.

அப்படியிருந்தும் திட்டத்தை அறிவித்த அமைச்சர் இப்போது பின்வாங்கியதுடன், தொண்டாவின் தலை பந்தாடப்படவும் வைத்துவிட்டாரே.

அமைச்சரது பின்வாங்கல் இனவாதத்திற்கு பணிந்த செயலாக இ.தொ.காவுக்கு தெரியவில்லையா?!

தொண்டாவை தேவையற்று கண்டித்த பௌத்த அமைப்புக்களையும் இ.தொ.கா. கண்டிக்கவில்லை இனவாதம் என்று இடித்துரைக்கவும் இல்லை.

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 44

**கடந்தவாரம்**

**அமீனை கொல்ல முயன்ற எட்டு மாணவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டு தீர்த்துக் கட்டப்படுகின்றனர். அவர்களுடன் சம்பந்தமில்லாத அப்பாவிகள் பலரும் அமீனை கொல்ல முயன்றதாக கைதாகி கொல்லப்படுகின்றனர். இனி....**

# இடி அமீன்

இழுத்து மூடப்பட்ட பாடசாலைகளையும், பல்கலைக்கழகங்களையும் திறப்பதற்கு ஏற்பாடு செய்வித்தான் அமீன்.

பேராசிரியர்கள் பலரும், ஆசிரியர்கள் பலரும் நாட்டைவிட்டு தப்பியோடிவிட்டதால், கல்வி கற்பிக்க தகுதியில்லாத பலர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர்.

மக்கரேரே பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவும் நடைபெற்றது.

அலங்கார உடையுடன் மேடையில் அமர்ந்திருந்தான் அமீன். அவனது பார்வை நான்கு திசைகளிலும் பாய்ந்தது.

மேடையிலும், மேடைக்கு அருகிலும் அமீனின் மெய்க்காவலர்களும், இராணுவத்தினரும் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர். விழாவுக்கு வந்திருந்தவர்களை முறைத்துக் கொண்டிருந்தனர். சந்தேகப் பார்வைகளால் தடவிக் கொண்டிருந்தனர்.

மேடையில் இருந்த அமீனின் பார்வை தான் இருந்த பக்கம் திரும்பும் போதெல்லாம் ஒரு பெண் தன் முகத்தை மறைத்துக் கொள்ள முயன்றாள்.

ஆனால், அமீனின் கழுகுக் கண்கள் அவளைக் கொத்திவிட்டன. கொத்தியதும் சொக்கிவிட்டன.

தன் அருகில் இருந்த அதிகாரி ஒருவரிடம் கேட்டான்: **"இரண்டாவது வரிசையில் நான்காவதாக அமர்ந்திருக்கும் அந்தப் பெண்மணி யார்?"**

"தெரியும், பிறின்சஸ் எலிசபெத் பகாயா. வெளிநாட்டமைச்சில் பணி புரிகிறாள். தோரோ இனத்தவள். எந்த நாட்டிலாவது கடமைபுரியும் தூதுவர்களுக்கு விடுமுறை தரப்பட்டால், அங்கு சென்று தற்காலிகமாகப் பணியாற்றுவாள். திறமையான பெண்!" என்றார் அதிகாரி.

தான் கேட்டதுமே, அப்பெண்ணின் சாதகத்தையே கூறி முடித்த அதிகாரிமீது ஆச்சரியப் பார்வை ஒன்றை வீசினான். ஆனாலும் குறும்பாகக் கூறினான்: "நாட்டின் பொருளாதாரம் பற்றி கேட்டிருந்தால் இப்படி விலாவாரியாக விவரித்திருப்பீர்களா?" அதிகாரி சங்கடத்தில் நெளிந்தார்.

வெளிநாட்டு விவகாரத்திற்குள் தாவியது.

**"வெளிநாடுகளில் எமது நாட்டை இழிவுபடுத்தும் பிரசாரங்கள் நடந்து வருகின்றன. எதிரிகள் சதி செய்கிறார்கள். இத்தகைய பிரசாரங்களுக்கு நாங்கள் தக்க பதில் கொடுக்க வேண்டும். இங்கு மேடையில் அமர்ந்திருக்கும் செல்வி பிரின்சஸ் எலிசபெத் பகாயா மிகுந்த புத்திசாலி. துடிப்பானவர். சுறுசுறுப்பானவர்,"** என்று புகழத் தொடங்க, அனைவரும் பகாயாவையே பார்த்தனர்.

மேடையில் வெளிநாட்டமைச்சரும், அமீனுடன் முரண்டு பிடித்தவருமான மைக்கேல் ஒண்டேகாவும் அமர்ந்திருந்தார்.



வெளிநாட்டமைச்சரான தன்னை மட்டம் தட்டவே பகாயாவை அமீன் புகழ்கிறான் என்று நினைத்த மைக்கேல் ஒண்டேகா தன் முகத்தில் எந்தப் பிரதிபலிப்பையும் காண்பிக்காது அமர்ந்திருந்தார்.

அவரே எதிர்பார்க்காத செய்தியை அடுத்துக் கூறினான் அமீன். அவர் மட்டுமல்ல சபையே அச் செய்தியை எதிர்பார்க்கவில்லை.

**"உங்களுக்கெல்லாம் ஒரு மகிழ்ச்சியான செய்தி சொல்லப்போகிறேன். இன்றுமுதல் வெளிநாட்டமைச்சராக செல்வி பிறின்சஸ் எலிசபெத் பகாயா நியமிக்கப்படுகிறார்!"**

அமீன் கூறியதும் சட்டென்று ஒரு அமைதி நிலவியது. அந்த அமைதி அமீனுக்குப் பிடிக்காது என்பதை உணர்ந்த அமைச்சர்கள் சிலர் கரகோஷம் செய்ய, சபை முழுவதும் கரகோஷம் செய்தது.

கடைக்கண்ணால் மைக்கேல் ஒண்டேகாவை கவனித்தான் அமீன். அதிர்ச்சியையும், அவமானத்தையும் மறைத்தபடி அவரும் கரகோஷம் செய்து கொண்டிருந்தார். சிரிக்க முயன்று கொண்டிருந்தார்.

அவரைவிட அதிர்ந்து போனது பகாயா தான். தன்னை வீழ்த்த பலமான வலை ஒன்றை அமீன் வீசியிருக்கிறான் என்பதை ஊகிப்பதில் எந்த சிரமமும் இருக்கவில்லை.

பகாயாவின் முகத்தில் மகிழ்ச்சி மலரவில்லை என்பதையும் அமீன் அவதானிக்கத் தவறவில்லை.



அடுத்து அமீனிடம் இருந்து பிறந்தது ஆணை: "திறமைசாலிகளை நாம் ஊக்கப்படுத்த வேண்டாமா? அப்பெண்கணை நான் கூறியதாக அழைத்து மேடையில் அமரச் செய்யுங்கள்!"

அதிகாரி சென்று பிறின்சஸ் எலிசபெத் பகாயாவிடம் அமீனின் ஆணையைக் கூறினார்.

யார் கண்ணில் படக்கூடாது என்று பயந்து கொண்டிருந்தாளோ, 'அந்த அமீன் கண்ணில் பட்டுவிட்டோமே' என்று பகாயா கவலைப்பட்டாள்.

அன்றுகூட பட்டமளிப்பு விழாவுக்கு வருவதைத் தவிர்க்கவே விரும்பினாள். முக்கிய அதிகாரி விடுமுறையில் சென்று விட்டதால்தான் அவள் வரவேண்டியிருந்தது.

அதிபரே அழைக்கும்போது செல்லாமல் இருப்பது முறையல்ல என்பதால் மேடைக்குச் சென்று அமர்ந்தாள்.

அமைச்சர்கள் அமர்ந்திருந்த வரிசையிலேயே அவளுக்கும் இடம் ஒதுக்கப்பட்டது. எல்லோர் பார்வையும் அவளை வருடின.

பெண்-அதுவும் அழகான பெண்-அமைச்சர்கள் விழிகள் ஆசையில் விரிந்தன.

அவள் சங்கடத்தோடுதான் மேடையில் அமர்ந்திருந்தாள். அமீனின் பார்வை தன் மீதுபட்டுவிட்டதால் அடுத்து என்னாகுமோ- எப்படியான சங்கடங்களை எதிர்கொள்ள நேருமோ என்ற கவலை அவள் மனதைப் பிசைந்து கொண்டிருந்தது.

அமீன் உரையாற்றும் நேரம் வந்தது. அதுவரை அடிக்கடி பகாயாவை பார்த்துக் கொண்டிருந்தான்.

**'இப்படி ஒரு அழகி என் பார்வையில் படாமல் எப்படித் தப்பித்தாள்- இத்தனை நாளும்?'** என்று நினைத்தான்.

ஒரே பார்வையில் தன் மனதை ஆக்கிரமித்துவிட்ட அவளது பேரழகு அவனை அடர்த்தியான ஆச்சரியத்துள் அமிழ்த்தியது.

தனது உரையை ஆரம்பித்த அமீன் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் ஏதேதோ பேசினான். திடீரென்று அவன் பேச்சு

கூட்டம் முடிய இருந்த தறுவாயில், தன் மெய்காப்பாளர் ஒருவரை தன் அருகே அழைத்த அமீன், அவனது காதருகே கூறினான்: **"மைக்கேல் ஒண்டேகா இங்கிருந்து வீடு திரும்பக்கூடாது. ஹசனிடம் கூறிவிடு!"** அமீனின் மெய்காப்பாளர்களுக்கு பொறுப்பானவன் ஹசன்.

கூட்டம் முடிந்த பின்னர் அமைச்சர்கள் அனைவரும் அமீனிடம் விடை பெற்றுக் கொண்டிருந்தனர்.

மைக்கேல் ஒண்டேகாவின் முறை வந்தது. அவரது கையைப் பற்றிக் குலுக்கிய அமீன்: **"கவலைப்படாதீர்கள். உங்களுக்கு இதைவிட உயர்ந்த பதவி ஒன்றைத் தருவதற்காகத்தான் இந்த மாற்றம்!"** என்றான். முதுகில் தட்டிக் கொடுத்தான்.

பகாயாதான் கடைசியாக வந்தாள். "புதிய அமைச்சரே வருக. எப்போது பதவிப் பிரமாணம் செய்யப் போகிறீர்கள்? என் காரில் போய்க்கொண்டே பேசலாமா?" என்றான்.

பகாயாவின் அருகாமை அவனை மிகவும் பாதித்தது- இம்சித்தது. அவளது குத்திட்டு நின்ற முன்னழகுகள் அவனை பிரேமை கொள்ளச் செய்தன.

**"வேண்டாம், என்னிடமே கார் இருக்கிறது. நான் நாளைக் காலையில் தங்களைச் சந்திக்கிறேன்!"** என்று பணிவோடு கூறினாலும், அவள் பதிலில் எச்சரிக்கை உணர்ச்சியே தெரிந்தது.

**'எத்தனை நாளுக்குத்தான் நழுவுவாய் என் கோழிக்குஞ்சே'** என்று தன் மனதுக்குள் நினைத்தவனின் உதடுகளில் புன்னகை அரும்பியது.

**"காலைதான் நல்லது. பார்க்கலாம். வாழ்த்துக்கள்!"** என்று கூறி அனுப்பிவைத்தான்.

மைக்கேல் ஒண்டேகாவின் வாகனத்தைப் பின்தொடர்ந்த அமீனின் ஆட்களால், அதனை வழி மறிக்க இயலவில்லை. மின்னல் வேகத்தில் அவரது கார் சென்றுவிட்டது.

தான் பின்தொடரப்பட்டதை ஒண்டேகா அறியவில்லை. தன்னை அவமானப்படுத்திவிட்டதால், அமீனுக்கு தன் மேல் இருந்த சீற்றம் தணிந்திருக்கும் என்று கருதினார்.

அத்தகைய நினைப்பால் சுதந்திரமாக உலாவத் தொடங்கினார்.

தனது மகளுக்கு 'பீஸ்' என்று பெயர் வைத்திருந்தார். சமாதானத்தைக் குறிக்க வைத்த பெயர் அது.

தனது மகளை கல்லூரிக்கு அழைத்துச் சென்றார். அவரை நிழலாகத் தொடர்ந்த ஹசனின் கார் அவரது காரை முந்திச் சென்று, அரச ஆய்வு நிறுவனம் இருந்த கட்டடம் அருகே வழிமறித்து நின்றது.

ஹசனின் வண்டியில் இருந்து திமுதிமுவென்று நான்கு பேர் குதித்தனர். ஹசனோடு சேர்த்து ஐந்துபேர்.

ஒண்டேகா சுதாகரிப்பதற்குள் காருக்குள் இருந்து இழுத்து வீசப்பட்டார். மகள் காருக்குள் இருந்து அழுதுகொண்டிருக்க, அவள் கன்னத்தில் பளார் பளார் என்று ஒருவன் அறைந்தான்.

ஒண்டேகா தெருவில் வைத்து தாக்கப்பட்டார். "எமது நாட்டு இரகசியங்களை வெளிநாடுகளுக்கு விற்ற துரோகி!" என்று உரத்துக் கூறியவாறே அவரைத் தாக்கினார்கள்.

பாடசாலைப் பிள்ளைகளும், பொதுமக்களும் அக்காட்சியை தமது கண்களால் கண்டனர்.

முன்பு இரகசியமாக நடத்திய படுகொலைத் தாக்குதல்களை பகிரங்கமாகவே நடத்தத் தொடங்கினர்.

"ஒரு சில படுகொலைகளை **தெருவில்** செய்துகாட்டினால்தான் மக்களிடம் பயம் இருக்கும். எவரும் எதிர்க்கத் துணியமாட்டார்கள்!" என்று கூறியிருந்தான் அமீன்.

குற்றுயிராகக் கிடந்த ஒண்டேகாவை தமது வாகனத்தில் தூக்கிப்போட்டுக் கொண்டு விரைந்தனர்.

**தருவது — ரசிகன்**

சித்திரவதை முகாமில் அவரைச் சந்தித்தான் அமீன்.

**"இந்த அமீன் கொடுத்த வாக்கை மீற மாட்டான். உயர்ந்த பதவி எப்படி இருக்கிறது? என் ஆட்கள் செய்த கௌரவம் போதுமா?"** என்று கேட்டுச் சிரித்தான். ஒண்டேகா வலியில் முனகினார்.

**"நான் சொன்னபடி கேட்டு நடந்தால் இங்கேயே சொர்க்கத்தில் இருக்கலாம். மறுத்தால் நரகம்தான்!"** என்றவன் ஹசனிடம் கூறினான்: **"இவர் மிக உயர்ந்த பதவியில் இருந்தவர் என்பதால், இவரது உடலை ஹெலிக்கொப்டரில் எடுத்துச் சென்று வானில் இருந்து நைல் நதியில் வீசிவிடுங்கள். அது தான் உயர்ந்த மரியாதை!"**

அமீன் கூறியபடியே நடந்தது. ஆனால் பிணம் மிதந்து கரையைத் தொட்டது.

அதற்கு முன்னரே உகண்டா வானொலி பின்வருமாறு அறிவித்திருந்தது:

"முன்னாள் வெளிநாட்டமைச்சர் ஒண்டேகாவை இனம் தெரியாத கும்பல் ஒன்று தாக்கியிருக்கிறது. தாக்கியவர்கள் அரச ஆதரவாளர்களாக இருந்தாலும் கைது செய்யப்பட வேண்டும்!" என்று அதிபர் கட்டளையிட்டுள்ளார்.

வெளிநாட்டமைச்சர் எமது நாட்டு இரகசியங்களை விலை பேசினார் என்ற தகவல் அரசுக்கும் கிட்டியிருந்தது. அதனை தீர ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டே பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் இவ்வாறு அவசரப்பட்டு அவரைத் தாக்கியதை அதிபர் கண்டிக்கிறார்.

அமீனைச் சந்திக்கப் புறப்பட்டாள் பகாயா.

**(இடி தொடரும்)**

# தொடர்ந்து எரிகிறது



**'ப**யர்' படம் பற்றிய சர்ச்சை இன்னமும் ஓய்ந்த பாடாக இல்லை. படத்தின் பெயர் போலவே அதுபற்றிய சர்ச்சையும் தணியாமல் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது.

மும்பாயிலும், புதுடில்லியிலும் 'ஃபயர்' திரைப்படத்திற்கு எதிர்ப்பும், ஆதரவும் என்ற இரு முகாம்கள் உருவாகி விட்டன. கல்லூரி மாணவிகள் முன்னின்று ஆதரிக்கின்றனர்.

இந்தியாவின் பல பாகங்களில் தொடர்ந்து அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓடிக்கொண்டிருக்கிறது. பெண்கள் கூட்டம் அதிகமாக இருப்பதுதான் ஆச்சரியம்.

இந்தியப் பண்பாட்டுக்கு இழுக்கு ஏற்படுத்துகிறது 'ஃபயர்' என்ற குற்றச்சாட்டை மறுத்து பெண்கள் அமைப்பினர் போர்க் கொடி உயர்த்தியுள்ளனர்.

பெண், வீட்டு வேலைகளை செய்ய வந்த, மனைவி என்கின்ற சமூக அந்தஸ்துப் போர்வை போர்த்தப்பட்ட இயந்திரம். கவுரவம் மிக்க வீட்டு வேலைக்காரி.

ஆண்கள் தங்கள் மனைவிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, யாரோடும், எத்தனை பெண்களோடும் கூடிக்களித்து குதியாட்டம் போடலாம். அதைப் பற்றி ஏன் என்று கேட்க உரிமையில்லாதவளே மனைவி.

இப்படிப்பட்ட ஆணாதிக்க சமுதாயத்தின் கோரக்கால்களில் மிதிபட்டு இதன் கொடூரங்களை எவளொருத்தி முகம் சுளிக்காமல் ஏற்கிறாளோ அவளே பத்தினி. அவளே நமது கலாசாரத்தின் பெருமைக்குரிய சின்னம்.

இந்த காட்டுமிராண்டித் தனத்திற்கு எதிராக, காலம் காலமாய் எழுப்பப்பட்டு வரும் எதிர்ப்புக்களின் இன்னொரு வெளிப்பாடே ஃபயர்.

கணவன்மார்களால் தாம்பத்ய சுகம் மறுக்கப்பட்ட இரு பெண்கள் தங்களுக்குள் அன்பு கொள்ளுகிறார்கள். இது லெஸ்பியனிசத்தை நியாயப்படுத்தும் படமல்ல. அதற்கான சூழல்கள் ஏன் எழுகின்றன என்பதைக் கூறும் படம். இதற்கு ஏன் இப்படி சர்ச்சை கிளப்புகிறார்கள்? என்று பெண்கள் அமைப்புக்கள் குரல் கொடுத்து வருகின்றன.

பெண் ஒருவரே இதனை இயக்கியுள்ளார். பெண்கள் கூட்டம் கூட்டமாக சென்று பார்க்கிறார்கள். தணிக்கைக் குழுவும் அனுமதித்துள்ளது. சிவசேனை இயக்கம் தனது அரசியலுக்காக இப்படி குறுக்கே நிற்கிறது என்ற பத்திரிகைகளும் எழுதியுள்ளன.

ஷப்னா ஆஸ்மியும், நந்திதாவும் முத்தமிடுவது உட்பட நெருக்கமான காட்சிகள் ஆபாசம் இன்றியே படமாக்கப்பட்டுள்ளன. அதனால் தணிக்கை செய்யும் அவசியம் ஏற்படவில்லை என்று கூறியுள்ளது தணிக்கைக் குழு.

அமெரிக்க சிக்காக்கோவிலும், கனடாவிலும் திரைப்பட விழாக்களில் விருதுகள் பெற்ற படம். உலகெங்கும் திரையிடப்பட்ட படம். சொந்த நாட்டில் மட்டும் முட்டுக்கட்டைகளைச் சந்திக்கிறது என்று சலித்துக் கொள்கிறார் இயக்குநர்.

# தாய்லாந்தில் ஒரு விழா



**எ**ந்த நம்பிக்கையும் அளவுக்கு மீறிப் போனால் மோசம் தான்.

நம்நாட்டில் திருவிழாக்களில் முகத்திலும், உடலிலும் அலகு குத்துவார்கள். அதுவே இம்சையான காரியம்தான்.

தாய்லாந்து நாட்டில் பக்தி என்ற போர்வையில் கொடூரமான முறையில் அலகு குத்துகிறார்கள்.

சமீபத்தில் அங்கு நடந்த பக்தி ஊர்வலம் ஒன்றில் பக்தர் ஒருவர் ரி.வி. ஆண்டெனாவை தன்முகத்தில் அலகு குத்திக்கொண்டு, காண்போரை மயக்கம் போட வைத்தார். வேறு பலர் மரக்கிளைகளையும், டியூப் லைட்டுக்களையும் குத்தியபடி சென்றனர்.

தாய்லாந்தில் புகெட் என்ற பகுதியில் உள்ள கிறிஸ்தவர்கள் மத்தியிலேயே இப்பழக்கம் இருக்கிறது. ஆண்டுக்கு ஒருமுறை இந்த கொடூரவிழா நடக்கிறது.

டாக்டர்கள் உதவியுடன் அலகு குத்த விரும்புவர்களது தாடையில் துளை போடப்படும். இரத்தம் கொட்டும். பக்தர் பொறுத்துக் கொள்வார்.

சிலர் ஒரு பக்கத் தாடையில் குத்திக் கொள்வார்கள். வேறு சிலர் இருபக்கத் தாடையிலும் குத்திக்கொள்வர்.

இந்த விழாவை சிலர் எதிர்த்தாலும் ஆண்டுதோறும் நடக்கவே செய்கிறது.

# 73ம் 28ம்



**ஜெ**மினி கணேசனுக்கு போட்டியாக ஹொலிவூட் நடிகர் ஒருவர் களத்தில் பொத்தென்று குதித்திருக்கிறார்.

அவரது பெயர் டோனிகர்ட்டிஸ். ஒரு காலத்தில் ஹொலிவூட் சினிமா உலகை கலக்கியவர். அவரை நினைத்து உருகியவர்கள் பலர்.

இந்த முன்னாள் காதல் மன்னருக்கு இப்போது 73வயது. இவருக்கும் கிங் வோண்டன் என்னும் அழகிக்கும் இடையே காதல் மலர்ந்தது. மொத்தம் ஐந்து ஆண்டுகள் சிரத்தையாக காதலித்தனர்.

சமீபத்தில்தான் திருமணம் கோலாகலமாக நடந்தது. அழகிக்கு வயது 28. டோனியை 23 வயதில் இருந்தே லவ்வியிருக்கிறார்.

தேன்நிலவை அனுபவிக்க சுவிற்ஸர்லாந்து, பாரிஸ், இலண்டன் என்று சுற்றுவதற்கு கிளம்பி விட்டது ஜோடி.

கையில் திகட்டத் திகட்ட பணம். தேன் நிலவு கசக்குமா என்ன!

# ஜோக்கர் சிங்



ஜோகீந்தர்

இந்தியாவின் மத்திய புலனாய்வுத் துறை (சிபிஐ) பொறுப்பதிகாரியாக இருந்த[illegible] ஜோகீந்தர் சிங். இப்போது 'இன்சைட் சி.பி.ஐ' என்ற பெயரில் ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார்.

புத்தகம் விரைவில் வெளிவரப்போகிறது. அதற்கு முன்னரே புத்தகம் பற்றிய சர்ச்சைகள் வெடித்துக் கிளம்பியுள்ளன.

முன்னாள் பிரதமர் குஜ்ராலை கடுமையாக விமர்சித்துள்ளாராம். பயங்கரமான தந்திரக்காரர். குள்ளநரியையும் தோற்கடிப்பவர் என்று விபரித்திருக்கிறாராம். ஊழல் பேர்வழியான அரசியல்வாதி ஒருவருக்காக குஜ்ரால் சிபாரிசு செய்ததாகவும் ஜோகீந்தர் சிங் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் ஜெயலலிதாவை பழிவாங்க அன்றைய மத்திய அமைச்சரான பாலசுப்பிரமணியம் ஆர்வமாக இருந்தார் என்றும் சிங் கூறியிருக்கிறார். இதனால் எரிச்சலுற்ற தமிழக முதல்வர் கலைஞர், "ஜோகீந்தர் சிங் ஜோக்கர் சிங்காகி"விட்டதாக ஒரு போடு போட்டிருக்கிறார்.

இது ஒரு புறமிருக்க புத்தகத்தில் மேலும் என்னவெல்லாம் இருக்குமோ என்று முன்னாள் மத்திய அமைச்சர்கள் பலர் கிலி கொண்டுள்ளனர்.

www.padippakam.com

# அதிசயம் அதிசயம்



← இங்கிலாந்தில் ஈஸ்ட் ஹாம் என்ற இடத்தில் ஷேக்ஸ்பியர் வளைவில் வசிக்கும் ஒரு முஸ்லிம் குடும்பத்தில் ஓர் அதிசயம் நிகழ்ந்துள்ளது.

இல்லத்தரசியான ஜபீன்டயர் காய்கறிகளை அன்றையச் சமயலுக்காக நறுக்கிக் கொண்டிருந்தார். ஒரு காயை இரண்டாக வெட்டியபோது இரு பகுதிகளையும் தற்செயலாக நோட்டமிட்டார். என்னே ஆச்சரியம். தன் கண்களையே அவரால் நம்பமுடியவில்லை. அவற்றினுள் விதைகள் அமைக்கப்பட்டிருந்த ஒழுங்குமுறை, 'அல்லாஹ்' என்ற அரபு எழுத்துக்களைக் குறிப்பதாக அமைந்திருந்தன.

இக்காயின் துண்டுகளை அப்படியே உப்பு நீரினுள் வைத்து ஜபீன் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறார். ஜபீனின் உறவினர்களும் அயலவர்களும் திரண்டு வந்து 'அல்லாவின் அற்புதச் செயல்' என்று வர்ணித்துச் செல்லுகின்றனர்.


பூவுக்குள் ஒளிந்திருந்திருக்கும் கனிக்கூட்டம் அதிசயம். அதைவிட அதிசயம், இந்த காய்க்குள் இருந்திருக்கிறது!

(தகவலும் படமும் ஹரீரா அனஸ்- இலண்டன்.)

## எலிமான்

↓ அந்தமானைப் பாருங்கள் அழகு என்று பார்த்ததும் கூறமுடியாத மான்கள் இவை. ஆமாம், கூர்ந்து பார்த்தால்தான் இவை கண்களுக்குத் தெரியும்.

மான்களில் பல ரகங்கள் உள்ளன. அவற்றில் மிகச் சிறிய அபூர்வ மான்கள் இவை. 'எலிமான்' என்று அழைக்கப்படுகிறது. உருவம் சிறிதானாலும் வெகு அழகானது.



தென் ஆபிரிக்கக் காடுகளில் மிக அபூர்வமாகக் காணப்படும் இந்த மானினம் மிக வேகமாக அழிந்து வருகின்றன. சிறிய தோற்றமுடையவையாக இருப்பதால் சற்றுப் பெரிய மிருகங்கள் இவற்றைப் பிடித்துச் சாப்பிட்டு விடுகின்றன. எலியைப் பூனை பிடித்துக் குற்றுயிராக்கி வைத்து விளையாடுவதுபோல் இந்த மான்களையும் சில மிருகங்கள் பிடித்து வைத்து, அவை துடிப்பதைப் பார்த்து இரசித்து மகிழ்கின்றன. இதனால் இவை பெரும்பாலும் வெளியே தலை காட்டாமல் புதர்களில் பதுங்கிக்கொண்டிருக்கின்றன.

படத்தில் காணப்படும் மான்கள் இரண்டில் முன்னே நிற்பது பெண், பின்புறமாக நின்று தலையை உயர்த்திப் பார்ப்பது ஆண். இதில் வேடிக்கை என்னவென்றால் இவை இப்படம் பிடிக்கப்பட்ட அதேதினத்தில்தான் கணவன்-மனைவியாக ஒன்று சேர்ந்துள்ளன. இவர்கள் ஒருவரை ஒருவர் கண்டதும் காதல் கொண்டு தம்பதியாகிவிட்டனர். இனிமேல் இவர்கள் வாழ் நாளில் ஒருவரை ஒருவர் பிரியமாட்டார்கள். இந்த மான் இனத்தின் தாம்பத்திய உறுதி விலங்கியல் ஆய்வாளர்களுக்குப் பெரும் வியப்பை அளிக்கிறது.



## பெரும் சிறகு

இது சாதாரண பறவையல்ல. சாகசப் பறவை. இதன் பெயர்: 'அல்பட்றொஸ்'. வான்வெளியை அனாயாசமாகத் தாவி மிதந்து செல்லும் இந்தப் பறவை, தனது இறக்கைகளை அசைக்காமலேயே அந்தரத்தில் பலமணி நேரம் நிலையாக மிதக்கக்கூடியது. இன்றுள்ள பறவை இனங்களில் மிகவும் அகலமான இறக்கைகளை இப்பறவை கொண்டுள்ளது.

தஸ்மேனியாக் கடலருகில் 1965 செப்டம்பரில் காணப்பட்ட அல்பட்ரோஸ் பறவையின் சிறகுகள்தான் இன்றுவரை மிகவும் அகலமானவை என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதன் இறக்கை 3.63 மீட்டர் (11 அடி 11 அங்குலம்) அகலம் கொண்டதாக இருந்தது. இது உலக சாதனை.

## என்ன பார்வை இந்தப் பார்வை?



↙ மாறு வேடம் போட்டுக் கொண்டு நம்மிடம் வந்து வேடிக்கை காட்டிச் சிரிப்பதுபோல் தெரிகிறதல்லவா? போணியோ, சுமத்ரா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில் காணப்படும் 'டார்சியர்' என்ற பிராணிதான் இது.

சிரிப்பது போல் தோற்றமளித்த போதிலும் இது தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் யாரோ குறுக்கிடுகிறார்களே என்ற கோபத்தில் பார்க்கும் பார்வைதான் இது.

இப்பிராணியின் உடலின் நீளம் ஆக 16 சென்டிமீட்டர் (6 1/2 அங்குலம்) மட்டும்தான். ஆனால் வால் 27 சென்டிமீட்டர். (10 1/2 அங்குலம்) கண்கள் மிகப் பெரியவை. இதன் கழுத்து கனவேகமாக 180 பாகைவரை திரும்பக்கூடியது. ஆபிரிக்காவில் சகாராப் பாலைவனத்தை ஒட்டிய காடுகளிலும் 'டார்சியர்' போன்ற சிறு பிராணிகள் காணப்படுகின்றன. இவற்றை 'பற்றைக் குழந்தைகள்' என்று கூறுகிறார்கள்.

உலகிலேயே பெரிய கண் கொண்ட சிறிய பிராணி இதுதான். அதனால் உலக சாதனைப் பிராணியாக பதிவாகியுள்ளது. கண்களைப் பார்க்கவே பயமாக உள்ளதல்லவா!



## சாதனை ஏற்றம்

→ எமது நாட்டில் காணப்படுவதுபோன்ற சாதாரண தென்னை மரம்தான் இதுவும். தென்னையில் தேங்காய் பறிக்கவோகள் இறக்கவோ இவர் ஏறுகிறார் என்று நினைக்காதீர்கள். தேங்காய் பறிக்கவல்ல போட்டி ஒன்றில் வெற்றிக் கனி பறிக்கவே இவர் ஏறுகிறார்.

ஃபிஜித் தீவில் வருடாவருடம் தென்னை மரத்தில் அதிவேகமாக ஏறுவோருக்கான போட்டி நடைபெற்று வருகிறது. இத்தகைய போட்டிகள் இப்போது தென்னை மரங்கள் பயிராகும் பல நாடுகளிலும் நடைபெற ஆரம்பித்துள்ளன.

ஃபிஜியில் சுகானா பூங்காவில் அண்மையில் நடைபெற்ற தென்னை ஏறும் போட்டியில் முதலாவதாக வந்தவர்- ஃபெளட்டை சொலோ என்பவராவார்.

போட்டிக்காகத் தெரிவு செய்யப்பட்ட மரத்தின் நிர்ணயிக்கப்பட்ட உயரம் 9 மீட்டர் (29 அடி 6 அங்குலம்) இந்த உயரத்தினை- வெறுங்காலுடன்- 4.88 நொடிகளில் சொலோ ஏறிச்சாதனை புரிந்தார். இதற்காக அவர் பெற்ற பரிசு 1000 டொலர்.

ஃபெளட்டை சொலோ இம்முறையுடன் மூன்றாவது தடவையாக தொடர்ந்து வெற்றியீட்டியுள்ளார். உலகிலேயே அதிவேகமாக மரமேறும் உலக சாதனையாளராக இவரது பெயர் பதிவாகியுள்ளது.

இந்த சாதனை படைக்க பல மாதங்கள் கடும்பயிற்சி செய்தாராம். பலமுறை விழுந்து அடிபட்டாராம். முயற்சி திருவினையாகியுள்ளது.

## இராணுவ இலக்கு இதுதானா?



← கடந்த ஆண்டின் இறுதியில் டிசம்பர் 16-17 ம் திகதிகளில் ஈராக்கின் வான் வெளியில் அத்துமீறிய அமெரிக்க, பிரிட்டன் விமானங்கள் நடத்திய தாக்குதலில் நாசமான குடியிருப்புக்கள். இதன் உள்ளேயிருந்த பெண்களும், சிறுவர்களும் உட்பட பல மனித உயிர்கள் பலியாகின.

குடிமனைகள்மீது குண்டை வீசிவிட்டு, ஈராக்கின் இராணுவ இலக்குகளை துல்லியமாக தாக்கியதாக அமெரிக்கா கொடூரமாக புன்னகைத்து உலகை ஏமாற்றியது.

குடிமனைகள் மீது குண்டுகளை வீசினால், மக்கள் அஞ்சி, பணிந்துவிடுவர், சதாமை வெறுப்பர் என்று அமெரிக்கா போட்ட கணக்கு தப்புக் கணக்காகி விட்டது. இந்த குண்டுவீச்சுக்களுக்கு அமெரிக்காவும், பிரிட்டனும் ஒரு நாள் பதில் சொல்லியேயாக வேண்டும். விலை கொடுத்தேயாக வேண்டும்!



படிப்பகம்

www.padippakam.com

# சத்யராஜ் - பிரபு நட்புக்காக மணிவண்ணன்

சத்யராஜ்-பிரபு இருவரும் இணைந்து நடித்த 'சின்னத்தம்பி பெரியதம்பி', 'பாலைவன ரோஜாக்கள்' இரண்டும் பெரு வெற்றி கண்ட படங்கள். சிவசக்தி மட்டும் சுமாராகத்தான் ஓடியது.

'சின்னத்தம்பி பெரியதம்பி' 'பாலைவன ரோஜாக்கள்' இரண்டும் மணிவண்ணன் இயக்கிய படங்கள். பிரபுவின் மார்க்கெட்டை மறுபடி நிமிரவைத்ததும் மேற்படி படங்கள்தான்.

தற்போது சத்யராஜ், பிரபு இருவருக்கும் நிலமை சரியில்லை. மறுபடி கைகொடுக்கப் போகிறார் மணிவண்ணன்.

சத்யராஜ், பிரபு நடிக்கும் படம் ஒன்றை இயக்கப்போகிறார். நீண்டகாலமாக படம் இயக்குவதைவிட்டு ஒதுங்கியிருந்த மணிவண்ணன் தன் நண்பர் சத்யராஜுக்காக மறுபடி இயக்கப் போகிறார்.

படம் இயக்குவதைவிட நகைச்சுவை நடிகராகவே நிறைய சம்பாதிக்க வசதி இருந்தும், நட்புக்காக இயக்க முன் வந்துள்ளார்.

# அஜித் ஜோடி ஷாலினி

பேபிஷாலினி காதலுக்கு மரியாதை படத்தில் குமாரி ஷாலினியானார். அதன் பின்னர் மலையாளப் படங்கள் சிலவற்றில் நடித்தார். தமிழில் வாய்ப்புக்கள் கிடைத்தும் மறுத்தார். கதை பிடித்தால் மட்டுமே நடிப்பேன். சதை காட்டமாட்டேன் என்று பல நிபந்தனைகளை அடுக்கினார்.

இப்போது அஜித்குமாருடன் தமிழ்ப் படம் ஒன்றில் நடிக்க முன்வந்திருக்கிறார்.

அஜித்குமார் நடித்த 'காதல் மன்னன்' படத்தை இயக்கிய சரண் இப் படத்தை இயக்கவுள்ளார்.

படத்திற்கு 'அமர்க்களம்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.
பாடல்கள்: வைரமுத்து.
இசை:
பரத்வராஜ்.

# தத்துவ ரஜினி

தனது படங்களில் தத்துவப் பாடல் ஒன்றை இடம்பெறச் செய்வது ரஜினி பாணி. 'படையப்பா' படத்திலும் தத்துவப் பாடல் இருக்கிறது.

சித்தர்பாடல்களில் இருந்து ரஜினியே ஒரு பாடலை தெரிவு செய்தாராம். இதற்காக சித்தர் பாடல்களை ஒருவாரமாக சிரத்தையாகப் படித்துப் பார்த்தாராம் ரஜினி.

இறுதியாக தெரிவு செய்த பாடலுடன் வைரமுத்துவின் வரிகளையும் சேர்த்துள்ளாராம். இப் பாடல் படத்தில் கலக்கல் நடத்தும் என்கிறது படையப்பா வட்டாரம்.

# மினி சினி

பிரகாஷ்ராஜை ... படத்தை இயக்கி... இயக்கும் பட... கதாநாயகன்...

மம்முட்டி- ... நடித்து ... என்ற ம... தமிழில் ...

'மகாசி... லுக்கு... என்... தற்... ந...



பிரியா ராமன்-கார்த்திக்-ரோஜா
படம்: சின்ன ராஜா



ப்ரீத்தி ஸிந்தா

# பரணியில் சங்கீதா

நக்மாவை 'மாயா' படத்தில் புரட்டி எடுத்திருக்கிறார் நெப்போலியன். காட்சிகள் அந்தமாதிரி இருக்கிறதாம்.

அடுத்து நெப்போலியன் இணைவது சங்கீதாவுடன். படத்தின் பெயர்: பரணி.

பானுசந்தர், மனோரமா, தலைவாசல் விஜய், பாண்டியன், ராஜஸ்ரீ, அபிநயா ஆகியோர் நடிக்கின்றனர்.

இயக்கம்: கணேசராஜ்.
இசை: இளையராஜா. ஒளிப்பதிவு ராஜ்பரித்.

திரையுலக மறுபக்கம் 86
தமிழ்நாட்டிலிருந்து மயன்

# தயாரிப்பாளரை பழிவாங்கிய நடிகை

## மத்திய புலனாய்வுத்துறை விசாரணை

நல்ல தயாரிப்பாளர்கள் கிடைக்காமல் அலையும் இயக்குநர்கள் சில தந்திரங்களை கையாளுகின்றனர். தங்களிடம் சான்ஸ் கேட்டு வரும் நடிகையை தயாரிப்பாளரிடம் அனுப்பிவைப்பார்கள்.

தயாரிப்பாளர்களை குறிப்பிட்ட நடிகை கவனிப்பதைப் பொறுத்து இயக்குநருக்கும் படம் இயக்க வாய்ப்புக் கிடைக்கும்.

மூன்றெழுத்து இயக்குநர் ஒருவர் கால் அழகால் பிரபலமான நடிகையை வைத்து காரியம் சாதித்ததும் அப்படித்தான்.

அந்தத் தயாரிப்பாளரைப் பார்த்தால் சபலப்பேர்வழி என்று சொல்லமாட்டார்கள். நெற்றியில் திருநீற்றுப் பட்டையுடன்தான் காட்சி தருவார்.

ஆனால் பயங்கரமான ஜொள்ளுப் பேர்வழி. அவரது தயாரிப்பில் பிரமாண்டமான படம் எடுக்க நினைத்த இயக்குநர் கால் அழகியான நடிகையை நாடினார். அப்போது கால் அழகி தமிழில் நன்றாக கால் ஊன்றாத நேரம்.

குறிப்பிட்ட இயக்குநரும் நடிகையின் கால் அழகைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்தான். தயாரிப்பாளரும் ஆராய்ச்சி நடத்த விரும்பினால், ஒத்துழைக்குமாறு கூறி நடிகையை அனுப்பிவைத்தார் இயக்குநர்.

வேறு வழியின்றி நடிகையும் சம்மதித்தார். பார்வைக்கு பூனைபோல இருந்த அந்த தயாரிப்பாளர் நடிகையை படுத்திய பாடு கொஞ்ச நஞ்சமல்ல. நொந்து நூலாகித்தான் மீண்டார் நடிகை.

தயாரிப்பாளருக்கு பரமதிருப்தி. இயக்குநருக்கு வாய்ப்புக் கொடுப்பார் என்றுதான் நடிகை எதிர்பார்த்தார். ஆனால் தயாரிப்பாளரோ 'நடிகை போதிய ஒத்துழைப்பு தரவில்லை' என்று கூறி இயக்குநருக்கு வணக்கம் சொல்லிவிட்டார்.

### பெட்டியோடு

அந்த நேரத்தில் முன்னணியில் இருந்த இரண்டெழுத்து நடிகையின் பெயரைக்கூறி, அவரை தன்னிடம் அறிமுகம் செய்யுமாறு கேட்டார் தயாரிப்பாளர். அப்போது பிரபல நாயகனின் கட்டுப்பாட்டில் இருந்தார் அந்த இரண்டெழுத்து நடிகை. அதனால் அவரிடம் தயாரிப்பாளரின் விருப்பத்தைக் கூறினால் உதைதான் விழும் என்பதால் இயக்குநர் ஒதுங்கிக் கொண்டார்.

பின்னர் கால் அழகி பிரபலமாகி, ரசிகர்களின் கனவுக் கன்னியானார்.

அதே தயாரிப்பாளர் பெட்டி நிறைய பணத்தோடு நடிகையைத் தேடிப் போனார். தனது படம் ஒன்றில் நடிக்க அழைத்தார். முற்பணத்தை வாங்கிய நடிகை படத்தில் நடிக்காமல் இழுத்தடித்தார்.

'என்னம்மா இப்படி பண்ணுறே?' என்று தயாரிப்பாளர் நியாயம் கேட்டார்.

வீட்டுக்கு வருமாறு அழைத்தார் நடிகை. தயாரிப்பாளரும் விரைந்து போனார்.

முன்னைய சம்பவத்தை நினைவூட்டிய நடிகை, "அதற்கு நீ சம்பளம் தரவில்லை. அந்த இயக்குநரையும் ஏமாற்றினாய். இது நீதந்த சம்பளமாக இருக்கட்டும். இதைப் பற்றி வெளியே சொன்னால் உன் சுயரூபம்தான் தெரியவரும். எனக்கு வி.ஐ.பி.கள் எத்தனைபேரைத் தெரியும் என்பது உனக்கே தெரியும்!" என்று மிரட்டி அனுப்பினார்.

இப்படிச் செய்ததை குறிப்பிட்ட தயாரிப்பாளரிடம் தன்னை அனுப்பிய இயக்குநரிடமும் கூறி மகிழ்ந்தார் நடிகை. அந்த இயக்குநர் பேச்சுவாக்கில் தன் துணை இயக்குநர்களுக்கு கூற இவ் விவகாரம் வெளியே கசிந்தது.

### வி.ஐ.பி.கள்

இந்தியப் பிரதமராக நரசிம்மராவ் இருந்தபோது அவரது மகன் ஒருவரும், அன்றைய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவின் பேரனும் அடிக்கடி சென்னை செல்வார்கள்.

இவர்கள் இருவரும் தமிழ் நடிகைகள் சிலருடன் உல்லாசமாக இருந்ததுடன், குறிப்பிட்ட நடிகைகளை தங்களிடம் அனுப்பியவர்களின் சட்டமீறல் சமாச்சாரங்களுக்கு ஒத்துழைத்தும் உள்ளனராம்.

இத்தகவல்கள் தொடர்பாக இந்திய மத்தியப் புலனாய்வுத்துறை நடிகைகள் நக்மா, பானுப்பிரியா, சுகன்யா, ரேகா ஆகிய நடிகைகளிடம் விசாரணை நடத்த இருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் மூலமாக சுகன்யாவும், முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் மூலமாக பானுப்பிரியாவும் குறிப்பிட்ட வி.ஐ.பி.களுக்கு அறிமுகமானார்களாம்.

குறிப்பிட்ட வி.ஐ.பி.கள் நடிகைகளுடன் உல்லாசமாக இருந்தது மூலம் சாதிக்கப்பட்ட நிழலான காரியங்கள் எவை என்பது பற்றியே புலனாய்வுத்துறை ஆராய உள்ளதாம்.

# ரம்பா வந்தார் விஜய் போனார்

'என்றென்றும் காதல்' படத்தில் ஒரு காட்சியை மறுபடி எடுக்க ரம்பாவை அழைத்தார்கள். மும்பையில் இருந்து விமானத்தில் வந்தார் ரம்பா.

ஆனால் விஜய் தன் சங்கீதாவை பார்க்க இலண்டனுக்கு சென்றுவிட்டார். வேறு வழியின்றி குறிப்பிட்ட காட்சியை மறுபடி எடுக்காமல், பொங்கலுக்கு படத்தை வெளியிட முடிவு செய்தனராம்.

சங்கீதாவுடன்தான் பொங்கலைப் பகிர்ந்து கொள்ளப்போகிறார் விஜய். பொங்கலோ பொங்கல்.


படிப்பகம்

www.padippakam.com

சினி ஹிட்

...த்து 'குரு பார்வை'
...மனோஜ்குமார் அடுத்து
...லும் பிரகாஷ்ராஜ்தான்

...மாகன்லால் இணைந்து
...றிபெற்ற 'ஹரிகிருஷ்ணாஸ்'
...யாளப்படம் அதே பெயரில்
...மொழிமாற்றப்பட்டு வருகிறது.

...ன்' படத்தில் பாண்டியராஜ
...ஜோடியாக கஜோல் சக்கரவர்த்தி
...மும்பாய் நடிகை நடிக்கவிருந்தார்.
...ாது இவரை நீக்கிவிட்டு வினிதாவை
...க ஒப்பந்தம் செய்துள்ளனர்.

...படத்தில் 'A' என்ற பெயரில் பட
...மொன்று வெளியாகி வெற்றிபெற்றதைத்
...தொடர்ந்து, இப்போது அங்கு 'Z' என்ற
...பெயரில் புதிய படமொன்று தயாராகி
...வருகிறது.

...எஸ்.ஏ. சந்திரசேகர் இயக்கும்
'பெரியண்ணா' படத்தில் விஜயகாந்த்திற்கு
ஜோடியாக குஷ்பு நடிப்பதாக இருந்தது.
இப்போது அந்த வேடத்தில் ரோஜா
நடிக்கிறார்.

◎ 'கண்ணெதிரே தோன்றினாள்' வெற்றிப் படத்தை இயக்கிய ரவிச்சந்திரன் அடுத்து 'மஜ்னு' என்ற படத்தை இயக்கவுள்ளார். இதிலும் பிரசாந்த் தான் ஹீரோ.

◎ பிரபுதேவாவை வைத்து 'ஹலோ', முரளியை வைத்து 'தாய்மை' போன்ற படங்களை இயக்க விருந்த செல்வபாரதி அவற்றை விட்டு, கார்த்திக் நடிக்கும் படமொன்றை இயக்குகிறார்.

◎ பார்த்திபன் இயக்கி நடிக்கும் 'ஹவுஸ்ஃபுல்' படத்தில் நாயகியாக நடிக்கும் சுவலட்சுமி முதன் முதலாக சொந்தக்குரலில் பேசி நடிக்கிறார்.

◎ 'பாரதி கண்ணம்மா', 'மறுமலர்ச்சி', 'புதுமைப்பித்தன்' ஆகிய படங்களைத் தயாரித்த ஹென்றி விரைவில் படம் ஒன்றை இயக்கப்போகிறார்.

◎ முரளி-சுவாதி ஜோடியாக நடித்து பாதியில் நின்றுபோன 'கண்டக்டர் மாப்ளே' படத்தின் படப்பிடிப்புக்கள் மீண்டும் தொடங்கியுள்ளன.

## மும்பாய் நடிகை சரத்தின் ஜோடி

'பாட்ஷா' உட்பட பல வெற்றிப்படங்களை கட்டுத்தந்தவர் இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணா. அவரது இயக்கத்தில் சரத்குமார் நடிக்கவுள்ள படம் 'ஒருவன்'.

சரத் ஜோடியாக நடிக்க இருப்பவர் இந்தி நடிகை பூஜாபத்ரா. நக்மாவுக்கு போட்டியாக இன்னொரு மும்பாய் ஜோடியை பிடித்து விட்டார் சரத்குமார்.

ரகுவரன், மணிவண்ணன், வடிவேலு, விவேக், டெல்லி கணேஷ், மாஸ்டர் விக்னேஷ் ஆகியோரும் நடிக்கின்றனர். வசனம் ஜே.டி. பாபு. இசை: தேவா.



அருண்பாண்டியன்-பவித்ரா லோகேஷ்
படம்: புலனாய்வுத் துறை





கஷ்மிதா சென்

## காதோடு சொல்லுகிறோம்!

பாபு கணேஷ் என்றொரு நடிகர் படங்களுக்கு அடிக்கடி பூஜை போடுவார். நடிகைகளோடு கடற்கரையோர நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் கும்மாள மடிப்பார். பின்னர் தயாரிப்பாளரை மாற்றி புதிய தயாரிப்பாளரை நாடுவார். இப்படியே பத்து படங்களுக்கு மேல் பூஜை போடப்பட்ட நிலையில் கிடக்கிறதாம்.

மூவேந்தர்களில் ஒருவரது பெயர் கொண்ட அந்த இயக்குநரின் படம் தோல்வி கண்டுவிட்டது. அவரது வெற்றிப்படம் இரண்டிலும் நாயகியாக நடித்தவர் இரண்டெழுத்து நடிகை. அந்த நடிகையுடன் நெருக்கமாக இருந்தார் இயக்குநர். மூன்றாவது படத்தில் அந்த நடிகையை கழற்றிவிட்டதால், இயக்குநருக்கும் நடிகைக்கும் இடையே உறவு முறிந்துவிட்டது. 'பொற்கால' தங்கை நடிகையுடன் நெருக்கமாகி விட்டாராம் இயக்குநர். அந்த தங்கை நடிகைக்கு சமீபத்திய தோல்விப் படத்திலும் முக்கிய பாத்திரம் கொடுத்திருந்தார் இயக்குநர்.

மூன்றெழுத்து 'ஸ்ரீ' நடிகை அடிக்கடி வெளிநாடுகளுக்கு செல்கிறாராம். சமீபத்தில் மலேசியா சென்று வந்தார். விரைவில் அவுஸ்திரேலியாவுக்கு செல்லப் போகிறார். பகையான நண்பர் ஒருவருடன் ஜாலியான பயணமாம். இவருக்கு அடிக்கடி வெளிநாட்டு விசா கிடைப்பது எப்படி? என்று ஏனைய நடிகைகள் ஆச்சரியப்படுகிறார்களாம்.

இரண்டெழுத்து 'பூ' நடிகைக்கு மறுபடி வாய்ப்புக் கிடைக்க என்ன காரணம் என்று 'தேவநாயகி' ஆராய்ந்தாராம். காரணம் இரண்டு: தன் ஒன்று; 'கார்' நடிகரின் சிபாரிசு. காரணம் இரண்டு: தன் சம்பளத்தை மூன்றில் இரண்டாக குறைத்திருக்கிறார்.

மூன்றெழுத்து பூ நடிகையும் சுந்தர இயக்குநரும் மறுபடி ஒட்டிக் கொண்டனராம். நடிகர் ஒருவர்தான் சமரசம் செய்து வைத்தாராம். விரைவில் திருமணம் என்று மறுபடி பழைய பல்லவி பாடுகிறார்கள்.

முகப்பில்
ஷாருக்கான்
ரோஜா

## கமல் — மீனா

மருதநாயகத்தை இடைநிறுத்திய கமல் நகைச்சுவை கலந்து படம் நடிக்கப்போவது நாம் முன்பே கூறிய செய்தி.

இப்படத்தில் கமலின் நாயகியாக மீனா நடிக்கலாம் என்று கூறப்படுகிறது. படப்பிடிப்பை இலண்டனில் நடத்த கமல் விரும்புகிறாராம்.

மருதநாயகத்தில் தனக்கு வாய்ப்புத் தரவில்லை என்று மீனா கமலிடம் உருகி வருந்தினாராம். அக்குறையைப் போக்க புதிய படத்தில் மீனாவுக்கு வாய்ப்புக் கொடுக்கப்போகிறாரோ?

## ஏப்ரல் 14 வரை

'படையப்பா' மூலம் தமிழ்பட ரசிகர்களின் இதயங்களை நோக்கி படையெடுத்து கைப்பற்றப்போகிறாராம் ரம்யா கிருஷ்ணன்.

ஏப்ரல் 14ம் திகதிவரை எந்தப் புதுப்படத்திலும் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்று கூறிவிட்டார். அது என்ன ஏப்ரல் 14? அன்றுதான் படையப்பா வெளியாகிறது.

புதுப்படம் ஒப்புக் கொள்ளாதது இருக்கட்டும், கார்த்திக்குடன் நடித்த 'அத்தை மகன்' பாதியில் நிற்கிறது. திரும்பியே பார்க்க மறுக்கிறாராம் ரம்யா.

## அனுபவம்

சென்னை 'தேவி'யில் தலைமுறை படம் பார்த்தனராம் செல்வமணியும், ரோஜாவும். ஒரு காட்சியில் ரோஜா அழுதேவிட்டாராம்.

அது என்ன காட்சி? ராஜ்கிரணும் ரேவதியும் சந்தர்ப்ப சூழ்நிலையால் பிரிந்து ஒன்று சேரும் காட்சியாம் அது.

அனுபவ பூர்வமான காட்சி என்பதால் அழுகை தானாக வந்துவிட்டதாம்.



பிரபு தேவா-ரம்பா

## ஷாருக்கானுக்கு பிடித்த தமிழ்ப்பட நடிகை

'உயிரே' படத்தின் நாயகன் ஷாருக்கானுக்கு நம்நாட்டிலும் ஏகப்பட்ட ரசிகைகள். 'உயிரே' படத்தின் முன்னரே அவரது இந்திப் படங்களைப் பார்த்து ரசித்து சொக்கியவர்களும் இருக்கின்றனர்.

ஷாருக்கானும் சில நடிகைகளைப் பார்த்து சொக்கிப் போயிருக்கிறார். சொக்கியதோடு நிறுத்திக்கொண்டாரா, அல்லது கொக்கியும் போட்டாரா என்பது தெரியவில்லை.

ஷாருக்கான் தமிழில் சொக்கியது ரோஜாவிடம். அதனை அவரே கூறுகிறார்.

"தமிழ் நடிகைகளில், அதாவது தற்போது உள்ள நடிகைகளில் ரோஜாவை எனக்குப் பிடிக்கும். அவரது உதடுகளில் 'செக்ஸி லுக்' இருக்கிறது. பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல ஒரு கவர்ச்சி" என்கிறார்.

"நடிகைகளில் யாரையாவது காதலித்திருக்கிறீர்களா?" என்ற கேள்விக்கு; "ஏன் ரோஜாவைக் கூடத்தான் காதலிக்கிறேன். அழகான மலர்களையும், அழகான பெண்களையும் காதலிக்க கசக்குமா என்ன? ஆனால் தப்பான எண்ணமெல்லாம் கிடையாது. வெறும் ரசனையோடு சரி" என்கிறார் ஷாருக். நம்பலாமா?!

## விஜய் ஜோடியாக ப்ரீத்தி ஸிந்தா

'உயிரே' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடித்தவர் ப்ரீத்தி ஸிந்தா. இயக்குநர் மணிரத்னத்தின் நெஞ்சத்தை கிள்ளியவர் என்றும் பேசப்பட்டவர்.

மும்பாய் நடிகையான ப்ரீத்தி ஸிந்தா விஜய் ஜோடியாக இரண்டு படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

ஜெயந்த் இயக்கத்தில் 'நேசிக்கிறோம்' படத்தில் விஜய் ஜோடியாக நடிக்கிறார். ரோஜா கம்பைன்ஸ் பட நிறுவனம் இப்படத்தை தயாரிக்கிறது.

இந்தியில் வெற்றிகரமாக ஓடிய படம் 'பியார்கி தோ ஜோனாகி தா'. இப்படத்தை பிரபல தயாரிப்பாளர் துவாரகீஷ் தயாரிக்கிறார். இன்னமும் தமிழில் பெயரிடப்படவில்லை.

இப்படத்திலும் விஜய் ஜோடியாக ப்ரீத்தி ஸிந்தா நடிக்கிறார். இயக்குநர் உட்பட ஏனைய நடிகர், நடிகைகள், தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு நடந்து வருகிறது.

ப்ரீத்தி ஸிந்தா ராசியான நடிகைதான். விஜய்யுடன் நடிக்கும் இரண்டும் வெற்றிபெற்றால் இவர் காட்டில் மழைதான். இப்பக்கத்தில் பையோடு நிற்கிறார் ப்ரீத்தி ஸிந்தா. முன்னணி நடிகையானால் பணம் வைக்க இந்தப் பை எந்த மூலைக்கு?!



படிப்பகம்

www.padippakam.com

## விடிவெள்ளி

எங்களது வானத்து விடிவெள்ளி
காலிக்காதென்று எவர் சொன்னது...?
கூப்பிடு இங்கே!

அதோ பார், தெரிகிறது...!
பார்ப்பதற்கு முன் ஒரு நிமிடம்...!
இதன் விலையென்ன...
அதாவது தெரியுமா?

பேராண்மையுடன் வாழ்ந்த ஓரினம்
பெருமைகளை, உடைமைகளை,
ஈட்டிய பொருட்களை
கட்டிய வீடுகளை, களனிகளை,
கன்று கறவைகளை நின்ற
நெடும்பனைகளை,
வானத்தை, வாழ்வியலை,
நிறைதந்த பெண்நிறைமையை
தார்மீகத்தை, கல்வியை,
பாரம்பரியத்தை மட்டுமா விலை
கொடுத்தது
என்கிறாய்?

அதற்கும் மேலாய்–
கைகளை, கால்களை,
தலையை, உயிரை,
ஒன்று இரண்டென்று
கணக்கிலடக்க, கணக்கல்ல,
உணர்வுப் பூக்கள்.
உள்ளுயிர்த்த உயிர் வேட்கை
ஆகுதியின் தீச்சுடராய்
அகில மெங்கணும் அகிற்
புகையாயெழுந்த
விடுதலை வேள்வியின்
விலை மதிப்பில்லா குருதிப்புனல்!

விலை வைத்து வியம்பிலேன்– நீ
தலை வைத்துச் சாயும் பூமியில்
தட்டினாற் சிவப்பில்லாப்பொட்டுநிலம்
கிட்டுவதற்கில்லை அதுதான்
விலை என்பேன்!

அத்தனையும் மண்ணின் மக்கள்
அவளுக்களித்திட்ட இரத்தப் பலிகள்..!
இப்போது பார்– எங்களது விடிவெள்ளி
காலித்துவிட்ட எங்களது வானத்தை!

ஜெ.சூரியன்-வெள்ளவத்தை.

## என் வாலிபம் நகரும் கடிகாரமுள்...?

என் வாலிபம்
நகரும் கடிகாரமுள்!
oo
அவள் விலாசத்தில்
வாழ்கிறேன்;
ஆனால்
அவளில்லை இங்கு!
oo
அவள் நினைவுகளை
ஒவ்வொரு நிமிசமும்
என் மனது
பத்திரப்படுத்திக் கொள்கிறது.
oo
அன்று வார்த்தைகளை அடுக்கி
'வாழ்தல்'பற்றிச் சொன்னவள்
இன்று
இப்படியும் வாழலாமென...
oo
என் வாலிபம்
நகரும் கடிகாரமுள்!
oo
போதுமம்மா
தனிமையின் விஷமத்தனம்!
oo
என் வீட்டு 'போகன் விலா'
அவள் நினைவுகளை
இப்போதும் ஞாபகமூட்டுகிறது!
oo
இருள் நிலவை எதிர்பார்ப்பது
போல்
என்னுயிர் மரணத்தை
தேடுகின்றது மடிவதற்கு!
oo
மின்சாரத்தை
மிச்சப்படுத்துவதற்கு
கடிகாரத்தின் முள்ளை
நகர்த்தியவர்கள்,
சில ஆண்டுகளை பின்நோக்கி
திருப்ப மாட்டார்களா என
ஏங்குகின்றேன்!
oo
என் வாலிபம்
நகரும் கடிகாரமுள்!

தாரகைதௌபீக்-
அக்கரைப்பற்று.

## நோன்பே! நோன்பே!

நமது ஆத்மாக்கள்
வழிதவறிய தேசத்தில்
நேர்வழியின்
உபதேசத்தோடு வந்த
மாண்புமிகு நோன்பே!
இரட்சிப்புக்காக வேண்டி
உன்னுள்ளே பிரவேசிக்கிறோம்;
நிரந்தரமாக
நீ எங்களைச்
சாத்தானிடமிருந்து காப்பாற்று!
–o–
உனது வருகைக்காகத் திறந்த
வான மண்டலத்தின்
அருள் வாசலில் நின்று
உலகுக்கு அமைதியைக்கொடு!
உனைச் சங்கைப்படுத்தக்கூறும்
வான தூதரின் போதனையைச்
செயல்படுத்தும் பக்குவத்தை
எமக்குத் தந்தருள்!
–o–
ஒவ்வொரு ஆண்டும்
ஒளிக்கீற்றோடு உருவெடுத்து
ஒளிக்கீற்றோடு
விடைபெறுகிறாய்!
உன் வரவின் சாட்சியாக
எதனை நீ
எங்களிடம் விட்டுச் செல்கிறாய்?
–o–
சமூகத்தை நாசமாக்கும்
நோய்பிடித்த ஆத்மாக்களை
இம் முறையாவது– நீ
சுட்டுப் பொசுக்கு!
உலகுக்கு
அமைதியை வரவிடாமல் தடுக்கும்
அதிகார பீடங்களை
உனது அருளினால்
மாற்றியமை!
–o–
கல்லான நெஞ்சங்களுக்குக்
கருணையையும்
திக்கற்ற மனங்களுக்குத்
திசைகளையும்
உன் வரவினால்
காட்டிக் கொடு!
–o–
எமது தவங்களையெல்லாம்
உனக்கே காணிக்கையாக்கி
நெஞ்சுருகக் கேட்கிறோம்...
உலகுக்கு அமைதியைக்கொடு!
அனைவர் வாழ்விலும்
அது மட்டுமே
விளக்கேற்றி வைக்கும்!

பஹீமா ஜஹான்,
தெமடகொல்ல, மெல்சிறிபுர.

## பேச்சுவார்த்தை

பேச்சுவரணும் என்ற
பேச்சு வரும்!
பின்னர் அதைச்சொல்லி
ஓர் ஆட்சிவரும்!
ஆட்சி வந்ததும்
ஆயுதம் பேசிடும்!
பேசிடும் வார்த்தைக்கும்
பூட்டுக்கள் தந்திடும்!


உரும்பராய் சிவன்சுதன்.

## தேன் கிண்ணம்

## அந்தநாள் ஞாபகம்



மக்கள் திகலம் எம்.ஜி. ஆரின் பிறந்தநாள் ஜனவரி 17. தொப்பி, கண்ணாடி, மேக்-அப் எதுவும் இல்லாவிட்டாலும் எம்.ஜி. ஆர். அழகர்தான். இளமை முதற்கொண்டு உடற்பயிற்சியும், தன்னம்பிக்கையுமே எம்.ஜி. ஆரின் அழகின் இரகசியம். இறுதிவரை தன் உடல் அழகை காப்பதில் கண்ணாயிருந்தவர் எம்.ஜி. ஆர்.





எம்.ஜி. ஆரும், ஜானகியும் 'மருதநாட்டு இளவரசி' படத்தில் ஜோடியாக நடித்தனர். பின்னர் வாழ்க்கையிலும் ஜோடியாகினர்.
எம்.ஜி.அரின் மூன்றாவது மனைவி ஜானகி. இவரும் மரணமாகிவிட்டார்.

## இருவர்

சவுதி அரேபியாவில் கடந்த டிசம்பர் மாத நடுப்பகுதியில் ஓர் அபூர்வமான சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. றியாட் நகரிலுள்ள மன்னர் :.பஹ்ட் தேசிய மருத்துவமனையிலுள்ள மருத்துவர்குழுவினர்– டாக்டர் அப்துல்லா அப்துலஸிஸ் அல்-றபீயாஹ் தலைமையில் தொடர்ந்து 18 மணிநேரம் இந்த சத்திர சிகிச்சையைச் செய்து முடித்துள்ளனர்.

சவுதியின் தென்மேற்கேயுள்ள ஒரு சிறு நகரில்-அல்லீத் மருத்துவமனையில் 1997 நவம்பர் 13ம் திகதியன்று இரட்டைக் குழந்தைகள் இடையோடு ஒட்டிப் பிறந்தன.


இவற்றின் கால்கள் இரண்டு மட்டுமே தனித்தனியாக அமைந்து காணப்பட்டன. மூன்றாவது காலும் நாலாவது காலும் ஒன்றுடன் மற்றொன்று ஒட்டியிருந்தன.

மிகவும் சிரமத்தின் மத்தியில் இரு குழந்தைகளும் வெட்டிப்பிரிக்கப்பட்டன.

பாலியலுறுப்புகளும் சத்திரசிகிச்சை மூலமே உருவாக்கப்பட்டுள்ளன.

நவீன உலகிலேயே இத்தகைய சத்திரசிகிச்சை மிக மிக அரிதானதாகக் கருதப்படுகிறது.

மருத்துவமனை அறிக்கையின்படி இரு குழந்தைகளும் பூரண ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வருவதாகத் தெரிகிறது.



ஒட்டிப்பிறந்த நிலையில் எடுக்கப்பட்ட படம்



வெட்டிப்பிரிக்க டாக்டர்கள் போராட்டம்

முரசு வாசகர்களுக்காக இப்படங்களை ஜித்தாவிலுள்ள 'முரசு' வாசகர் எஸ்.எல்.எம். றஷீட் அனுப்பிவைத்துள்ளார்.





வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டபின்னர் இரு குழந்தைகளும் தனித்தனியாக



அதிசயிக்கத்தக்க சத்திரசிகிச்சையை நடத்திமுடிக்க உதவிய நவீன கருவிகள் அடங்கிய மருத்துவமனை



படிப்பகம்

www.padippakam.com

## பள்ளிப் பருவ உணவு



பள்ளிக்கூடம் செல்லும் பிராயத்திலிருந்து வெண்ணெய், பச்சைக் காய்கறிகள், கீரைவகைகள், பழங்கள், கோதுமைப் பதார்த்தங்கள் ஆகியவற்றை பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும். அத்துடன் கணிசமான அளவில் இரண்டு வேளை பசும்பால் கொடுத்து வரவேண்டும்.

இளமைப் பருவத்தில் கொடுக்கும் நல்லுணவே உடலுக்கு உறுதியாக அமைகிறது. "இது சத்துள்ள உணவு ஆகையால் சாப்பிட வேண்டும்!" என்று வற்புறுத்திக் கொடுக்காமல், சத்துள்ள உணவை விரும்பி உண்ணும் வகையில் ருசிகரமாகத் தயாரித்துக் கொடுக்க வேண்டும்.

உணவு வேளைகள் குறிப்பிட்ட நேரங்களிலேயே அமைத்தல் வேண்டும். குழந்தை பசித்துப் புசிக்க வேண்டும். அதற்கு, உணவு வேளைகளுக்கிடையே கண்டதை உண்ணும் கெட்டபழக்கம் உண்டாகாமல் பெற்றோர் கவனிக்கவேண்டும்.

சாப்பிட முன்னும், சாப்பிட்ட பின்னும் கைகளை நன்கு கழுவிக்கொள்ளுதல், வாயை நன்கு கொப்பளித்தல், பற்களைத் துலக்குதல், தெருவில் இலையான் மொய்க்கும் பண்டங்களை வாங்கித் தின்பதைத் தவிர்த்தல் போன்ற நற்பழக்கங்களை குழந்தைகளுக்குப் பெற்றோர் கற்பிக்க வேண்டும்.

குழந்தைகள் அவசரமின்றி நிதானமாக உணவு உட்கொள்ளும் பழக்கத்தைப் பெறுதல் வேண்டும். வெகு விரைவில் உணவை அள்ளிப் போட்டுக்கொண்டு பாடசாலைக்கோ, விளையாடவோ ஓடவிடக்கூடாது. நிதானமாக உணவருந்தியப்பின் சற்று நேரமேனும் ஓய்வெடுத்துக் கொள்ளச் செய்தல் நல்லது.

உண்ட உணவு நற்பயனை அளிக்க, நல்ல காற்றோட்டம் உள்ள துப்புரவான இடத்தில் தன்னையொத்த குழந்தைகளுடன் மாலைதோறும் ஓடியாடி விளையாடிக் குழந்தை உடற்பயிற்சி பெறுதல் வேண்டும்.

மேற்கூறிய யாவற்றிற்கும் மேலாக வளரும் சிறுவர் சிறுமியர்க்கு மகிழ்ச்சியுடன் கூடிய மனநிறைவு பெரிதும் தேவை. இவை குழந்தைகட்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

## எடையும் இரத்தமும்

உடலின் எடை அதிகரிக்க அதிகரிக்க அதிக இரத்தம் தேவைப்படும். இதனால் அதிக அளவுக்கு இரத்தத்தை இதயம் பம்ப் செய்ய வேண்டியிருக்கும். அது தனது செயலை இழக்கும் நிலை ஏற்படும்.

எப்போதும் ஓய்விலிருப்பவர்களுக்கு நாளொன்றுக்கு சராசரியாக இரண்டாயிரம் கிலோ கலோரி சத்துள்ள உணவு போதும். அலுவலகங்களில் பணியாற்றுவோருக்கு 2700 கலோரியும், கடுமையாக உழைப்பவர்களுக்கு 3200 கலோரியும் தேவைப்படும்.

உடல் பருமன் உள்ளவர்கள் அசைவ உணவுக்கு அதிகம் ஆசைப்படக்கூடாது. முட்டையில் உள்ள மஞ்சட்கருவைத் தொடவே கூடாது. உடல் எடை இயல்பான அளவுக்கு சற்று அதிகமாக உள்ளவர்கள்கூட மஞ்சட்கருவைத் தவிர்ப்பது நல்லது.

ஆனால் மீன் சாப்பிடலாம். மீனின் 'ஒமேகா- 3' எனும் கொழுப்புத் திரவத்தில் ஃபற்றி அசிட் என்ற இரசாயனப் பொருள் உள்ளது. இது உடலில் கொழுப்புச் சத்தின் அளவைக் கட்டுப்படுத்தும்.

## தங்கமாலைப் பரிசுப்போட்டி அதிஷ்டசாலிகள்

முரசு–அம்மன் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கிய தங்கமாலைப் பரிசுப் போட்டியில் முதல் மூன்று பரிசுகளா, தங்கமாலை, தங்க மோதிரம், சமையல் அடுப்பு போன்றவற்றை பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரங்களை அறிய ஆவலாக இருப்பீர்கள்.

**அந்த சூப்பர் அதிஷ்டசாலிகளின் விபரங்கள் இறுதியில் அறிவிக்கப்படும்.**

ஆறுதல் பரிசுபெறும் 50 அதிஷ்டசாலிகளில் 10 பேரின் பெயர் விபரம் பின்வருமாறு:

1. ஆர். யோகேஸ்வரி
   71/ஏ, பழைய வீதி, பலாங்கொட.
2. கவிதா சண்முகம்பிள்ளை
   6ம் வட்டாரம்,
   சாம்பல்தீவு, திருமலை.
3. சுலைஹா உம்மா
   P.O.Box-390 - CODE NO-93354
   SULBIYA, KUWAIT.
4. டி. வினோதா
   9/5, மகாபெரிய தென்ன,
   திகன, ரஜவெல்ல.
5. ராஜேஸ்வரி ரெங்கசாமி
   புகையிரத திணைக்களம்,
   பாதை பிரிவு, வவுனியா.
6. கே. இந்திரா
   காளிகோயில் வீதி, பாண்டிருப்பு, கல்முனை.
7. எம்.ஐ. அஸ்காபானு
   அல்ஹம்ரா மாதிரிக் கிராமம்
   பள்ளிவாசல் துறை, புத்தளம்.
8. எஸ். கணேஸ்வரி
   21/4, ரோசரி லேன்,
   குடாப்பாடு, நீர்கொழும்பு.
9. ஏ. ஹர்ஷானா
   88/10, சோமாதேவி பிளேஸ், கொழும்பு-5.
10. இ. உசிதா
    684, விநாயகபுரம், துணுக்காய்.

*ஏனைய அதிஷ்டசாலிகளின் விபரங்கள் அடுத்த வாரம் வெளியாகும்*

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FB

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 23-01-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## கண்ணீரில் கரைந்த இரவுகள்

**70**

புவனா

இளவரசர் சாள்சும், கமீலாவும் புரோட்லண்ட்ஸ் தோட்டத்தில் உல்லாசமாக இருந்தனர்.

டயானாவின் விவாகரத்துக்கு மறுநாளே கமீலாவுடன் கிளம்பிப் போய்விட்டார் சாள்ஸ்.

இந்த விடயத்தை பத்திரிகைகள் சில மோப்பம் பிடித்துவிட்டன. அதனையடுத்து ருசிகரமான பல தகவல்களை வெளியிட்டன.

புரோட்லண்ட்ஸ் தோட்டம் மிகவும் பிரமாண்டமானது. பூங்கா, நீச்சல் தடாகம் போன்றவற்றைக் கொண்டது.

திருமணத்தின் முன்னர் சாள்ஸ் இளைஞராக இருந்தபோது நோஞ்சானாக இருந்தார்.

யாரைக் கண்டாலும் வெட்கப்பட்டு ஒதுங்கி நிற்பார்.

இதனைக் கவனித்த மாமனார் மவுண்ட்பேட்டன் பிரபு தனது தோட்டமான புரோட்லண்ட்ஸ் சுக்கு சாள்ஸை அழைப்பார்.

தன் மருமகனை ஆண்மையுள்ள இளைஞனாக மாற்றுவதற்கு மவுண்ட்பேட்டன் செய்த முயற்சிகள் சுவாரசியமானவை.

பல பெண்களுடன் தொடர்புஇருந்ததை கண்ட இளவரசி ஆன் அவரை உதறி விட்டார்.

பெண்கள் விஷயத்தில் துளியும் நம்பமுடியாதவரான பார்க்கர் கமீலாவை மணந்துகொண்டார். அதன் பின்னரும் பல பெண்களுடன் கூடிக்குலாவினார்.

இளவரசி ஆன் தவிர வேறு சில அரச குடும்ப பெண்களுக்கும் பார்க்கரின் தயவு தேவைப்பட்டது. தங்கள் வேட்கையைத் தணிக்க அவரை பயன்படுத்திக் கொண்டனர்.



இளவரசி டயானாமீதும் பார்க்கருக்கு ஒரு கண் இருந்தது. அவரை ஒருமுறையாவது முத்தமிட வேண்டும் என்று தன் நண்பர்களிடம் பார்க்கர் மதுபோதையில் உளறியும் இருக்கிறார்.

இறுதிவரை டயானாவின் அபிமானத்தை அவரால் பெறமுடியவில்லை. தன் எதிரியான கமீலாவின் கணவர் என்பதால் அவரையும் டயானா வெறுத்தார்.

சின் உள்ளத்தில் அடிக்கடி எழுந்து அலைக்கழித்தன.

இப்போது மறுபடி கமீலாவுடன் மவுண்ட்பேட்டனின் தோட்டத்துக்குச் சென்றிருக்கிறார் சாள்ஸ்.

அங்கு டயானா ஞாபகம் வந்து கமீலாவை வெறுப்பேற்றமாட்டார் என்று நம்பலாம் என்று பத்திரிகைகள் கிண்டல் செய்திருந்தன.



மவுண்ட்பேட்டனுடன் சாள்ஸ்

## தோட்டத்தில் சாள்ஸ்–கமீலா

இளம் அழகிகள் தோட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள். அவர்கள் நீச்சல் குளத்தில் அரைகுறை ஆடைகளுடன் குளிப்பதை சாள்ஸ் பார்க்கும்படி செய்வார் மாமனார்.

அழகிகளுடன் பழகினால் தனது மருமகன் வெட்கக்குணத்துக்கு விடை கொடுத்து விட்டு, ஆண்மையுள்ளவராக மாறி விடுவார், என்று எதிர்பார்த்தார் மவுண்ட்பேட்டன்.

ஆனால் சாள்சுக்கு அந்த இளம் அழகிகளில் ஈர்ப்பு ஏற்படவில்லை. அழகிகளில் சிலர் சாள்ஸை உரசிப் பார்த்தும் அவருக்கு ஈடுபாடு வரவில்லை.

தனது மருமகனிடம் ஆண்மைக்குறைவு ஏதாவது இருக்குமோ என்றும் மவுண்ட்பேட்டன் கவலைப்பட்டார்.

இவ்வாறு இளம் அழகிகளைப் புறக்கணித்த சாள்ஸ், கமீலாவைக் கண்டதும் மாறிப் போனார் என்று பழைய சம்பவங்களை பத்திரிகைகள் ஆராய்ந்து வெளியிட்டன.

கமீலாவின் கணவரான பார்க்கர் பற்றிய தகவல் ஒன்றும் அத்தோடு வெளியானது.

எலிசபெத் மகாராணியின் மகளான ஆனுடன் அன்று பார்க்கர் நெருக்கமாக இருந்தார்.

பிரிட்டிஷ் குதிரைப் படையில் உயர் பதவி வகித்த அன்று பார்க்கர்மீது அரச குடும்பத்து பெண்களுக்கு கிறக்கம் இருந்தது.

### பயன்படுத்தினர்

இளவரசி ஆனுடன் நெருக்கமாக இருந்த அன்று பார்க்கர், அவரையே திருமணம் செய்யப்போவதாக பேச்சு இருந்தது.

அன்று பார்க்கருக்கு தன்னைத்தவிர

கமீலாவுக்கும் சாள்சுக்கும் இடையேயான உறவை அறிந்திருந்தும், பார்க்கர் அதனை அனுமதித்துக் கொண்டிருந்ததும் அவர்மீது டயானாவுக்கு வெறுப்பு வளரக் காரணமாயிற்று.

கமீலாவுக்கு 18 வயதாக இருக்கும்போதே பார்க்கருடன் தொடர்பு ஏற்பட்டது. பார்க்கருக்கு கமீலாவைவிட ஒன்பது வயது அதிகம்.

திருமணத்தின் முன்னரே கமீலாவுடன் கட்டிலைப் பகிர்ந்து கொண்டார் பார்க்கர். அதனால் திருமணத்தின் பின்னர் அவர்களுக்குள் புதிய அனுபவங்களுக்கு இடமிருக்கவில்லை.

இருவரும் ஒருவரை ஒருவர் உடல் ரீதியாக முழுமையாக அறிந்திருந்தனர்.

பார்க்கரும் கமீலாவும் திருமணத்தின் பின்னர் இன்பம் துய்ப்பது குறைந்தது. அவர்களுக்கிடையே சலிப்பு ஏற்பட்டிருந்தது.

பார்க்கர் புதிய உறவுகளைத் தேடிக்கொண்டார். கமீலாவும் சாள்ஸை பிடித்துக் கொண்டார்.

மவுண்ட் பேட்டனின் தோட்டத்தில் கமீலாவும் சாள்சும் தமது காதலையும், காமத்தையும் பகிர்ந்து கொண்டனர்.

தனக்கு ஏற்றவள் கமீலாதான் என்று சாள்ஸ் அப்போதே கருதிவிட்டார். அப்போது சாள்சுக்கு 24 வயது.

டயானாவை மணந்த பின்னரும் கமீலாவின் நினைவிலேயே சாள்ஸ் இருந்தார். அதனால்தான் டயானாவுடன் தாம்பத்தியத்தில் முழு மனதோடு ஈடுபட இயலவில்லை.

டயானாவும் சாள்சும் மவுண்ட்பேட்டனின் தோட்டத்தில் தங்கள் தேனிலவை சிலநாட்கள் கழித்தனர்.

தான் மகிழ்ச்சியாக இருப்பதாக சாள்ஸ் காட்டிக் கொண்டாலும், அதே தோட்டத்தில் கமீலாவுடன் தான் கண்ட அனுபவங்கள் சாள்ஸின் உள்ளத்தில் அடிக்கடி எழுந்து அலைக்கழித்தன.

### பிளேயருடன் அறிமுகம்

தற்போது (1998) பிரிட்டிஷ் பிரதமராக இருக்கும் ரோனி பிளேயர் 1995ல் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்.



சாள்ஸ்–கமீலா

டயானாவின் சட்ட ஆலோசகர் மக்கிரேக்கு-பிளேயர் நெருங்கிய நண்பர்.

டயானாவை பிளேயருக்கு அறிமுகம் செய்து வைத்தார் மக்கிரே. அதன் பின்னர் பிளேயர் குடும்பத்துடன் டயானா நெருங்கிப் பழகினார். தனது புதல்வர்களுடன் பிளேயர் வீட்டுக்குச் சென்று வருவார். இரு குடும்பத்துப் பிள்ளைகளும் ஒன்றாக இணைந்து விளையாடுவார்கள்.

பிளேயரிடம் டயானா ஒருமுறை பின்வருமாறு கூறினார்: "இந்த நாட்டின் மனிதாபிமானத் தூதராக சேவை செய்ய விரும்புகிறேன். பத்திரிகைகளையும், தொலைக்காட்சி, வானொலி போன்ற சாதனங்களையும் மக்கள் சேவைக்கு பேராதரவு தரும் வகையில் திசை திருப்ப முடியும். கடந்த 15 வருடகால அனுபவம் இருக்கிறது. அதனைப் பயன்படுத்தி மக்கள் சேவை புரியும் ஆற்றலைப் பெற்றிருக்கிறேன்!" என்றார் டயானா.

தன்னால் முடிந்த உதவிகளைச் செய்வதாக பிளேயர் உறுதியளித்தார்.

(அடுத்த வாரமும் வரும்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**ஆரையம்பதி வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | **கே.எல். பர்ஸானா,** 184/A, பிரதான வீதி, காங்கேயனோடை13, ஆரையம்பதி. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

www.padippakam.com





அச்சமும் பேடி மையும்
அடிமைச்சிறு மதியும்
உச்சத்திற் கொண்டா ரடீ-கிளியே!
ஊமைச் சனங்க ளடீ!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# சிந்திக்க வைத்த சிறுவன்

விஜய நகரத்தின் மன்னர் கிருஷ்ணதேவராயர் சபையில் இருந்த. அநேக அறிஞர்களில் தெனாலிராமனும் ஒருவர்.

ஒருநாள் மன்னர் தெனாலி ராமனிடம்,

"நான் குழந்தைகளை மிகவும் நேசிக்கிறேன். அவை இனியவை!" என்று கூறினார்.



தெனாலிராமன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. "சில சமயங்களில் குழந்தைகள் மிகவும் தொந்தரவு தருவார்கள்!" என்று கூறினார்.

ஆனால் மன்னர் தம்மால் எந்தக் குழந்தையையும் சமாளிக்க முடியும் என்று கூறினார்.

மறுநாள் தெனாலிராமன் அரசவைக்குச் சற்றுத் தாமதமாக வந்தார்.

தான் வீட்டை விட்டுக் கிளம்பும்போது தனது சிறிய மகன் அழுததாகவும் அவனைச் சமாதானப்படுத்த முடியவில்லை; இருப்பினும் நேரமாகிவிடும் என்பதால் அவசரமாக வந்ததாகவும் கூறினார்.

இதைக்கேட்ட மன்னர்,

"ராமா! உன் மகனை இங்கே அழைத்துவா. நான் அவனைச் சமாதானப்படுத்தி, அவன் அழுகையை நிறுத்துகிறேன்!" என்றார்.

உடனே தெனாலிராமனும் வீட்டிற்குச் சென்று தனது இரண்டு வயது மகனை அழைத்துவந்தார்.

அவன் அழுதுகொண்டே வந்தான்.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று மன்னர் சிறுவனைப் பார்த்துக் கேட்டார்.

அவன் பானை ஒன்று தரும்படி கேட்டான். அவனுக்குப் பானை ஒன்றைக் கொடுக்கும்படி மன்னர் உத்தரவிட்டார்.

பானை அவனிடம் கொடுக்கப்பட்டதும், சிறுவன் மறுபடி அழ, "ஏன் அழுகிறாய்?" என்று மன்னர் கேட்டார்.

யானை ஒன்று வேண்டும் என்று கேட்டான் அவன். யானை ஒன்றைக் கொண்டுவரும்படி மன்னர் உத்தரவிட, யானையைக் கொண்டுவந்து சிறுவன் முன் நிறுத்தினார்கள்.


சிறுவன் மறுபடி அழ ஆரம்பித்தான். "ஏன் மறுபடி அழுகிறாய்? யானைதான் வந்துவிட்டதே?" என்று அவனைப் பார்த்துக் கேட்டார் மன்னர்.

"இந்த யானையை, இந்தப் பானைக்குள் போட வேண்டும்!" என்று கூறினான் சிறுவன். மன்னர் செய்வதறியாது திகைத்தார்.

பின் தெனாலிராமனைப் பார்த்து,

"ராமா! நீ மிகவும் கெட்டிக்காரன்தான். குழந்தைகள் சில சமயங்களில் மிகவும் தொந்தரவு தருவார்கள் என்பதை நிரூபித்து விட்டாய்!" என்று கூறி அவரைப் பாராட்டினார் மன்னர் கிருஷ்ணதேவராயர்.

# அதிசயம் - ஆனால் உண்மை!



↑ பெல்ஜியம் நாட்டின் அன்டவேர்ப் நகரத்திலுள்ள தேவாலயத்தின் முகப்பு 400 அடி உயரமானது. இந்த முகப்பில் ஏறி நின்று பார்த்தால், 124 வெவ்வேறு பகுதிகளிலுள்ள மணிக் கோபுரங்கள் தெரியும்.

→ கிழக்கு இந்தியாவில் உள்ள தூக்கணங் குருவி, தனது உடலில் சுரக்கும் கண்ணாடி போன்ற ஒருவகைத் திரவத்தைக் கொண்டு கூடு கட்டும். இக்கூடு ஒளி ஊடுருவும் கண்ணாடி போன்று பளபளப்பானது.



↓ லிஷன்டீன் என்ற மன்னருக்குச் சொந்தமான இந்தக் கோப்பை ஒரே ஒரு இரத்தினக் கல்லால் செதுக்கப்பட்டது. இதன் நிறை 3 எடை இறாத்தல் 5 அவுன்ஸ் ஆகும்.





← ஐரோப்பாவில் வளரும் நைக்கிரிற்றில்லா குப்ரா என்ற செடியின் பூ, சொக்கிலேட்டின் மணத்தையும், நிறத்தையும் கொண்டது.

# ஷெர்பியர்கள்



❀ **ஷெர்பியர்கள் என்பவர்கள் யார்?**
நேபாள நாட்டின் மலையடிவாரங்கள் மற்றும் மலைப்பகுதிகளில் வாழ்ந்து வரும் பழங்குடி மக்கள்.


❀ **இவர்களது தொழில் என்ன?**
முக்கிய தொழில் விவசாயம். ஆனால் இப்பழங்குடியினர் மலை ஏறுவதில் மிகுந்த ஆற்றல் படைத்தவர்கள். எனவே இவர்களில் முக்கால்வாசிப்பேர் சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டிகளாகவும், இமயமலையில் ஏறுவதற்குப் பயிற்சி அளிக்கும் பயிற்சியாளர்களாகவும் உள்ளனர்.

❀ **ஷெர்பியர்களில் மிகவும் புகழ்பெற்றவர் யார்?**
இமயமலையின் உச்சியை முதலில் தொட்ட டென்சிங் நோர்கே. இவர் ஷெர்பிய இனத்தைச் சேர்ந்தவர். இவருடன் 1953ம் ஆண்டு இமயமலையின் உச்சியைத் தொட்ட இன்னொருவர் நியூஸிலாந்து நாட்டின் எட்மண்ட் ஹிலரி.

❀ **ஷெர்பியர்கள் என்ன மொழி பேசுகின்றனர்?**
இவர்கள் திபெத்தியர்களின் வழிவந்தவர்கள் ஆவர். எனவே இவர்கள் திபெத் மொழி பேசுகின்றனர். அத்துடன் திபெத்தியர்கள் போலவே உடை உடுத்துகின்றனர்.

❀ **இவர்களது மக்கள் தொகை எவ்வளவு?**
சுமார் 30 ஆயிரம் ஷெர்பியர்கள் உள்ளனர்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **23.01.1999.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 280**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 278

**பரிசுக்குரியவர்:**
ப.விஜயவதனன்,
விபுலானந்த மத்திய மகாவித்தியாலயம், காரைதீவு-04.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஏ.எம்.ஸவ்பீக்,<br>பு/எருக்கலம்பிட்டி மு.ம.வி., பாலாவி. | எஸ்.சதீஸ்,<br>நு/கொட்டகலை த.ம.வி, கொட்டகலை. |
| செல்வி. ரி.ஷோபனா,<br>ப/தம்பேத்தன்னை இல 1 த.க.வி., அப்புத்தளை. | நிஷாந்தினி ரட்ணம்,<br>இ/பலாங்கொடை த.ம.வி, பலாங்கொடை. |
| தங்கேஸ்வரன் நிறஞ்சா,<br>வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | க.விதுர்ஷினி,<br>மட்/களுதாவளை, இ.கி.வித்தியாலயம், களுதாவளை. |
| டி.சமினா,<br>இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. | முத்துலிங்கம் பிரிதிகலா,<br>பது/கோணக்கலை த.வி, பசறை. |
| ரா.நிர்மல் ராஜ்,<br>அல்ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | ஆர்.பத்ம நிரோசன்,<br>அல்ஹிரா ம.வி, இ/கொட்டராமுல்லை. |

# தெரியுமா உங்களுக்கு?

அதிக நாட்கள் விண்வெளியில் இருந்து சாதனை புரிந்தவர் சோவியத் யூனியனைச் சேர்ந்த யூரி ரொமமென்கோ என்பவர்தான். இவர் விண்வெளியில் 228 நாட்கள் இருந்தார்.

உலகத்திலேயே மிகவும் அதிகமான புத்தகங்களை எழுதியவர் அலெக்ஸாண்டர் டூமாஸ் என்ற எழுத்தாளர்தான். இவர் மொத்தமாக 1200 புத்தகங்களை எழுதியுள்ளார்.

நம்முடைய உடம்பில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை 206. அவை: அச்சு எலும்புகள், முதுகெலும்புத் தொடர்- 26, தலை எலும்புகள்-29, விலா எலும்புகள்-25, சேர்க்கை எலும்புகள், கை எலும்புகள்-64, கால் எலும்புகள்-62.

'பசி வந்தால் பத்தும் பறந்து விடும்' என்பது பழமொழி. அந்தப்பத்தும் இவை: மானம், குலம், கல்வி, வன்மை, தானம், தவம், முயற்சி, அறிவுடமை, தாளாண்மை, காமம் ஆகியவைகளாகும்.

அண்டார்டிக்காவின் வடகிழக்குக் கோடியில் 50 மீட்டர் தூரத்தில் ஒரு விநோதமான தீவு உள்ளது. அங்கு நிரந்தரமாக உறைந்த பனிக்கட்டியையோ மரம், செடி கொடிகளையோ காண முடியாது. இதனால் இதை மலட்டுத்தீவு என்று அழைக்கிறார்கள்.

சூரியனில் இருந்து பூமிக்கு ஒளிவந்து சேர 8 நிமிடங்களாகின்றன. சந்திரனில் இருந்து பூமிக்கு ஒளி வந்து சேர ஒன்றரை வினாடிகளாகின்றன.

# சில உயிரினங்களின் வளர்ச்சி



⇦ **தாய்** கங்காரு 2 மீட்டர் நீளமும் 100 கிலோ நிறையும் இருக்கும். ஆனால் அதற்குப் பிறக்கும் கங்காருக்குட்டி எப்படி இருக்கும் தெரியுமா?

நீளம் ஒரு அங்குல அளவிலேயே இருக்கும். ஒரு தேக்கரண்டியில்- பிறந்த 3 கங்காருக் குட்டிகளை நிரப்பி விடலாம் அவ்வளவு சிறியவை.



⇨ நீலத் திமிங்கிலத்தின் குட்டி பிறந்தவுடனேயே அபார வளர்ச்சியடைகிறது. தாயிடம் பால் குடித்து வளரும் 6 மாத காலத்தில் அசுர வேகத்தில் வளர்கிறது. ஒரு மணித்தியாலத்திற்குள் இதன் நிறை 3 1/2 கிலோவாக அதிகரித்துக்கொண்டே போகும். நீலத்திமிங்கிலக்குட்டி தன் தாயிடம் ஒரு நாளைக்கு 50 முதல் 60 லீட்டர் பால் குடிக்கும்.



பாலூட்டிகளில், பிறக்கும்போதே தாயின் உடலளவில் மூன்றில் ஒரு பங்கு நீளத்திற்கு இருக்கும் ஒரே பிராணி முள்ளம்பன்றிதான்.

⇦ தாயின் உடல் 84 சென்டிமீட்டர் நீளம் என்றால், பிறக்கும் குட்டி 28 சென்டிமீட்டர் நீளம் இருக்கும். வேறு எந்தப் பாலூட்டிகளுக்கும் இந்தச் சிறப்பம்சம் கிடையாது.

# பழங்கால கலண்டர்



✶ பழங்காலத்தில் மார்ச் மாதம்தான் முதல் மாதமாக இருந்தது. வசந்த காலத் தொடக்கம் அது. ரோமானியர்களது போர்க்கடவுளான மார்ஸ் பெயரால் ஏற்பட்ட மாதம்.

✶ மார்ச் மாதத்தில் வருடம் தொடங்கியதால் செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்கள் ஏழு, எட்டு, ஒன்பது, பத்தாவது மாதங்களாக இருந்தன.

✶ பின்னர் பதினொராவது மாதமாக ஜனவரியும், பன்னிரெண்டாவது மாதமாக பெப்ரவரியும் சேர்க்கப்பட்டன.

✶ 'பிப்ருவேர்' என்ற இலத்தீன் சொல்லுக்கு 'சுத்தப்படுத்தல்' என்று அர்த்தம். வருடத்தின் கடைசி மாதமாக இருந்தபோது புத்தாண்டுக் கொண்டாட்டத்தை வரவேற்க, ஆலயங்களும் வீடுகளும் சுத்தப்படுத்தப்பட்டன. அதன் காரணமாக வந்த பெயர்தான் பெப்ரவரி.

✶ கி.மு.153ம் ஆண்டு முதல் ஜனவரியே முதல் மாதமானது. ஜேனஸ் என்ற கடவுள் பெயரில் வந்தது ஜனவரி.

✶ ஆரம்பத்தில் ஜனவரிக்கு 29 நாட்களும், பெப்ரவரிக்கு 29 நாட்களும், மார்ச்சுக்கு 31 நாட்களும், ஏப்ரலுக்கு 30 நாட்களும், மேக்கு 31 நாட்களும், ஜூனுக்கு 29 நாட்களும். ஜூலைக்கு 31 நாட்களும், ஒகஸ்ட்டிற்கு 30 நாட்களும், செப்டெம்பருக்கு 29 நாட்களும், ஒக்டோபருக்கு 31 நாட்களும், நவம்பருக்கு 29 நாட்களும், டிசம்பருக்கு 29 நாட்களும் இருந்தனவாம்.

www.padippakam.com

மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்

# டிசம்பர் பௌர்ணமி

**12**

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

**முன்கதை சுருக்கம்**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான். சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார். நித்தியன் பணிவதாக நடிக்கிறான்.

இனி......

முகுந்தன் நித்தியனை நோக்கி நேருக்கு நேர் பார்த்தான்.

"சாந்தாவுக்கும், உனக்கும் இன்னும் ரெண்டு நாள்ல கல்யாணம் நடக்கப்போறதைப் பத்தி விசாலிகிட்டே சொல்லி, அவளோட ரியாக்ஷன் என்னான்னு தெரிஞ்சுக்கிட்டு அதுக்கப்புறமா கல்யாண ஏற்பாடுகளைப் பண்றது பெட்டர்."

நித்தியன் முகுந்தனை ஏறிட்டுப் புன்னகைத்தான்.

"சாந்தாவை நான் கல்யாணம் பண்ணிக்கப் போகிற விஷயம் விசாலிக்கு முன்னாடியே தெரிஞ்சா அவ ஒரு பெரிய ஆர்ப்பாட்டத்தையே பண்ணிடுவா. அதுக்கப்புறம் சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுத்த கதைதான்... காதும் காதும் வெச்சமாதிரி கல்யாணத்தை முடிச்சுக்கிட்டு அதுக்கப்புறம் வர்ற பிரச்சனையை சால்வ் பண்ணிக்கிறது உத்தமம்."

"நல்லா யோசனை பண்ணு."

"நேரா உம்மிடியார்ஸ் போறோம். தாலிக்கொடியும் நகைகளும் வாங்கறோம். கிளம்பலாமா?"

சாந்தா இப்போது குறுக்கிட்டாள்

"என்னங்க?"



"இதோ பார் சாந்தா... உனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டம் இல்லேன்னா சொல்லிடு. நான் வெளியூர் எங்கேயாவது போயிட்டு ஒரு மாசம் கழிச்சு வர்றேன். அதுக்கப்புறம் இருக்கிற நிலைமையை அனுசரிச்சு நம்ம கல்யாணத்தைப் பத்தி யோசனை பண்ணிக்கலாம். ஆனா என்னிக்கு இருந்தாலும் கல்யாணம் உனக்கும் எனக்கும்தான்! அதை மட்டும் நீ ஞாபகம் வெச்சுக்கிட்டாப் போதும். இப்ப நீ உம்மிடியார்ஸ் வர்றியா? இல்லே உன்னோட ஹாஸ்டலுக்குப் போறியா? நீ ஹாஸ்டலுக்குப் போறதாயிருந்தா, நம்ம கல்யாண ஏற்பாடுகளை இத்தோடு நிறுத்திக்கலாம்... உனக்கு எப்படி வசதி?"

சாந்தா பதட்டமாய் குறுக்கிட்டாள்.

"வாங்க நகைக்கடைக்கே போகலாம். நீங்களே இவ்வளவு துணிச்சலா இருக்கும் போது நான் எதுக்காக பயப்படணும்?"

காருக்குள் ஏறி உட்கார்ந்தாள் சாந்தா. நித்தியன் அவளை புன்னகையோடு பார்த்தான்.

"இனிமே... விசாலிக்காக புலம்பமாட்டியே?"

"மாட்டேன்... இனி கல்யாணம் தான். நீங்களே... வேண்டாம்னு சொன்னாலும் நான் விடப் போறதில்லை."

முகுந்தன் சிரித்துக் கொண்டே காரைக் கிளப்பினான்.

***

மத்தியானச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு மறுபடியும் காக்கி யூனிஃபார்முக்குள் நுழைந்து கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ஜோதிலிங்கம் தன் வீட்டுக்கு முன்னால் கார் நிற்பதைப் பார்த்து எட்டிப் பார்த்தார்.

காரினின்றும் இறங்கிக் கொண்டிருந்த ருத்ரமூர்த்தியைப் பார்த்ததும் மலர்ந்தார். வேக வேகமாய் வாசலுக்குப் போனார்.

"வாங்க சார்... என்ன இந்த மத்தியான நேரத்துல? அதுவும் வீட்டுக்கு?"

ருத்ரமூர்த்தி சின்ன சிரிப்போடு வாசற்படி ஏறி உள்ளே வந்தார்.

"ஒரு முக்கியமான விஷயமா பேசணும்... அதான் வீட்டுக்கு வந்தேன்."

"மோஸ்ட் வெல்கம்... உட்காருங்க சார்!"

தொப்பைக்கு பெல்டை கொடுத்துக் கொண்டே சோபாவைக் காட்டினார் ஜோதிலிங்கம்.

ருத்ரமூர்த்தி சோபாவுக்கு சாய்ந்தார்.

"வீட்ல யாரும் இல்லையே?"

"ஒய்ப் ஊருக்குப் போய் ஒரு வாரம் ஆச்சு சார். வேலைக்காரி காலையிலேயே வந்து சமைச்சு வெச்சுட்டு போயிடுவா. அதான் வீட்டுக்கு வந்து சாப்டுட்டு மறுபடியும் ஸ்டேஷனுக்கு கிளம்பிப் போயிட்டிருக்கேன்." பேசிக் கொண்டே ருத்ரமூர்த்திக்கு எதிரில் வந்து உட்கார்ந்தார் ஜோதிலிங்கம்.

"என்ன விஷயம் சார்... ஏதாவது லேபர் பிராப்ளமா?"

"அதெல்லாம் கிடையாது இருந்தாலும், அதை நானே டீல் பண்ணிக்குவேன்... இது என்னோட பர்சனல் மேட்டர்."

"சொல்லுங்க சார்... மேட்டர் எதுவா இருந்தாலும், உதவி பண்ண நான் தயாராயிருக்கேன். என் அப்பாவோட குடும்ப நண்பரான நீங்க எனக்காக எவ்வளவோ உதவிகள் பண்ணியிருக்கீங்க... அதுக்குப் பிரதியுபகாரமா என்ன உதவி வேணும்னாலும் பண்ணத் தயாராயிருக்கேன்!"

சிலவிநாடிகள் மௌனமாய் இருந்த ருத்ரமூர்த்தி பின் மெல்ல வாயைத் திறந்தார்.

"என் பையன் நித்தியனை உனக்கு நல்லாவே தெரியும்னு நினைக்கிறேன்"

"தெரியாமே என்ன சார்?"

"அவன்ஒரு பொண்ணை லவ் பண்றான். ஆனா, நான் அவனுக்கு ஒரு நல்ல இடத்துல பெண்ணைப் பார்த்து முடிவு பண்ணியிருக்கேன். பொண்ணு வீட்லயும் அந்தக் கல்யாணத்துல ரொம்பவும் ஆர்வமா இருக்காங்க... இந்தக் கல்யாணம் என்னோட பிரஸ்டீஜ் இஷ்யூ. கல்யாணம் நடக்கலைன்னா நான் இந்த ஊர்ல தலை நிமிர்ந்து நடக்க முடியாது."

ஜோதிலிங்கம்ருத்ர மூர்த்தியையே பார்த்துக் கொண்டிருக்க அவர் தொடர்ந்தார்.

"நித்தியன் காதலிக்கிற அந்தப் பெண்ணை ஃபோன்ல மிரட்டிகூட பார்த்துட்டேன். அவ மசியலை."

"அந்தப் பொண்ணு யார் ஸார்?"

"அவ பேர் சாந்தா... ஒரு வொர்க்கிங் விமன் ஹாஸ்டல்ல தங்கிக்கிட்டு வீடு வீடா போய் டெலிஃபோன் க்ளீனிங் சேர்ளா வேலை பார்த்துட்டிருக்கா."

"நித்தியன்கிட்ட அதைப் பத்தி பேசிப் பார்த்தீங்களா?"

"அவனோட இந்தக் காதல் விவகாரத்தை நான் தெரிஞ்சுட்டதா காட்டிக்கவேயில்லை. நேரிடையா மோதிட்டா அவனுக்குத் துணிச்சல் அதிகப்படியாயிடும். அதனால்தான் மறைமுகமா ஏதாவது பண்ணி அந்தக் காதலை முறியடிக்க முடியுமான்னு பார்க்கிறேன்"

"இந்த விஷயத்துல உங்களுக்கு நான் என்ன உதவி செய்ய முடியும்னு நீங்க எதிர்பார்க்கறீங்க ஸார்?"

"நித்தியனோட காதலை அவளுக்கு எந்த பாதிப்பும் இல்லாமே அழிக்கணும்."

ஜோதிலிங்கம் தன் அகலமான நெற்றியை இடது ஆட்காட்டி விரலால் கீறிக் கொண்டார்.

"எப்படி ஸார்! எனக்குப் புரியலை."

"பொலிஸ் நினைச்சா முடியாதது எதுவுமில்லை... ஒரு குற்றவாளியை நிரபராதின்னு காட்டவும், ஒரு நிரபராதியை குற்றவாளி மாதிரி காட்டவும் பொலிஸாலே முடியாதா என்ன?"

"ஸார்... அது வந்து..."

"சொல்லு... என்ன?"

"நீங்க சொன்னதை நான் புரிஞ்சுக்கிட்டேன். ஆனா நித்தியன் சும்மாயிருக்க மாட்டாரே."

"நித்தியனை நான் ஹேண்டில் பண்ணிக்கிறேன். சாந்தா ஸைடை நீ பார்த்துக்கோ."

"ஸார்... இப்படி ஃபோர்ஸ் பண்ணி அந்தக் காதலைப் பிரிக்கிறது சரியா வொர்க் அவுட் ஆகும்னு நினைக்கறீங்களா?"

"சரியா செஞ்சா எதுவுமே வொர்க் அவுட் ஆகும். எனக்காக இதைப் பண்ணிக் கொடு."

"ஸார் உங்க நிலைமை எனக்குப் புரியுது. உங்களுக்கு ஒரு பிரச்சனைனா அதை சால்வ் பண்ண வேண்டியதும் என்னோட கடமைதான். ஆனா சாந்தா தங்கியிருக்கிற வொர்க்கிங் விமன் ஹாஸ்டல் என்னோட பீட் ஏரியாவுக்குள்ள வர்றது இல்லை. நான் அந்தப் பொண்ணை நேரிடையா போய் எதுக்காகவும் விசாரிக்க முடியாது. பட் கிரைம் பிராஞ்சுல எனக்கு வேண்டப்பட்ட இன்ஸ்பெக்டர் ஒருத்தர் இருக்கார். அவர் மூலமா இந்தப் பிரச்சனையை டீல் பண்ணலாம்."

"யார் அவர்?"

"பேர் ராஜ கணேஷ்"

"சரியா செய்வாரா?"

"இது மாதிரியான 'பேக்டோர்' காரியங்கள் செய்யறதுல அவர் புலி. சில அரசியல் புள்ளிகளுக்கு நெருக்கமான வர். எனக்கு ரொம்பவும் வேண்டியவர்."

"என் பேர் இந்த விஷயத்துல வெளியே வரவே கூடாது ஜோதிலிங்கம்.

"எனக்குத் தெரியாதா ஸார்? நீங்க உங்க ஸைடில கல்யாண ஏற்பாடுகளைப் பண்ணிக்கிட்டே இருங்க... நித்தியன் சாந்தாவை தொலைச்சுட்டு உங்க கிட்ட வருவான்."

"நிஜமா... இது நடக்குமா?"

"பொலிஸ் நினைச்சா எது வேணும்னாலும் நடக்கும்னு கொஞ்ச நேரத்துக்கு முந்தி நீங்கதானே ஸார் சொன்னீங்க. அதை க்ரைம் பிராஞ்ச் ராஜகணேஷ் நடத்திக் காட்டுவார்."

"நீ அந்த வார்த்தைகளை சொல்லும் போது என் மனசுக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்குது தெரியுமா ஜோதிலிங்கம்? ரெண்டு நாளா நான் சரியாவே சாப்பிடலை. தூங்கலை."

ஜோதிலிங்கம் சிரித்தார்.

"பி..... ஹேப்பி அண்ட் கம்பர் டபிள் சார்.. நித்தியனோட கல்யாணம் நீங்க முடிவு பண்ணி வெச்சிருக்கிற பொண்ணோடதான் நடக்கும்."

ருத்ரமூர்த்தி தான் கையோட கொண்டு வந்திருந்த ப்ரீப் கேஸைத் திறந்து நூறு ரூபாய்க் கட்டுக்கள் இரண்டை எடுத்து ஜோதிலிங்கத்திடம் நீட்ட அவர் திகைத்தார்.

"என்ன ஸார் இது?"

"நீயும் உன்னோட ஃபிரண்டும் பண்ணப் போகிற காரியத்துக்காக அட்வான்ஸ்."

ஜோதிலிங்கம் சிரித்தார்.

"நான் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஸார்... அடியாள் கிடையாது. என்னை நீங்க அடியாள்னு நினைச்சா பணம் கொடுங்க.

"உங்க ஃபிரண்ட் ராஜ கணேஷ்?"

"அவரும் இப்படி பணம் வாங்கறதை விரும்பமாட்டார். சாந்தாவை நித்தியனோட லைஃப் ரூட்லயிருந்து அழகா கட் பண்ணிவிட வேண்டியது எங்க வேலை.. அந்த வேலையை முடிச்சிட்டு உங்க மகனோட கல்யாணத்துக்கு வரும்போது... ஒரு தேங்க்ஸ் சொல்லுங்க. அது போதும்." சொல்லிவிட்டு சிரித்த ஜோதிலிங்கம் கேட்டார்.

"அந்த சாந்தாவோடு ஃபோட்டோ ஏதாவது உங்கக்கிட்ட இருக்கா ஸார்?"

"ஃபோட்டோ இல்லை... அடையாளம் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க ஸார்!"

ருத்ரமூர்த்தி சொல்ல ஆரம்பிக்க ஜோதிலிங்கம் குறித்துக் கொள்ள ஆரம்பித்தார்.

(பௌர்ணமி தொடரும்)

---

அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன்

**24**

ராஜையா

"இது அமெரிக்கா- ஈரான் கூட்டுச்சதி" என்ற நோக்கில் மட்டும் குர்து பிரச்சனையைப் பார்த்த சதாம் உசேன், அமெரிக்காவின் சதி வெற்றி பெற்றுவிடக்கூடாது என்ற உறுதியுடன் களத்தில் இறங்கினார்.

குர்து போராளிகளுக்கு எதிராக விமானத் தாக்குதலையும், டாங்கித் தாக்குதலையும் முழுமூச்சுடன் நடத்தினார்.

பலத்த உயிர்- உடைமைச் சேதங்களுக்குப் பின் சதாம் வெற்றிபெற்றார்.

பர்ஸானி நாட்டை விட்டே தப்பி ஓடினார்.

சி.ஐ.ஏ. வின் இந்த முயற்சியும் தோற்றுப்போனது. பக்கர்- சதாம் ஆட்சியைக்கவிழ்க்க இப்போதைக்கு வேறு வழியில்லை என்று முடிவுடன் அது பின்வாங்கியது.

ஈராக்கில் அமைதி திரும்பியது.

அமெரிக்க பெட்ரோல் கம்பெனியை நாட்டுடமை ஆக்கியதாலும், பெட்ரோல் விலை உயர்ந்ததாலும் ஈராக்கில் செல்வம் குவிந்தது. சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னெப்போதையும் விட கணிசமாக உயர்ந்தது.

குர்து இனத்தினர் நீங்கலாக பெரும்பாலான ஈராக்கியர்கள், மறுமலர்ச்சிக் கட்சியின் ஆட்சியை தங்களுக்குக் கிடைத்த பெரும் பேறாக கொண்டாடினார்கள்.

இந்தச் சமயத்தில் ஈராக் அரசியலில் பெரிய திருப்பம் ஏற்பட்டது.

பரஸ்பரம் ஒன்றுபட்டு, ஒத்த கருத்துடன் இது நாள் வரை செயற்பட்டு வந்த ஜனாதிபதி பக்கரும், துணை ஜனாதிபதி சதாம் உசேனுக்கும் மோதல் வெடித்தது...

"நேயர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு. ஜனாதிபதி சதாம் உசேன் இன்று டெலிவிஷனில் முக்கிய உரை நிகழ்த்துவார்".

ஈராக் வானொலியும், டெலிவிஷனும் 1980 செப்டம்பர் 15ந் தேதி தங்கள் வழக்கமான நிகழ்ச்சிகளை இடையிடையே நிறுத்தி இந்த அறிவிப்பை திரும்பத் திரும்ப அறிவித்துக் கொண்டிருந்தன.

ஈராக்கியர்கள் பரபரப்படைந்தார்கள். அவர்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை. சதாம் உசேன் என்ன சொல்லப் போகிறார் என்று அறிந்து கொள்ள மிகவும் ஆர்வம் காட்டினார்கள்.

கடந்த சில மாதங்களாகவே ஏதோ நடக்கப் போகிறது என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்...

கொமேனி ஈரானில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிவிட்டு, ஈராக்கிலுள்ள ஷியா வகுப்பு முஸ்லீம்களை கலகம் செய்யுமாறு தூண்டிவிட்டதிலிருந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் பெரிய பள்ளம் விழுந்திருந்தது.

பாக்தாத்துக்கும், டெஹ்ரானுக்கும் இடையே கடும் பிரசாரம் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும் ஒரு நாட்டை இன்னொரு நாடு ஆவேசமாகத் திட்டித் தீர்ப்பதும், குறை கூறுவதுமே செய்திகளாயின.

ஒரு நாட்டில் தனிநாடு கேட்டுப் போராடும் தீவிரவாதக் குழுவை அடுத்த நாடு தூண்டிவிட்டது. நிதியுதவியும், ஆயுத உதவியும் கொடுத்து கலவரத்தை வளர்த்தது.

இந்தப் 'பனிப்போர்' அடுத்து எந்த திசையில் திரும்பும் என்பதை தெரிந்து கொள்ளவே ஈராக்கியவர்கள் சதாம் உசேனின் பேச்சைக் கேட்க ஆர்வமாக இருந்தார்கள்.

சதாம் டெலிவிஷனில் தோன்றினார். ஒரு காகிதக் கத்தையை கையில் எடுத்தார். "இது சேத்-அல்-அராப் நதி தொடர்பான ஈரான்-ஈராக் ஒப்பந்தம்" என்றார்.



யூப்ரடீஸ், டைகிரீஸ் ஆறுகள் இரண்டும் ஈராக்கில் பஸ்ரா நகர் அருகே இணைந்து ஒரே நதியாகின்றன. இவ்விதம் இணைந்து அதற்கு மேல் ஓடும் நதிக்கு 'சேத்-அல்-அராப்' (அரேபியர் நதி) என்று பெயர். இந்நதி ஈரானுக்கும், ஈராக்குக்கும் நடுவில் ஓடி, இரு நாடுகளுக்குமிடையிலான எல்லையாக அமைந்து வளைகுடாவில் கலக்கிறது. இந்த எல்லையோர ஆற்றுப்பகுதி யாருக்குச் சொந்தம் என்பதில் இரண்டு நாடுகளுக்குமிடையே பிரச்சனை இருந்து வந்தது. 1975ல் சதாம் இதற்கொரு முடிவு கட்டினார். 'கிழக்குக் கரையும் ஆற்றில் பாதியும் ஈரானுக்குச் சொந்தம்; மீதி ஆறும் மேற்குக் கரையும் ஈராக்குக்குச் சொந்தம்" என்று பேசி, சமரசம் செய்து உடன்பாடு கண்டார். இதுதான் சேத்-அல்-அராப் ஆறு தொடர்பான ஈரான்-ஈராக் ஒப்பந்தம்.

டெலிவிஷனில் தோன்றி அந்த ஒப்பந்தத்தை கையிலெடுத்த சதாம்-ஈராக்கியர் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்க-அதை ஆவேசத்துடன் தாறுமாறாய்க் கிழித்தெறிந்தார்...

"நன்றி கெட்ட ஈரானுக்கு நம் எல்லையை ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்? இனி அந்த ஒப்பந்தம் செல்லாது. சேத்-அல்-அராப் முழு ஆறும், அதன் கிழக்குக் கரையும் நமக்கே சொந்தம். நம் உரிமையை நாம் நிலை நாட்டுவோம்" என்று முழங்கினார் சதாம்.

இந்த முழக்கம் கேட்டு ஈராக்கியர்கள் துள்ளி குதித்து ஆர்ப்பரித்தார்கள். ஆனால், ஈரான் அலறியது.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# உதட்டில் ஒரு முத்தம்

**13**

**சுபா**

கைலாஷ் ஏற்கனவே தீர்மானித்திருந்ததாலோ, என்னவோ ஆம்புலன்ஸில் ஏற்றப்படுமுன்னரே, அவன் இதயம் ஸ்தம்பித்திருந்தது. மூச்சு முற்றிலும் நின்றிருந்தது. அவன் விருப்பப்பட்டது நிறைவேறாமலேயே, அவன் பயணம் முடிந்துவிட்டது.

***

ஷிவாவின் உடல் மெலிதாக நடுங்கிக் கொண்டிருந்தது. நியூஸ் பேப்பரை அகலமாகப் பிரித்துவைத்து அந்தச் செய்தியை எத்தனை முறை படித்துவிட்டான்.

முந்தின இரவு வெகு தூரத்திலிருந்து நேரிலும், அதன் பின் டெலிவிஷனில் நெருக்கத்திலும் பார்த்த காட்சிதான். பேப்பரில் கூடுதல் விவரங்களுடன் வந்திருந்தன. இரவு முழுவதும் தமிழக பொலிஸ் உழைத்ததன் முடிவுகள் பேப்பரில் மலர்ந்திருந்தன. கைலாஷைப் பற்றி புகைப்படத்துடன் செய்தி வந்திருந்தது.

மதுரை மாவட்டத்தில் ஓடக்கரை என்ற கிராமத்தைச் சேர்ந்த இளைஞன் கைலாஷ். அந்த கிராமத்தில் தொழிற்சாலை கட்டுவதை எதிர்த்தவன். அமைச்சர் பிரகாஷ் குப்தாவின்மீது அதனாலேயே கோபமேற்பட்டு அவரைக் கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருப்பான் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட பரிசுக் கோப்பையை விற்ற கம்பெனியில் விசாரித்தபோது, மொத்தமாக மெட்ரோ பாலிடன் கிளப்பிற்குக் கொடுத்துவிட்டதாகச் சொன்னார்கள். கிளப் செக்ரட்டரி, அந்தக் கோப்பைகளில் பரிசு விபரம் பொறிக்க ஒரு கடையில் கொடுத்திருந்ததாகவும், அங்கே கோப்பை மாற்றப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவித்தார். பெயர் பொறித்தவனைப் பிடித்து உதைத்ததில், சுமார் முப்பத்தைந்து வயதுள்ள ஒருவர் கிளப்பிலிருந்து வந்ததாக அறிமுகம் செய்து கொண்டு, அந்தக் கோப்பைகளில் நீச்சல் பரிசுக்குரிய கோப்பையை மாற்ற வேண்டும் என்று சொல்லிமாற்றியதாகச் சொன்னான். மேற்கொண்டு விவரங்கள் அவனால் கொடுக்க முடியவில்லை.

கைலாஷ் தங்கியிருந்த வீட்டிலும் அக்கம் பக்கத்திலும் பொலிஸ் விசாரித்தபோது, கடைக்கு வந்து கோப்பையை மாற்றிய அதே அடையாளங்களுக்குரிய மனிதன் இந்த வீட்டிற்கும் வந்து போனதாகத் தெரிகிறது. அர்த்தநாரி என்ற இளைஞனும் அந்த வீட்டில் தங்கியிருந்ததாகவும் சம்பவத்திற்குப் பிறகு அவன் அங்கு திரும்பவில்லை என்றும் சொல்லப்படுகிறது. முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க மனிதனும் ஓடக்கரையைச் சேர்ந்தவனாக இருக்கலாம் என்றும், மேற்கொண்டு நடத்தும் விசாரணையில் மேலும் உண்மைகள் வெளிப்படலாம் என்றும் அமைச்சரின் பாதுகாவல் உயர் அதிகாரி திரு. மோகனன் குறிப்பிட்டார்.

இன்னும் சில பத்திகளுக்குச் செய்தி நீண்டிருந்தது.

ஷிவாவிற்கு துக்கம் நெஞ்சை அடைத்தது. அர்த்தநாரியையும் தேவேந்திரனையும் கண்டுபிடித்து விடுவார்களா? அவர்களுடைய கனவுகளும், இலட்சியங்களும் நாசமாகப் போகின்றனவா?

மத்திய அமைச்சரின்மீது கொலை முயற்சி என்றால் சும்மா விட்டுவிட மாட்டார்கள். விசாரணைக்கரங்கள் ஆக்டோபஸ் போல நான்கு திக்குகளிலும் நீளும். மடக்கும். சுருட்டும். ஓடக்கரையின் நிம்மதி கவிழ்க்கப்பட்டு விடும்.

தேவேந்திரன் இதற்கு என்ன தீர்வு வைத்திருப்பான்?

அவன் தங்கியிருந்த அறைக்கதவு தட்டப்பட்டது.

**இதுவரை**

அரவிந்த்
ஒரு பைலட்.
அவனது மனைவி ஜயோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜயோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த்,
அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன்
பைலட்டாக ஓடக்கரை
கிராமத்திற்குச் செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட
அமைச்சர் திட்டமிட
அதை எதிர்க்கிறார்கள்
கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு இறக்கிறான்.
கிராம இளைஞர்கள்
கொதிக்கின்றனர்.
அமைதி வழி சரிப்படாது
என்று ஆயுதம் ஏந்த
முடிவு செய்கின்றனர்.
நிலத்தை அபகரிப்பதில்
அமைச்சர் தீவிரம் காட்டுகிறார்.
அமைச்சரைக் கொல்ல
இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.
அமைச்சரை கொலை செய்ய
செல்லும் கைலாஷ்
மாட்டிக்கொள்கிறான்.
மின்சார வயரைப் பிடித்து
தற்கொலைக்கு முயற்சிக்கிறான்.

**இனி....**

தன்னிச்சையாக அவனுள் ஒரு நடுக்கம் ஓடியது. பேப்பரை மூடி வைத்துவிட்டுப் போய்க் கதவைத் திறந்தான்.

வெளியே நின்றிருந்தவன் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தான். கண்களும் நெற்றியும் தவிர மற்ற பகுதி தெரியாத அளவிற்கு முகத்தில் தாடியும் மீசையும் மண்டியிருந்தது. உயரமாய் இருந்தவன், வாய் திறந்தான். "இங்கே ஷிவா என்பது?" கரகரத்து வந்தது குரல்.

"நான்தான்!"

"ஓடக்கரையைச் சேர்ந்தவனா நீ?"

ஐயோ, ஆபத்து! அவனைப் பற்றித் தெரிந்துகொண்டு யாரோ வந்திருக்கிறார்கள்.

"ஆ...ஆமாம்..."

அவன் உள்ளே நுழைந்தான். "அமைச்சரைக் கொலை செய்யத்தானே நீயும் அனுப்பப்பட்டிருக்கிறாய்?"

ஷிவா திடுக்கிடலோடு அவனைப் பார்த்தான். "என்ன பேத்துகிறீர்கள்? யார் நீங்கள்?"

"என்னிடம் எதையும் மறைக்க முடியாது ஷிவா. ஏனென்றால் உன்னை அனுப்பியதே நான்தான்..." குரல் மாறியிருந்தது.

"தேவ்!"

ஷிவா அவசரமாகச் சாத்தினான். "தேவ் பேப்பரில் பார்த்தேன்... மிகவும் கலக்கமாக இருந்தது."

தேவேந்திரன் நாற்காலியில் அமர்ந்து தன் மரக்காலைச் சரிசெய்து கொண்டான்.

"அர்த்தநாரி ஆந்திராவிற்குப் பறந்து விட்டான். அங்கே என் நண்பர்கள் அவனைக் கவனித்துக் கொள்வார்கள். என்னை அவர்களால் கண்டுபிடிக்க முடியாது. ஷிவா... நேற்றைக்கு நான் வேறு செட்டப்பில் இருந்தேன். வேறுதாடி. வேறு மீசை. வேறு விக். நெற்றியை மறைத்துத் தலைமுடி. விழி நிறத்தை மாற்ற காண்டாக்ட் லென்ஸ். எடுப்பாகத் தெரிய பொய்ப்பற்கள். அவர்களால் சுலபத்தில் என்னைக் கண்டுபிடிக்க முடியாது."

"கைலாஷ் இறந்து விட்டானா தேவ்?"

"அவன் மரணம் வீணாகி விட்டது. தப்பு என்பேரில்தான். அந்தப் பூசணியை அப்படியே குப்பைத் தொட்டியில் போட்டிருக்கக்கூடாது."

"கைலாஷ், அர்த்தநாரி என்றெல்லாம் அசல் பெயர்களையே கொடுத்திருக்க வேண்டுமா தேவ்?"

"கதை தொடரும் என்று நான் நினைக்கவில்லை. இப்போது அமைச்சருக்குக் காவல் அதிகரித்து விடும். சுலபமாக அவரை நெருங்கி விட முடியாது. அதனால்...."

"அதனால்?"

"நான் யோசித்திருக்கும் அடுத்த திட்டம் சற்று விஸ்தாரமானது. மிக ஆழமாக யோசித்து, ஒவ்வொரு அங்குலமாக கவனமாகக் காயை நகர்த்த வேண்டியதிட்டம். கைலாஷ் செத்துப்போய் முழுசாக இன்னும் ஒருநாள்கூட ஆகவில்லை. அதற்குள் இவன் அடுத்த திட்டம் பற்றிப் பேசுகிறானே என்று தோன்றுகிறதா உனக்கு..."

"இல்லை, தேவ். ஓடக்கரையில் பிறந்த எவனும் உன்னை அப்படி நினைக்க மாட்டான். அந்த அடுத்த திட்டத்தை என்னிடம் சொல்லலாமா?"

"நீதான் அதில் ஹீரோ! ஆனால் உனக்கு அதில் சம்மதமா என்று நீ சொன்ன பிறகுதான் நான் காரியத்தில் இறங்க முடியும்."

"தேவ் சொல்லும் எதற்கும் நான் சம்மதம்!"

"விமானப் பயிற்சியை நீ மும்முரமாக்கு. பிரகாஷ்குப்தாவிற்கு நீ விமானம் ஓட்ட முடியுமா, பார்ப்போம்."

"என்னது!" என்று அதிர்ந்தான் ஷிவா, "எப்படி தேவ் அது சாத்தியம்?"

"எப்படி என்று முதல்காயை நான் நகர்த்தியவுடன் சொல்கிறேன். எதற்கும் நீ நர்மதாவைப்போய் பார்த்துவிட்டு வந்துவிடு."

"நர்மதாவா? அவளை எதற்கு?"

"உன் அழகான முகத்தை அவள் நன்றாக ஒருமுறை பார்த்துக் கொள்ளட்டும், ஷிவா..."

"கடைசிவரை புதிராகவே பேசப்போகிறாயா தேவ்?"

"புதிர் எதுவுமில்லை. திட்டத்தில் சில ஓட்டைகளை நானே இன்னும் நிரப்பவில்லை. அதுதான் யோசித்தேன். என் மனதில் உருவாகியிருக்கும் கட்டம் வரை உனக்குச் சொல்கிறேன்.... உன் கருத்தைச்சொல்"

தேவேந்திரன் தன் திட்டத்தை ஒவ்வொரு அம்சமாக விவரித்துச் சொல்லலானான். ஷிவாவின் முகத்தில் விளக்கு எரிந்தது.

"தேவ், உன் திட்டம் ரொம்ப த்ரில்லிங்காக இருக்கிறது."

"ஆனால் உன் பங்குதான் ரொம்பக் கவலையானது."

"நான் சந்தோஷமாகச் செய்வேன், தேவ்... காத்திருக்கிறேன் அந்த இளிச்சவாயனுக்கு என் கையால் ஆபிசுச்சுவரி எழுத..."

"இந்த முறை நாம் தவறக் கூடாது ஷிவா!" என்றான் தேவேந்திரன் கவலையுடன்.

*●*

ஓடக்கரை.

இரண்டு வேன்கள் நிறைய பொலிஸ் வந்து இறங்கி ஊரைச் சூழ்ந்து கொண்டது. பேப்பரும் பேனாவும் மேஜையுமாக உட்கார்ந்திருந்தார் இன்ஸ்பெக்டர் ஒருவர். ஒவ்வொரு குடும்பமாக அவரை அணுகி குடும்ப உறுப்பினர்களின் பெயர், வயது, யார் யார் எங்கே இருக்கிறார்கள் என்ற விவரம் எல்லாம் தர வேண்டும் என்று மிரட்டல். கேமிராவுடன் வந்திருந்த பொலிஸ் ஃபோட்டோகிராஃபர் ஒவ்வொருத்தருடைய ஃபோட்டோவையும் எடுத்துக் குறித்துக் கொண்டிருந்தார்.

"வெளிநாட்டு அகதிகளை நடத்துகிறமாதிரி எங்களை நடத்துகிறீர்கள்!" என்று சீறி எழுந்த இளைஞர்களை மிரட்டி அடக்கினார் இன்ஸ்பெக்டர்.

"வெளிநாட்டுக்காரர்களைப் போலத்தானே உள்ளூர்ப் பையன் மத்திய அமைச்சரைக் கொல்லப் பார்த்தான்?"

கியூ வரிசையில் கடைசியாக தேவேந்திரன் நின்றிருந்தான்.

"பெயர்?"

"தேவேந்திரன்"

"வயது?"

"முப்பத்தி மூன்று"

"அமைச்சரைக் கொல்ல முயற்சித்த தினத்தில் எங்கு இருந்தீர்கள்?"

"இதே ஊரில் எங்களுக்காகக் கட்டித் தரப்பட்டுள்ள மாட்டுக் கொட்டகையில்..."

"அநாவசியமாகப் பேசாதே... வெளியூருக்குப் போகவில்லையா?"

"இல்லை"

"ஏன் நொண்டுகிறாய்?"

"ஒரு கால் இல்லை. தேசத்திற்காக இராணுவத்தில் இழந்தேன்."

"போய் அப்படி ஃபோட்டோவுக்கு நில்!"

தேவேந்திரனை மூன்று கோணங்களில் புகைப்படம் எடுத்தார்கள். "போ" என்றார்கள்.

தேவேந்திரன் காலைச் சாய்த்துச் சாய்த்து நடந்து தன் இருப்பிடத்தை நோக்கி விலகினான். பொலிஸ் இங்கேயே தங்கி, ஊர்க்காரர்களை கண்காணிக்கப் போகிறதா என்ற கேள்வி அவனைக் குடைந்தது.

(○–வரும்–○)



---

# கவியரசுவின் சுயசரிதை

**32**

**கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

சம்பத்தே தன் ஆதரவாளர்களிடம் அண்ணாதுரைக்கு விட்டுக் கொடுக்குமாறு கூறினார். அண்ணாதுரை பொதுச் செயலாளராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவை அனைத்தையும் அவன் பொதுக்குழு உறுப்பினர்களிடம்இருந்து கேட்டுத் தெரிந்து கொண்டான். அந்தக் குழுவுக்கு அவன் போகவில்லை. அந்தக் குழுவில் உறுப்பினனாகவும் இல்லை; அக்கறையும் காட்டவில்லை.

இந்தப் பொதுச் செயலாளர் தேர்தல் நடக்கும்போது பொதுக்குழு நடந்த வீட்டிற்கு நான்காவது வீடான வி.பி. இராமன் வீட்டிலேயே அவன் இருந்தான். குழு முடிந்ததும் சம்பத்தின் ஆதரவாளர்கள் அங்கே வந்து அவனிடம் இந்த விவரங்களைக் கூறினார்கள். அண்ணாதுரையின் ஆதரவாளர்களும் அதை அப்படியே ஒப்புக்கொண்டார்கள். அப்பொழுதுதான் அவனுக்கு வேறொரு விஷயமும் தெரிய வந்தது.

சில மாதங்களுக்கு முன் அதே வி.பி. இராமன் வீட்டில் கருணாநிதி, நெடுஞ்செழியன், மதியழகன், சம்பத் ஆகியோர் கூடி திராவிடநாடு கொள்கையைக் கைவிடுவது பற்றி யோசித்ததாகவும், அண்ணாதுரைக்குச் செய்தி அனுப்பி அவரை வரச் சொன்னதாகவும், அண்ணாதுரை வந்து சம்பத்தை தாஜா செய்து அனுப்பிவிட்டு, மற்றவர்களைத் திட்டி அனுப்பிவிட்டதாகவும் அவனிடம் கூறப்பட்டது.

அதிலிருந்து சம்பத்திடம் அவனுக்கு ஒரு தனிக் கவர்ச்சி ஏற்பட்டது. பெரிய பாரம்பரியம் என்ற முறையில் அவரது சிந்தனைகள் விரிவாக இருப்பதில் ஆச்சரியம் இல்லை யென்று அவன் எண்ணினான். அன்றிலிருந்து தான் தினசரி அவன் சம்பத்தைச் சந்திக்க ஆரம்பித்தான். அவருடைய சிந்தனைகளில் அவன் லயித்தான். கழகத்தில் அவருடைய முயற்சிகள் எல்லாவற்றிற்கும் துணை நிற்பது என்று முடிவு கட்டினான்.

லாயிட்ஸ்ரோடு பொதுக்குழுவிற்குப் பிறகும் கட்சியில் சம்பத்தின் கையே ஓங்கி இருந் தது. அதைத் தகர்க்க அண்ணாதுரை இரகசியமாகத் திட்டமிட்டார். திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னால் பொதுக்குழுவில் கண்ணீரைக் காட்டி தான் பெற்ற வெற்றியை கம்பீரமான வெற்றியாகக் கருதி 'திராவிடநாடு' இதழில் மறைமுகமாக ஒரு கட்டுரை எழுதினார்.

அப்பொழுதும் சரி இப்பொழுதும் சரி, தி.மு.க. கழகத்தில் ஒருவரையொருவர் மறைமுகமாகத் தாக்கி எழுதுவது மிகவும் அதிகம். அது தொண்டர்களில் பலபேருக்குப் புரியாது; குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் புரியும். அந்தப் பாணியில் அண்ணாதுரை சம்பத்தைக் கேலி செய்து ஆப்பிள் கார்ட் என்ற பெர்னாட்ஷா நாடகத்தை மையமாகக் கொண்டு ஒரு கட்டுரை எழுதியிருந்தார். 'எல்லோரும் இந் நாட்டு மன்னர்' என்பது அதன் தலைப்பாகும்.

அதை அவன்கூடப் படிக்கவில்லை. பொதுவாக அவன் அண்ணாதுரையின் திராவிடநாடு பத்திரிகை உட்பட எந்தத் தி.மு.க. பத்திரிகையையும் படிப்பதில்லை. காரணம் அவர்களின் சத்தற்ற தமிழ்நடை தன்னைப் பற்றிக் கொள்ளக் கூடாதே என்ற பயம்.

அந்தக் கட்டுரை வெளிவந்த திராவிட நாடு இதழை அவன் முதலில் பார்க்கவில்லை. அவனது துணையாசிரியர் தியாகன் அதைப் படித்துவிட்டு அவனிடம் கொண்டு வந்து காட்டினார். "இந்தப் 'போனார்ஜியஸ்' என்ற பாத்திரம் புயலார் என்ற பெயரில் மாற்றப்பட்டு சம்பத்தைக் கேலி செய்வது போல் எனக்குத் தோன்றுகிறது." என்று அவர் சொன்னார். அவன் அதை முழுக்கப் படித்துப் பார்த்தான். பொதுக்குழுவில் சம்பத் ஏமாந்துவிட்டதாகவும் தான் வெற்றிபெற்று விட்டதாகவும் மறைமுகமாக அண்ணாதுரை அதில் கூறியிருப்பதைக் கண்டுபிடித்தான். 'புயலார்' என்ற சொல் சம்பத்தை மனத்திற்கொண்டே உருவாக்கப் பட்டிருப்பது அவனுக்கும் தோன்றிற்று. உடனே சம்பத்துக்கு டெலிஃபோன் செய்தான். அவர் வீட்டில் இருந்தார். அவன் புறப்பட்டுச் சென்றான்.

'திராவிட நாடு' இதழைக் கொடுத்து அதனைப் படித்துப் பார்க்கச் சொன்னான். தன்னைத்தான் அது குறிக்கிறது என்பதை அவரும் உணர்ந்துகொள்ள வெகுநேரம் ஆகவில்லை! சம்பத் சிறிது நேரம் யோசித்தார். பிறகு "நானொரு கட்டுரை எழுதித் தருகிறேன். அதைத் 'தென்றல்'லில் போடுவீர்களா?" என்று அவனிடம் கேட்டார். உடனே, "கொடுங்கள் பிர சுரிக்கிறேன்!" என்றான் அவன்.



ஊரில் எந்தப் பரபரப்பு ஏற்பட்டாலும் அதற்குத் தான் தான் காரணமாக இருக்க வேண்டும் என்பதில் அவனுக்கு அலாதி ஆசை.

"நாளைக் காலைக்குள் தருகிறேன்!" என்றார். பத்திரிகை வெளிவருவது ஒரு நாள் தாமதிக்கப்பட்டது. மறுநாள் காலையில் அவருடைய கட்டுரை வந்து சேர்ந்தது. சம்பத் கொஞ்சம் வெகுளி என்பது அந்தக் கட்டுரையில் இருந்து தெரிய வந்தது. அண்ணாதுரையைப்போல் முழுக்க முழுக்க மறைமுகமாக அவரால் எழுத முடியவில்லை. கட்டுரையின் தலைப்பையே 'அண்ணாவின் மன்னன்' என்று கொடுத்துவிட்டார்.

அண்ணாதுரையின் மறைமுகக் கட்டுரைக்கு நேரடியாக அந்தக் கட்டுரை பதில் சொன்னது. நேர் பெயர் கொண்டே அண்ணாதுரையை அவர் கேலி செய்திருந்தார். தென்றலில் வரலாற்றில் அதிகமான பிரதிகள் அந்த இதழ் விற்பனையாயிற்று.

அண்ணாதுரை அதைப் படித்துவிட்டார் என்று அவன் கேள்விப்பட்டான். அதைப்பற்றி என்ன நினைக்கிறார் என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை! அவர்களுக்கு இந்தத் தண்டனை வேண்டியதுதான் என்று மகிழ்ச்சியடைந்தான்.

அதன் எதிரொலி என்ன என்பதைப் பத்திரிகைகளிலும் கண்டுகொள்ள முடியவில்லை!

இந்த நிலையில் தென்றலில் கட்டுரை வெளிவந்த ஏழாவது நாள்–வேலூரில் கட்சியின் பொதுக்குழு கூடுவதாக இருந்தது.

(சரிதம் தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

# காலி

'ச்சே...எவ்வளவு கூட்டம்' நித்தியா அலுத்துக்கொண்டாள். அன்று பஸ்ஸில் அளவுக்கதிகமாகவே கூட்டம் காணப்பட்டது. "முன்னுக்குப் போங்க... முன்னுக்குப்போங்க..." கொண்டக்டர் கத்தினார். சனங்கள் அதிகமாக திணிக்கப்பட்டும், வாசல் வழியே சிலர் பிதுங்கிக் கொண்டுமிருந்தார்கள். நித்தியா தட்டுத் தடுமாறி ஓரத்துக் கம்பியைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.



அவள் படும் அவஸ்தையைக் கண்டு, அவள் அருகில் சீற் ஓரத்தில் அமர்ந்திருந்த ஓர் இளைஞன் அவளைப் பார்த்து சிரிப்பொன்றை உதிர்த்தான். அவளோ வெடுக்கென்று முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

அவன் பார்ப்பதற்கு அழகாகவே இருந்தான். கையில் ஏதோ ஆங்கில பத்திரிகையை வைத்திருந்தான். நித்தியா அப்போதுதான் கவனித்தாள், அவன் கால் அவளின் காலை உரசிக்கொண்டிருந்தது. பஸ்வேறு குலுங்கிக் கொண்டே சென்றது. அவளுக்கோ எரிச்சலாக இருந்தது. 'இந்த ஆண்களே இப்படித்தான். கொஞ்சம் அழகான பெண்களைக் கண்டால் உரசிப்பார்க்கிறார்களே...' முணுமுணுத்தாள்.

இப்போது அவன் கால் அவள் கால் மேல் பதிந்திருந்தது. அவள் தன் காலை எடுத்து வேறு இடம் வைத்திருக்கவும் ஒரு சிறு இடம்கூட இல்லாதிருந்தது. தன் மறு காலை எப்படியோ சிரமப்பட்டு எடுத்து, தான் அணிந்திருந்த ஹீல்சால் அவன் கால்மேல் ஒரு மிதி மிதித்தாள். அப்போதும் அவன் தன்காலை எடுத்தபாடாகத் தெரியவில்லை.

"ஏய்..மிஸ்டர் உங்களுக்கு கால்வைக்க வேறு இடம் கிடைக்கவில்லையா...? நானும் அப்போதிருந்து பார்த்துக் கொண்டேயிருக்கின்றேன். காலை உரசிக்கொண்டே வாரீங்க..." அவள் அங்கு திட்ட, கூட்டம் அங்கு நோட்டம் விட்டது. அப்போதுதான் அவன் தன் காலை வெடுக்கென்று எடுத்துக்கொண்டான். கூட்டம் வேறு அவனைத் திட்டித் தீர்த்தது.

வெட்கத்தில் அவன் தலை குனிந்திருந்தான். பஸ் கடைசி இடம் வரும்வரை ஆளாளுக்கு அவனைத் திட்டினார்கள். எல்லோரும் இறங்கிய பிறகு கடைசியாக அவன் இறங்கினான்.

இறங்கியதும் அங்குமிங்கும் பார்த்தான். சற்று தூரத்தில் நித்தியா போய்கொண்டிருந்தாள். வேகமாக அவன் நடையைக்கட்டி அவள் அருகில் சென்றான்... "ஹலோ, மேடம் ஒரு நிமிஷம்.." என்றான். என்ன..? என்ற தோரணையில் அவனைப் பார்த்து முறைத்தாள்.

"பஸ்ஸில் உங்க காலை மிதித்ததற்கு ஸொரி.. நான் வேணுமென்றே செய்யல... தெரியாமல் அப்படி நடந்துவிட்டது. நீங்க நினைக்கிற மாதிரி எந்தவித கீழ்த்தரமான எண்ணமும் எனக்கில்லை... ஏன்னா... இந்த காலுக்கு எந்தவிதமான உணர்ச்சியுமில்லை. ஒரு விபத்தில என் கால் போயிடுச்சு. இப்போ நான் பொருத்தியிருக்கிறது வெறும் மரக்கால்தான். நான் பஸ்ஸிலேயே சொல்லியிருப்பேன். எல்லோரும் ஊனம் என்று என்னில அனுதாபப்படுவார்கள். யாரும் என்மேல அனுதாபப்படுவது எனக்கு பிடிக்காது...!"

அவன் போய்விட்டான்.

நித்தியா மரத்துப்போய் நின்றிருந்தாள்.

**என். லோகு**

# மனைவி இரகசியம்

கேட்டேன் பதிலில்லை. சுள்ளென்று கோபம். கையிலிருந்த கோப்பி கொதித்தது. அதை அப்படியே அவள் முகத்தில் வீசிவிடலாமா? என்ற ஆத்திரம்!

அடக்கினேன். கணவனென்ற மரியாதையே இல்லை. மதித்துப் பேசினால் என்ன?

பத்து நிமிடமிருக்கும். "உன் தம்பி வந்தானா?" எனக் கேட்டு. காதில் விழாதது போல மெத்தனிக்கிறாள். முகிலா.

உள்ளூர் சம்பந்தம் வைத்துக்கொண்டது தப்போ? அப்படித்தான் தோன்றுகிறது.

முகிலா!

அதே ஊர்ப்பெண். படித்தவள்.

நன்றாகவே இருப்பாள். அழகில் குறை சொல்ல முடியாது. அலுவலகம் போய் திரும்பும் பொழுது, 'டைப்' பேப்பரைச் சுருட்டி, ஊதுவர்த்திக் குழல் போல் கையில் பிடித்துக் கொண்டு அலுங்காமல் வருவாள்.

நான்...

அவ்வூரிலிருந்து அருகிலுள்ள டவுனிற்கு போவேன். அங்குதான் அலுவலகம். சைக்கிளில் போக கொஞ்சம் தூரம்தான். இருப்பினும் பிரச்சனை இல்லை.

என் பார்வையில் முகிலா பட்டது போலவே, அம்மாவின் பார்வையில் பட்டுவிட்டாள். மனத் திருப்தி. உடன் பேச்சை ஆரம்பித்தாள்.

மளமளவென காரியம் நடந்தது. பெண் பார்த்தல், நிச்சயம் செய்தல், திருமணம் என்பதெல்லாம் ஒரு மாதத்திற்குள் முடிந்தது. அதிசயம் போல் நடந்தது.

முகிலாவிற்கு சகோதரர் சகோதரி உண்டு. இங்கு மைத்துனரில் ஒருவன் அடிக்கடி வருவான். வரும் ஒவ்வொரு முறையும் பணம் தருவதை நானே பார்த்திருக்கிறேன். ஆரம்பத்தில் எதையும் கண்டு கொள்ளவில்லை.

ஆனால், அதுவே நாளாக நாளாக உறுத்தலாய் மாறியது.

அவளுக்கென்று ஒரு பெட்டி உள்ளது. அவள் இல்லாத சமயங்களில் அதை குடைவேன். பேர்ஸ் இருக்கும். ஐநூறு ரூபாய் இருக்கும். ஆனால், என் மைத்துனன் வீட்டிற்கு வரும் மறுநாளே அந்தப் பணம் இருக்காது.

மனைவி என்று நம்பி, வாங்கும் சம்பளத்தை அப்படியே அவளிடம் கொடுத்து விடுவேன். அதில் நூறு, இருநூறு என்று மிச்சப்படுத்தி... தம்பியிடம் கொடுத்தனுப்பி விடுகிறாளா?

'உம்'மென்றால் பட்ஜெட் விலையேற்றம். காலம் இருக்கும் இருப்பில் சிக்கனமாய் இருந்தால்தானே குடும்பம் நடக்கும்?

இப்படி தம்பிக்கும், தாய் வீட்டிற்கும் தானம் செய்தால், பிழைப்பில் மண்தான்.

அலுவலகம் விட்டு வந்ததும் அதைத்தான் கேட்டேன்.

"முகிலா உன் தம்பி வந்தானா?" என்றேன்.

பதில் சொல்லவில்லை.

"முதலில் கோப்பியை குடிங்க... பக்கத்து தெருவுலேர்ந்து அவன் வர்றது அவ்வளவு முக்கியமான விஷயமா?" என்று எதிர்க்கேள்வி போட்டு பதிலை மழுப்பிவிட்டாள்.

கோப்பியை கொடுத்து, குளிக்கப் போய் விட்டாள். அறைக்குள்ளே நீர் கொட்டியது. வெளியே வர நேரம் பிடிக்கும். அதற்குள் அதைப் பார்த்துவிட்டால் என்ன?

அரவமற்று நடந்தேன். சப்தமற்றுப் பெட்டியைத் திறந்தேன். அதில் பேர்ஸ் இருந்தது எடுத்து ஸிப்பை பிரித்தேன்.

'பக்' என்று அதிர்ச்சி. காலையில் தான் பார்த்தேன். முள்ளங்கிப் பத்தையாய் ஐந்து நூறு ரூபாய்த் தாள்கள். இப்பொழுது இல்லை.

அலுவலகம் தேடி எனது நண்பன் ஒருவன் வந்தான்.



"என்னப்பா... உன்னைத் தேடி வீட்டிற்குப்போனேன். நீ அதற்குள் கிளம்பிவிட்டாய். உன் மனைவியும், உன் மைத்துனனும்தான் சரியான இந்த முகவரியைச் சொல்லி, அனுப்பினார்கள்," என்றான்.

திருமணத்தின்போது, சந்தித்தவன். முகிலாவின் தம்பியை நான்தான் அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன். அவனுக்கு நன்றாகவே மைத்துனனைத் தெரியும்.

ஆக.. இன்றும் அவன் வந்திருக்கிறான். காலையில் பார்த்த ஐநூறு ரூபாயையும் 'அம்மா' தாரை வார்த்துவிட்டாள்.

வரட்டும். இதற்கு இன்றே ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். அவனும் இங்கு வருவதைத் தடுக்க வேண்டும். என பொருமியவனாய் பெட்டியை மூடினேன். பழையபடி வந்து, உட்கார்ந்து கொண்டேன்.

அவள் குளித்து உடைமாற்றி வெளியே வந்தாள். கேட்பதற்கு எத்தனித்தபோது, அலுவலகத்திலிருந்து ஒருவர் வந்துவிட்டார்.

கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அவரை முகிலாவிற்கு அறிமுகம் செய்து வைத்து,

"ஒரு நிமிஷம் இருங்க, இப்ப வந்திடுறேன்!" என்றுவிட்டு சைக்கிளை எடுத்தேன். குளிர்பானம் வாங்க கடைக்குக் கிளம்பினேன்.

கடையிலிருந்த பெண், "வாங்க வாங்க முகிலா எப்படி இருக்கா? வெளியிலயே அனுப்பாம வச்சிருக்கிறீங்க. ஆனாலும் நீங்க ரொம்பக் கொடுத்து வச்சவர்," என்றாள்.

அவளும் முகிலாவும் நெருங்கிய தோழிகள். நான் இருக்கும் எரிச்சலான நிலையில் அறியாது... 'இவள் என்ன மகிழ்கிறாள்?' என நினைத்து,

"நீங்க என்ன சொல்றீங்க?"

"தெரியாத மாதிரி கேட்குறீங்களே? நீங்க சைக்கிள்லே அவ்வளவு தூரம் போறதையும், கஷ்டப்படுறதையும் பார்த்து... அதைத் தாங்கிக்க முடியாம மோட்டார் சைக்கிள் வாங்கித் தரதுக்காக மாசம் 500 ரூபா சீட்டு போடுறா... உங்க மச்சினன் மூலமா மாசம் தவறாம பணம்கொடுத்து அனுப்பிடுறா.. அடுத்த மாசம் முடிஞ்சா இருபதாயிரம் கிடைக்கப்போகுது.. நாங்க சீட்டுப்பிடிக்கிறது உங்களுக்குத் தெரியாதா?"

"............"

"இப்ப சொல்லுங்க! இவள் மாதிரி ஒருத்தியை மனைவியா அடையக் கொடுத்து வச்சிருக்கணும் தானே?" எனக் கேட்டு, குளிர்பானம் தந்தாள்.

"ஆ...மா" என அழுத்தமாய் கூறிவிட்டு, அங்கிருந்து வேகமாய் சைக்கிளை மிதித்தேன். ஐஸ் கட்டியை வாயில் அடக்கும் சிறுவனைப் போல... மனம் குதூகலித்தது. நெஞ்சு ததும்பி கண்களில் நீர் ததும்பியது. 'இவளல்லவா மனைவி?' என மனம் உச்சரித்தது.

**தமிழழகன்**

# கொலுசு

வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்நுழைந்த சிவலிங்கத்தாரை அவரது மனைவி முகமெல்லாம் பல்லாகக் நின்று வரவேற்றாள். சிவலிங்கத்தாரின் கைகளில் இருந்த பல் வகை சாமான்களும் அவரது இம்மாத சம்பளத்தையும், மொத்தமாகக் கிடைத்த 'கஷ்டப் பிரதேச உத்தியோகத்தர்களுக்கான' கொடுப்பனவையும் காட்டி நின்றது. பொருட்களை வாங்கிக்கொண்ட மனையாளைப் பார்த்து ஒரு பொன் முறுவலாக சிரித்துக்கொண்டார்.

அவ்வேளை, கட்டிய மேற்பற்கள் கழன்று விழாவண்ணம், நாக்கால் சிறு முண்டும் கொடுத்துக் கொண்டார்.

'இந்த டிசம்பரோட இனியும் சேவை நீடிப்பு கேக்கேலாது' என்று எங்கிருந்தோ ஓர் அசரீரி ஒலித்ததை உணர்ந்து கொண்டார். இருந்தாலும் ஒரு தெம்பு சிவலிங்கத்தாருக்கு!



'தடவுற மாதிரி தடவுனா முதலை 'ஆ' வெண்டத்தான் வேணும்.' மேலும் இரு வருடங்கள் சேவை நீடிப்புக் கேட்பது முயற்கொம்பாகத் தெரியவில்லை அவருக்கு!

ஒவ்வொரு பார்சலாக பிரித்துக்காட்டி மனைவியை ஆனந்தத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தார்.

இறுதிப் பார்சல்! பெட்டியைத் திறந்து மெதுவாக நீட்டினார் மனைவியிடம்! ஒரு சோடி கொலுசு!

"இந்த வயசுபோன காலத்தில இது என்னத்துக்கு?" விரக்தியோடு அலுத்துக் கொண்ட மனைவியின் கால்களில் தானே பூட்டிவிட்டார்.

இவைகளையெல்லாம் சமையல் கட்டில் நின்று பார்த்துக் கொண்டிருந்த வேலைக்காரி வாணிக்கு உள்ளூர' நகைப்பாயிருந்தது. கள்ளச்சிரிப்புடன் தன் மனைவிக்குத் தெரியாதவாறு சமையல் கட்டில் நிற்கும் வாணியை நோக்கி கண்களையும் சிமிட்டி விட்டுக்கொண்டார் சிவலிங்கத்தார்!

'இப்படியே இவண்ட கட்டுப்பல்லு நொறுங்க இடிக்க வேண்டும் இவண்ட வாயில!' வாணியால் இப்படி நினைக்க முடியுமே தவிர வாய் திறக்க முடியவில்லை.

வாணியின் கிராமத்தில், பாதுகாப்பிற்காகவும், சிவில் நிருவாகத்திற்காகவும் வந்தவர்கள்- அப்பகுதியையே திறந்த வெளிச் சிறைக்கூடமாக மாற்றியிருந்தார்கள்.

அடுத்தடுத்த சம்பவங்கள் அப்பகுதிப் பெண்களுக்கு அச்சத்தையூட்டின. விடுவிக்கப் பட்ட பகுதியில் 'விலங்குகளால்' கைதாகி இருந்தார்கள் பெண்கள்! இளம் பெண்களை வைத்திருக்கும் ஒவ்வொரு விதவைத் தாய்க்கும் ஏற்படும் சராசரி எண்ணம் வாணியின் தாய்க்கு ஏற்படாது என்பதில் நியாயம் இல்லை.

அதுதான்- நகரத்தில்! 'அல்லுத் தொல்லு' இல்லாத- பிள்ளைகளை திருமணம் செய்துகொடுத்துவிட்டு- தனியே வாழும் ஒரு வயோதிப தம்பதியினரிடம்- பாதுகாப்பின் பொருட்டு வீட்டு உதவியாளராக சேர்ந்தாள் வாணி.

நிலவிற்கு பயந்து பரதேசம் வந்த வாணியால், இந்த வயோதிப சிவலிங்கத்தாரின் நடவடிக்கைகள், வெந்த புண் வேதனையாகத் தகித்தது வாணிக்கு!

இந்த 'பெரிய மனிதனின்' போலித்தனத்தை அம்பலப்படுத்தினால் இங்கும் இல்லை- அங்கும் போகமுடியாது.

'இவனுகளுக்கெல்லாம் அதுதான் முடிவு. அந்த முடிவு தூரத்தில் இல்லை.' அடிக்கடி இந்த ஆதங்கத்தை ஆறுதலுக்காய் உச்சரித்துக்கொள்வாள்.

"வாணி!" என்ற குரல் கேட்டதும் சட்டி, பானைகளைக் கழுவிக் கொண்டிருந்த வாணி, கைகளைத் தன் பாவாடையில் துடைத்தவாறு, "என்ன ஐயா?" என்று எழும்பிக்கொண்டாள்.

"இல்ல வாணி! என்னத்துக்கு இந்த கிழட்டு மனிசிக்கு கொலுசு வாங்கிக் கொடுத்தனான் தெரியுமே?" என்று கூறிய சிவலிங்கத்தார், பக்கத்து வீட்டிற்குச் சென்ற அவர் மனைவி வந்திடுவாளோ என்ற ஐயத்தில் வாசலை நோக்கி ஓர் எச்சரிக்கைப் பார்வையும் வீசியிருந்தார்.

எதுவுமே கூறமுடியாமல் திணறிக் கொண்டிருந்தாள் வாணி.

அவளின் எண்ணம், பார்வையெல்லாம் வாசலில்தான்!- அவர் மனைவி தாமதியாது வந்திடவேண்டும்.

தொடர்ந்தார் சிவலிங்கத்தார்.

"மனிசியின்ர காலில நான் கட்டிவிட்ட கொலுசு, அவ வாறபோது 'சலார்-சலார்' எண்டு சத்தம் கேட்கும், அதுக்கு ஏத்தாப்போல நாம நடந்துக்கலாம்!" என்று சிரித்தவாறே வாணியின் கன்னத்தைக் கிள்ளினார்.

பயத்தால் உறைந்து நின்றாள் வாணி. அவளால் எதுவுமே செய்ய முடியவில்லை.

இறுகிப்போயிருந்த இதயத்தினூடாக, ஓர் ஈனக் குரல்- தன்கோரைப் பற்களுடனும், கூரிய நகங்களுடனும் பீறிட்டுப் பாய்ந்து வந்தது, மௌன பாஷையாக!

**கனகசபை தேவகடாட்சம்**

# ஈடு

எங்கள் வீட்டை எதிர்த்தாற்போல ஒழுங்கைக்கு மறுபுறமாக இருந்த வீட்டில் காரசாரமான விவாதம் களைகட்டிக் கொண்டிருந்தது.

சீட்டுத் தகராறுகள் என்றால் கேட்க வேண்டுமோ? மேற்சட்டைக் கையை மடித்தபடி தலையை உயர்த்தி ஒரு நோட்டம் விட்டேன். இரண்டு பொலிசார் ஒரு பெண்ணுடன் உரையாடுவதும் அவள் யார் யாரையோ சாடுவதும் புரிந்தது. தலையில் காயத்துக்குக் கட்டுப் போட்டிருந்தாள். அவள்தான் அந்த ஊரின் பெயரெடுத்த சீட்டுக்காரி என்று தெரியும். ஊரில் பலரை ஏப்பம் விட்டு விட்டாள். இப்ப கொஞ்சம் நிலைமை 'இசகு பிசகாக' மாற ஊர் விழித்துக் கொண்டுவிட்டது.

அம்மா விபரித்தாள். "தாச்சியாக நின்று பலருடைய சீட்டை தானே பெருங்கழிவில் எடுத்து விட்டாள். சீட்டு எடுத்த சிலருக்கும் பெரும் வட்டி வாங்கி தருவதாக உறுதி கூறி காசை மடக்கிவிட்டாள். ஆடம்பரமும் அதிக வட்டியும் அவளையே மூழ்கடித்து விட்டது. ஊர்ச்சனம் பொறுக்க மாட்டாமல் அடித்து நேற்று மண்டையையும் உடைத்துவிட்டது."



"ஏன் அம்மா, அவள் கொடுக்க வேண்டிய பணத்துக்கு பொலிஸில் முறைப்படுகிறது தானே? ஏன் ஒரு பெண்ணுக்கு அடிப்பான்?"

நான் எனது அனுதாபத்தை முன் வைத்தேன்.

"பொலிஸில் முறைப்பாடு செய்ய சனம்போகாமலில்லை. ஆனால் சீட்டுக்கட்டுவது சட்ட விரோதமாம். ஆனபடியால் வழக்கை எடுக்க முடியாதென்று கூறி விட்டினம்."- அம்மா விளக்கினாள்.

"அப்ப இப்ப ஏன் பொலிஸ்காரர் வந்திருக்கினம்?"- நான் வினவினேன்.

"அது சீட்டுப் பிரச்சனையாலை மண்டை உடைஞ்சதைப்பற்றி விசாரிக்க."- அம்மா தெளிவுபடுத்தினாள்.

எனக்கு என்னுடைய மண்டையை எங்காவது மோதி உடைக்கலாமா என்றிருந்தது!

**வீ.என். சந்திரகாந்தி**

## இழப்பு

**1680**-ஏப்ரல் மாதம்
அந்த 53 வயது ஆலமரம்
சாய்ந்து கிடந்தது!

வீரசிவாஜி என்று
வரலாறு தலைவணங்கும்
மராட்டிய மன்னன்!

மொகாலய ஆட்சியை
எதிர்த்து கிளர்ந்த
உச்சிச் சூரியன்!

பிரிந்து கிடந்த,
உட்பகையால்
சுருங்கிக் கிடந்த
மராட்டிய மக்களை
அடம்பன் கொடியாக
திரண்டெழ வைத்த
தடந்தோள் மன்னன்!

எதிரியும்
மதிக்கும் வீரன்!
எதிரியையும்
மதிக்கும் வீரன்!

எந்த எதிரியாலும்
வேந்தன் சிவாஜியை
வீழ்த்த முடியவில்லை!

வயிற்றுப் போக்கு
எமனாக வந்து
படுக்கையில் தள்ளியது!

மருத்துவர்கள்
போராடிக் களைத்தனர்!

"சரித்திரத்தை மாற்றியவனை
வைத்தியத்தால்
காப்பாற்ற முடியவில்லையே!"
மக்கள் புரண்டழுதனர்!

சிவாஜிக்கு அருகே
சோகம் பூசிய முகத்தோடு
திருமகன் சாம்பாஜி!

கண் திறந்து பார்க்கிறார்
மண்காத்த மாமன்னன்!

"அப்பா! என் அப்பா!"
மைந்தன் விழிகளில்
நீர்வீழ்ச்சி!

வீர சிவாஜியின்
அழுத்தமான உதடுகள்
திடமாக அசைகின்றன!

"மகனே! என்வாளை
எடுத்துக் கொள்!

தாய்நாட்டின்
சுதந்திரமும், தன்மானமும்
இரு கண் என்பதை
ஒரு போதும் மறவாதே!"

சாம்பாஜி நடுங்கும்
கரங்களால் வாள்
எடுத்துக் கொள்கிறான்!



ஈர விழிகளில்
ஒற்றிக் கொள்கிறான்!

திருப்தியான புன்னகை
சிவாஜியின் உதட்டில்!
கடைசியாக ஒரு தடவை
விருப்பமாக பார்க்கிறார்
மைந்தனின் வதனத்தை!

தந்தையின் விரல்களோடு
மைந்தனின் விரல்கள்
கோர்த்துக் கொள்கின்றன!

"போய் வருகிறேன் மகனே
தாய் நாடு வாழ்க!"

மாவீரனின் மூச்சு
நின்று போனது!

ஓயாது உழைத்த
இதயம் ஓய்ந்துவிட்டது!

களத்தில் சுழன்ற
வீரவிழிகள்
தம் ஒளியை
நிறுத்திக் கொண்டன!

சாம்பாஜி
குழந்தையாய் தேம்பினான்!

சரித்திர ஏடு
சிவாஜியின் வரலாற்றை
வீர அத்தியாயமாக
வரைந்து கொண்டது!

மண்ணில் இருந்து
மறைந்த மாவீரன்
மக்கள் மனதில்
நிறைந்து கொண்டான்!

இனி சிவாஜிக்கு
எப்போதும் சாவில்லை!

வருங்காலம் அவன்
திருநாமம் உச்சரிக்கும்!

சாம்பாஜி மன்னனாக
அரியாசனம் ஏறினான்!

மொகலாயர்களோடு
தொடர் மோதல்கள்!
வெற்றியை தவிர
வேறொன்றும் இல்லை!

"தந்தைபோல் மைந்தன்"
மக்கள் புகழ்ந்தனர்!

சாம்பாஜி தந்தையின்
பாதையில்தான் நடந்தான்
ஒரே ஒரு இடத்தில்தான்
இடறுப்பட்டுவிட்டான்!

வெள்ளைச் சேலையில்
கறுத்த புள்ளிபோல,
வீரமன்னனின் விசால மனதின்
ஓரத்தில் ஒரு பலவீனம்!

பெண்கள்! மேலும்
பெண்கள்!

அழகான பெண்களுடன்
தூங்காது போனால்
மன்னன் ஏங்கிப்போவான்!

மொகாலய சக்கரவத்திக்கு
வேவுத் தகவல் கிடைத்தது!

சாம்பாஜி
சம்போகப் பிரியன்!"

தகவல் கிடைத்ததும்
வலை தயாரானது.

வலை தயாராவது
தெரியாமல் மன்மத
கலையில் மூழ்கினான்
மன்னன் சாம்பாஜி!

கவி கைலாஷ்
சாம்பாஜியின் நண்பர்!

அவர் கவிபாடுவார்
இவர் கனிதேடுவார்!

"முன்னிரண்டு கனி
பின்னிரண்டு கனி
நால்வகைக் கனி
அதன் சுவை தனி!

கண்ணிரண்டு போதவில்லை
கையிரண்டும் போதவில்லை
கனிகளினை கண்டபின்னர்
கண் உறக்கம் கொள்ளவில்லை!

மெய்யுருகி நின்று
நீயும் நானும் கலந்தால்
நெய்யுருகி போனதுபோல
நாமிருவர் ஆவோமடி!

கையணைக்க, கால் அணைக்க
கொய்யாத கனி கிடைக்க
மையலில் மனம் மயங்க
தையலாள் உமைத் தைப்பாள்
தன்னோடு உமைத் தைப்பாள்!

கவி கைலாஷ்
காமச் சுவைகொட்டி
கவிதை தீட்டுவான்!"

கைலாஷ் எழுதியது
கட்டிலில் காவியமாகும்!

1689 பெப்ரவரி 11
மகாராஷ்டிரத்தின்

## இலக்கியயநயம்

இரத்தினகிரியில் மன்னன்
சித்திரமேனிகளை
தழுவிக் கொண்டிருந்தான்!

வாள் ஏந்த வேண்டியவன்
வனிதையரின்
வளைவு நெளிவுகளை
ஆராய்ந்து கொண்டிருந்தான்!

இதழ்கள் பலவிதம்
அமுதும் பல ரகம்
மலர்கள், பல மணம்
மரகதமும் பல இதம்!

அனுபவித்து
ஆழ்ந்து போயிருந்தான்!

ஒற்றர் படை
தகவல் கொடுக்க,
மொகாலயரின்
அதிரடிப் படை
புயலென வந்து
முற்றுகையிட்டது!

சாய்ந்து கிடந்த
அழகியின்
மேல் இதழையும்
கீழ் இதழையும்
ஒவ்வொன்றாய் சுவைத்து
பொன் வண்டாய் மாறிய
சாம்பாஜியின் முதுகில்
வாள்முனைகள் உரசின!

"நகராதே மன்னா!
நாம் உன் எதிரிகள்
ஈவிரக்கம் பார்க்கோம்
இறுகச் செருகிவிடுவோம்!"

சாம்பாஜியும்-அவரது
25 மெய்க்காவலர்களும்
மொகாலயப் படையால்
சிறைப்பறவைகளாகினர்!

மாபெரும் மராட்டிய
சாம்ராஜ்யம்
மண்ணோடு மண்ணாகியது!

வீர சிவாஜியின்
வாரிசு
ஒழுக்கம் தவறியதால்
வழுக்கி விழுந்தது!

வீரம் இருந்தும்
விவேகம் இருந்தும்
ஒழுக்கம் போனதால்
ஒழிந்தான் சாம்பாஜி!

உயிரைவிட உயர்ந்தது
ஒழுக்கம்!
அதனையே விட்டாய் மன்னா
அதனால் யாவும் இழந்தாய்!"
மக்கள் அழுதனர்!

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்!"**

அதிகாரம்: 14, குறள்:131

**தருவது ரசிகன்**

---

கொஞ்ச நேரம் கழித்து பொலிசாக நடித்தவன்: "இந்த விளையாட்டு போதும், வேறு விளையாட்டு விளையாடலாம். நான் வண.பிதாவாக இருக்கிறேன். நீதான் தேவாலயத்துக்கு வருபவன். நான் உனக்கு ஆசீர்வாதம் செய்வேன்!" என்று கூறினான்.

உடனே அடுத்தவன்: "போடா, நீதான் டாக்டராகவும், பொலிசாகவும், வண பிதாவாகவும் நடிப்பாயா? இந்த முறை நான்தான் வண.பிதாவாக நடிப்பேன்!" என்று கோபமாகக் கூறினான்.

மற்றவன் சிறிது நேரம் யோசித்து விட்டுக் கூறினான்: "சரி! உன் ஆசைப்படி நீயே வண.பிதாவாக நடி. ஆனால் நான் கடவுளாக நடிப்பேன்!"

அப்படிக் கூறிய சிறுவன்தான் பின்னர் மாவீரன் நெப்போலியன் என்றழைக்கப்பட்டான்.

✉ ✍

**★ தலைக்கனம் பிடித்தவர்களை திருத்தவே முடியாதா?**

எஸ். ஜெசி, மன்னார்.

ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லரின் வலதுகரமாக விளங்கியவர் ஹெர்மன் கோரிங் என்னும் போர்த்தளபதி. அவர் ஒருமுறை ஜெர்மன் நகர ரயில்வே நிலையத்தில் ஒரு நண்பரை வரவேற்கக் காத்திருந்தார்.

அப்போது எதிரே நடந்துவந்த செல்வந்தர்மீது தவறுதலாக இடித்துவிட்டார். மன்னிப்புக் கேளாமல் சென்றார்.

அதற்கு செல்வந்தர் ஹெர்மன் கோரிங்கை நிறுத்தி, "என்னிடம் மன்னிப்புக் கேளுங்கள்!" என்று கூறினார்.

ஆனால் கோரிங் கர்வத்துடன்: "நான் ஹிட்லரின் தளபதி ஹெர்மன் கோரிங்." என்றார்.

உடனே அந்தச் செல்வந்தர்: "ஓ...நீங்கள் ஜெர்மன் படைத்தளபதியா? தளபதி என்றால் இப்படித்தான் அநாகரிகமாக நடந்து கொள்வார்கள் என்று எனக்குத் தெரியாது. வேண்டுமானால் நான் மன்னிப்புக் கேட்கிறேன்!" என்றார்.

உடனே தன் தவறை உணர்ந்து தளபதி மன்னிப்புக் கேட்டார்.

✉ ✍

**★ சிந்தியா! கடவுள் ஏன் தீயவர்களையும் உருவாக்குகிறார்? (கள்ளச்சாமியார்கள் உட்பட)**

ஜெ. நித்தியானந்தன், பசறை.

ஆத்திகர்கள் இதற்கு கூறும் விளக்கத்தை அப்படியே தருகிறேன்:

ஒரு மகானிடம் அவருடைய சீடன் ஒரு கேள்வியைக் கேட்டான்.

"மகானே! ஆண்டவன் ஏன் நன்மையையும் படைத்து தீமையையும் படைத்தான்?"

அதற்கு மகான் சொன்ன பதில்: "சீடனே! ஆண்டவன் கெட்டது எதையும் படைக்கவில்லை. எதுவும் நன்மைக்கே. அவர் ரோஜா மலரைப் படைத்ததோடு முள்ளையும் அதற்குப் பாதுகாப்பாகப் படைத்தார். முள்ளுக்கும் பலனுண்டு. முள்ளை எடுத்தால் ரோஜா செடி வரண்டு போகும். உங்களுக்கு மலர் வேண்டுமானால் முள்ளின்மேல் கை படாமல் மலரை எடுக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். அதைச் செய்யாமல் ஆண்டவனை நிந்திப்பானேன்!" என்றாராம்.

இது சரியான பதில்தானா என்பதை நீங்கள் தான் தீர்மானிக்கவேண்டும்.

✉ ✍

## சிந்தியா பதில்கள்

**★ டெண்டுல்கரின் சென்ற ஆண்டு விளாசல் இந்த ஆண்டும் தொடருமா?**

கே. நவரத்தினம், மோதர.

சென்ற ஆண்டில் டெஸ்ட் போட்டியிலும், ஒருநாள் போட்டியிலும் முதலிடம் அவருக்குத்தான். இந்த ஆண்டும் நியூஸிலாந்துடன் டெஸ்ட்டில் சதம் போட்டதுடன் அவரது விளாசல் ஆரம்பமாகி இருக்கிறது.

✉ ✍

**★ சிந்தியா! 'பாட்ஷா'வை 'படையப்பா' முந்துவாரா?**

ம. உதயன், கொழும்பு-09.

இருந்து பாருமப்பா!

✉ ✍

**★ சிந்தியா! ஜெயசூர்யாவுக்கு விவாகரத்து கிடைத்து விட்டதா? அல்லது விஷமத்தனமான பிரசாரமா?**

எஸ். சஞ்ஜீவன், கொழும்பு-10.

இன்னமும் கிடைக்கவில்லை. கோரியுள்ளார். விஷமத்தனம் என்று கூறுவதுதான் விஷமத்தனம்.

✉ ✍



'படையப்பா' படத்தில் ரஜினி

**★ சிந்தியா! கடி ஜோக் ஒன்று கூறுமேன்?**

ஆர். க்விதா, மட்டக்களப்பு.

"ஏ.பி.சி.டி.யில் எத்தனை எழுத்துக்கள்?"

"இது தெரியாதாக்கும் 26 எழுத்துக்கள்."

"தப்பு! நான்கு எழுத்துக்கள். (1) ஏ (2) பி (3) சி (4) டி."

✉ ✍

**★ 'மன்னவரு சின்னவரு' படத்தில் சிவாஜி வித்தியாசமான வேடத்தில் நடிக்கிறாராமே, உண்மையா?**

சிவாஜிப்பிரியன், திருமலை.

உண்மைதான்! சாட்சிதேவையானால் இங்குள்ள படம் பார்க்கவும்! (உங்களுக்கு எத்தனை வயதுங்கோ?)

✉ ✍

**★ சிறு பிள்ளைகளாக இருப்போரின் புத்தி சாலித்தனத்தைக் கண்டு நீங்கள் பிரமித்திருக்கிறீர்களா?**

பா. விஜயகுமாரி, பதுளை.

ஆம்! உங்களுக்கு ஒரு குட்டிக்கதை:

இரண்டு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். ஒருவர் மருத்துவராகவும், இன்னொருத்தர் நோயாளியாகவும் நடித்தனர்.

டாக்டராக நடித்தவன் அடுத்த தடவை பொலிசாக நடித்தான். நோயாளியாக நடித்தவன் திருடனாக நடித்தான்.



'மன்னவரு சின்னவரு' படத்தில் சிவாஜி

**★ தமிழக அரசும், இந்திய அரசும் புலிகளை கண்காணிக்க புதிய ஏற்பாடுகள் செய்துள்ளதாமே?**

வி. மகேஸ்வரநாதன், கொழும்பு-06.

'இந்து' பத்திரிகை கொஞ்சக் காலமாக இந்திய அரசு செய்யவேண்டும் என்றுதான் எழுதுவதையெல்லாம் செய்தியாகப் போட்டு வருகிறது. அதில் ஒரு செய்திதான் அதுவும்!

✉ ✍

**★ சிந்தியா! அரட்டை அரங்கத்திற்குப் போட்டியாக நம்நாட்டில் என்ன நடத்தலாம்?**

செல்வி இ. மரியா, தெகிவளை.

குறட்டை அரங்கம்!

✉ ✍

**★ அவுஸ்திரேலியாவில் இலங்கை அணி கிண்ணம் பறிக்குமா?**

எம். ரவிச்சந்திரன், கொழும்பு-12.

போகிற போக்கைப் பார்த்தால் யாரிடமாவது கிண்ணத்தைப் பறித்துக்கொண்டு தான் வரவேண்டும் போலிருக்கிறது!

✉ ✍

**★ வடமேல் மாகாண சபைத் தேர்தலில் வன்முறைகள் தலைவிரித்தாடுகிறதே?**

எம். நஸ்ரீன், புத்தளம்.

அரசியலும் வன்முறையும், வெட்டிப் பிரிக்க முடியாத இரட்டையர் ஆகிவிட்டன!

---

ஸ்போர்ட்ஸ்

## பாகிஸ்தான் அணிக்கு எதிர்ப்பு

பதினொரு வருடங்களுக்குப்பின் இந்தியாவில் டெஸ்ட் போட்டிகளில் விளையாட பாகிஸ்தான் அணி வருவதை, சிவசேனை எதிர்த்து வருகிறது. அத்துடன் "பாகிஸ்தான் அணியை இந்தியாவில் எந்தவொரு இடத்திலும் விளையாட விடமாட்டோம்!" என்றும் சிவசேனை அமைப்பு கூறியுள்ளது.



இதன் முதற்கட்ட எச்சரிக்கையாக, முதல் டெஸ்ட் போட்டி நடைபெறும் டெல்லி பெரோஜ்ஷா கோட்லா மைதானத்தைப் பள்ளம் தோண்டி நாசப்படுத்தியுள்ளது இந்த அமைப்பு. அதுமட்டுமன்றி சிவசேனைத் தொண்டர்கள் அங்கிருந்த, மைதான ஊழியர்களையும் தாக்கினார்கள்.

எனினும் இந்தியா-பாகிஸ்தான் டெஸ்ட் போட்டிகள் திட்டமிட்டப்படியே நடைபெறும். அதிலும் முதல் டெஸ்ட் போட்டி, சேதமாக்கப்பட்ட டெல்லி மைதானத்திலேயே நடைபெறும் என்றும், சேதமாக்கப்பட்ட மைதானம் சீர் செய்யப்பட்டு வருகிறதெனவும் இந்தியா தரப்பில் கூறப்பட்டுள்ளது.

சிவசேனை அமைப்பின் இச்செயலுக்கு, இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உட்பட இந்திய முன்னாள் வீரர்களான கபில்தேவ், மன்சூர் அலிகான் பட்டௌடி, பாகிஸ்தானின் இம்ரான் கான், வாஸிம் அக்ரம் போன்றோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

1991ம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மும்பாயில் விளையாடவிருந்த போட்டியொன்றும் இதேபோன்று சிவசேனை அமைப்பால் மைதானம் சேதமாக்கப்பட்டு, போட்டி நடைபெறாமல் போனதும் குறிப்பிடத்தக்கது.

## 'லபக்' சாதனை

அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் கேப்டன் மார்க் டெய்லர் டெஸ்ட் போட்டியில் அதிக கேட்ச்கள் பிடித்து உலக சாதனை புரிந்துள்ளார்.

அண்மையில் இங்கிலாந்திற்கெதிராக 'ஆஷஷ்' கோப்பைக்கான இறுதி டெஸ்ட் போட்டி சிட்னியில் நடைபெற்றது. இப்போட்டியில் இங்கிலாந்து வீரர் மார்க் ராம்பிரகாஷ், மெக்கிராத்தின் பந்து வீச்சில் டெய்லரிடம் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார்.

இது டெய்லர் பிடிக்கும் 157வது கேட்ச் ஆகும். விக்கெட் கீப்பர் தவிர்ந்த ஒரு வீரர் பிடித்த அதிக கேட்ச்கள் என்ற சாதனையை டெய்லர் படைத்துள்ளார். டெய்லருக்கு முன் அதிக கேட்ச்கள் பிடித்த சாதனையாளர் முன்னாள் அவுஸ்திரேலிய கேப்டன் அலன் போர்டர். இவர் 156 கேட்ச்கள் பிடித்திருந்தார்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக கேட்ச் பிடித்தவர்கள் பட்டியலில் முதல் 10 இடத்தில் உள்ள வீரர்கள் அவர்கள் பிடித்த கேட்ச்கள், விளையாடிய போட்டிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:

| வீரர் | நாடு | கேட்ச்கள் | போட்டிகள் |
|---|---|---|---|
| 1. மார்க் டெய்லர் | அவுஸ்திரேலியா | 157 | 104 |
| 2. அலன் போர்டர் | அவுஸ்திரேலியா | 156 | 156 |
| 3. கிரேக் சப்பல் | அவுஸ்திரேலியா | 122 | 87 |
| 4. விவியன் றிச்சர்ட்ஸ் | மேற்கிந்தியத்தீவுகள் | 122 | 121 |
| 5. இயன் பொத்தம் | இங்கிலாந்து | 120 | 102 |
| 6. கொலின் கவுட்ரி | இங்கிலாந்து | 120 | 114 |
| 7. பொபி சிம்ப்ஸன் | அவுஸ்திரேலியா | 110 | 62 |
| 8. வொலி ஹமண்ட் | இங்கிலாந்து | 110 | 82 |
| 9. கேரி சோபர்ஸ் | மேய்கிந்தியத்தீவுகள் | 109 | 93 |
| 10. சுனில் கவாஸ்கர் | இந்தியா | 108 | 125 |

## இரண்டாம் இடம்

விஸ்டன் உலக டெஸ்ட் கிரிக்கெட் போட்டித்தர வரிசையில் 25 புள்ளிகள் பெற்று அவுஸ்திரேலியா முதலிடத்தில் உள்ளது. 19 புள்ளிகள் பெற்று 2ம் இடத்திற்கு முன்னேறியுள்ளது தென்னாபிரிக்க அணி.

3வது இடத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியும், 4ம் இடத்தில் இலங்கை அணியும், 5ம் இடத்தில் இந்திய அணியும் உள்ளன.

பாகிஸ்தான், இங்கிலாந்து, ஸிம்பாப்பே, நியூஸிலாந்து அணிகள் முறையே 6வது, 7வது, 8வது, 9வது இடங்களைப் பெற்றுள்ளன.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 44

## எலியாவின் இறுதிக்காலம்



ஆண்டவருடைய கருத்தை அறிந்து இஸ்ரயேல் மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய முற்பட்ட இறைவாக்கினரான எலியாவின் பிரார்த்தனை பலனளித்தன. பலிபீடத்தில் ஈரமான விறகின்மேல் வைக்கப்பட்ட காளையின் இறைச்சித் துண்டுகளும் முழுமையாக நனைந்து ஈரமாகவே இருந்தது. எலியாவின் வேண்டுதலைத் தொடர்ந்து வானிலிருந்து கீழிறங்கிய தீ இறைச்சியைத் தொட்டது. நனைந்திருந்த விறகுகளும் தீப்பற்றி எரிந்தன.

இந்த அற்புதச் செயலைக்கண்ட பாகாலின் பக்தர்கள் பலர் மனம் மாறினர். இதுவரை தாங்கள் போலி இறைவாக்கினரின் பொய்யுரைகளை நம்பி ஏமாந்து போனதை நினைத்து வருந்தினர். பாகாலுக்காக அமைக்கப்பட்டிருந்த பலிபீடத்தை விட்டகன்று எலியாவினால் உருவாக்கப்பட்டிருந்த பலிபீடத்துக்கு வந்து குழுமினர். தரையில் உடம்பு முழுவதும் படப்புற விழுந்து வணங்கினர். தங்களுடைய கடந்த காலத் தவறுகளை மன்னித்தருளுமாறு ஆண்டவரை வேண்டினர்.

எலியா, மன்னர் ஆகாபுவைத் தன்னிடம் அழைத்தார். தூயமனத்துடன் தரப்பட்ட எரிபலியை ஆண்டவர் ஏற்றுக்கொண்டமையால், உடன் பெருமழை பெய்யப்போவதாக எலியா மன்னரிடம் கூறினார். உடனடியாக அரண்மனைக்குத் திரும்புமாறு கூறினார். அவர் வாக்குப் பொய்க்கவில்லை. மன்னர் அரண்மனை சென்றதும் பெருங்காற்று வீசியது. இடி மின்னலுடன் பெருமழை பெய்தது.

எலியாவின் அற்புதச் செயல்களை எல்லாம் அரசர் மூலமாக அறிந்துகொண்ட அரசி ஈசபேல், மனம்மாறவில்லை. அது நாள்வரை பாகால் தெய்வத்தின் பேரால் இஸ்ரயேல் மக்களைப் பொய்வாக்குரைத்து ஏமாற்றி வந்தவர்களை, மக்கள், தப்பிச் சென்று விடாமல் பிடித்துக்கொன்று குவித்தனர். இத் தகவலும் அரசி ஈசபேலுக்கு எட்டியது. எலியாமீது கடுங்கோபங்கொண்டாள். சில தூதுவர்களை அழைத்து எலியாவிடம் அனுப்பினாள்: "எமது தெய்வமாகிய பாகாலை அவமதித்ததுமல்லாமல், அத்தெய்வத்தின் இறைவாக்குகளைக் கூறுவோரையும் நீ கொல்வதற்கு உடந்தையாக இருந்தாய். ஆகவே உன்னை நாளை இதே வேளை நானும் கொலை செய்வேன்!" என்று கூறுமாறு தூதுவர்களிடம் கூறி அனுப்பி வைத்தாள்.

### எலியாவின் துயரம்

இஸ்ரயேல் மக்களுக்காக இத்தனை நன்மைகளையும் புரிந்த ஆண்டவரை இஸ்ரயேல் மக்களும் மன்னரும் அவர்தம் அரசியும் இன்னும் இழிவாகக் கருதுகின்றனரே, என்று எண்ணிய எலியா மிகவும் துயரடைந்தார். மனம் நொந்து சோர்வடைந்து போனார். இனிமேலும் உயிர் வாழ்ந்து பயனில்லை என்று கருதிய எலியா அவ்விடம் விட்டகன்றார். உண்ண உணவு, குடிக்கத் தண்ணீர் எதையும் தேடாமல் அலைந்தார்.

இறைவன் எலியாவுக்கு மேலும் பல பணிகளைக் கொடுக்கத் தலைப்பட்டார். ஆண்டவரின் தூதர் அடிக்கடி எலியா முன் தோன்றி, அவருக்கு வேண்டிய உணவும் தண்ணீரும் கொடுத்துவந்தார். எலிசா என்றோர் இளைஞனை எலியாவின் உதவியாளனாக ஆண்டவர் கொடுத்தார். எலியாவைத் தொடர்ந்து இஸ்ரயேல் மக்களுக்கு உரிய வழிகாட்டியாக எலிசாவை ஏற்பாடு செய்யும்படி ஆண்டவர் பணித்தார். எலிசா தனது குருநாதர் செல்லும் இடங்களுக்கெல்லாம் உடன் சென்றார்.

இதற்கிடையில் சிரியா நாட்டரசன் இஸ்ரயேல்மீது இருமுறை படையெடுத்தான். பின்னர் சில வருடங்கள் போர் ஓய்ந்திருந்தது. யூதாவின் மன்னராக அப்போதிருந்தவர் யோசபாத்து என்பவர். அவர் இஸ்ரயேல் மன்னர் ஆகாபிடம் வந்தார். இருவரும் ஒன்றிணைந்து சிரியா மன்னன் கைப்பற்றியிருந்த இராமோத்து மற்றும் கிலயாத்து ஆகிய பகுதிகளை மீட்டெடுக்க, போர் தொடுக்க வேண்டும் என்று யோசபாத்து யோசனை கூறினார். அகாபு மீண்டும் பொய்வாக்கினரை அழைத்து ஆலோசனை கேட்டார். அவர்கள் "போரிட்டால் வெற்றி கிடைக்கும்!" என்று பொய் வாக்குரைத்தனர். அவர்களுடைய உரையைக் கேட்டு யுத்தம் செய்யப் போர்க்களம் புகுந்தனர். இஸ்ரயேல் மன்னர் ஆகாபு அரசருக்குரிய ஆடை அணிகள் இல்லாமல் சாதாரண தளபதிபோல் சென்றான்.

### ஆகாபுவின் இறப்பு

சிரியாவின் தேர்ப்படையினர் சாதாரண போர்வீரர்களைத் தவிர்த்து அரசர்களுடன் மட்டுமே போரிட்டனர். யூதாவின் அரசனான யோசபாத்தை, இஸ்ரயேலின் மன்னர் ஆகாபு என்று கருதிய சிரியா வீரர்கள் யோசபாத்தைக் கொல்வதற்காக அணுகியபோது, அவர் எப்படியோ தப்பித்துக் கொண்டார். ஆனால் ஆகாபுவை நோக்கி சிரியா வீரன் ஒருவன் கணை தொடுத்தான். படுகாயமடைந்த ஆகாபு தனது தேரை அப்புறப் படுத்தும்படி தேர்ப்பாகனிடம் கூறினார். போர்க்களத்திலிருந்து அப்பால் கொண்டுவரப்பட்ட தேரிலிருந்த வண்ணம் ஆகாபு மரணமானார். சமாரியாவில் அடக்கம் செய்யப்பட்டார்.

ஆகாபு அமர்ந்திருந்த தேரில் ஆகாபுவின் காயத்திலிருந்து வடிந்த இரத்தம் உறைந்திருந்தது. சமாரியாக் குளத்தில் தேர்க் கழுவப்பட்டது. நாய்கள் சில அங்கே வந்து ஆகாபுவின் இரத்தத்தை நக்கின.

அரசன் ஆகாபு அரசியான ஈசபேலின் அடிமைபோலக் கிடந்தார். அவளுடைய வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு- அவள் இட்ட கட்டளைகளையே பெரிதாக மதித்தார். ஈசபேல் ஒரு சர்வாதிகாரியாகவே செயற்பட்டாள்.

ஆகாபுவின் அரண்மனைக்கு அருகிலிருந்த ஒரு திராட்சைத் தோட்டத்தைத் தனது உடமையாக்க மன்னர் விரும்பினார். அத்தோட்டத்துக்குச் சொந்தக்காரனான நாபோத்து என்பவன் அதனை ஆகாபுவுக்குக் கொடுக்க விரும்பவில்லை. அரசி ஈசபேல் நாபோத்தை வஞ்சகமாகக் கொன்றாள். இச்செய்கை ஆண்டவருக்கு மிகவும் சினத்தை ஏற்படுத்தியது. இறைவாக்கினரான எலியாவை ஆகாபுவிடமும் ஈசபேலிடமும் அனுப்பிய ஆண்டவர், அவர்கள் செய்த தீச்செயலுக்கான தண்டனை பற்றி எச்சரித்தார். ஆகாபுவின் இரத்தத்தை நாய்கள் நக்கும் என்பதும், ஈசபேலின் உடலை நாய்கள் தின்னும் என்பதும் தான் ஆண்டவரின் சாபம். அதன்படியே ஆகாபுவின் இரத்தத்தை நாய்கள் நக்கின.

ஆகாபுவின் பின் அவர் மகனான அகசியா ஆட்சி பீடமேறினான். எலியா மூலமாக ஆண்டவர் ஆகாபுவுக்கும் அரசி ஈசபேலுக்கும் விதித்த தண்டனை, அவர்களுடைய பரம்பரையினருக்கும் தொடரும் என்று கூறப்பட்டிருந்தது. அதற்கேற்றவாறு ஆகாபுவுக்கும், ஈசபேலுக்கும் பிறந்தவரான அகசியா, மேல் மாடியிலிருந்து இறங்கும் போது விழுந்து காயமடைந்தார். தனது இக்காயங்கள் குணமடையவேண்டும் என்று அகசியா, பாகால் தெய்வத்தை பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார். இஸ்ரயேலின் ஆண்ட வரை அகசியா நாடவில்லை. இதனை அறிந்த எலியா, "அகசியா ஆண்டவருக்கு விரோதமான காரியங்களில் தனது தாய்-தந்தையரைப் பின்பற்றியே நடந்து வருவதால், அதே படுக்கையிலிருந்து எழுந்திருக்க மாட்டார்; அந்நிலையிலேயே அகசியா உயிர் விடுவார்!" என்றும் கூறினார். அவருடைய ஆட்சி ஆக ஈராண்டுகளே நீடித்தது.

அகசியா இறப்பதற்கு முன்னர், மூன்று தடவைகள் எலியாவிடம் தூது அனுப்பினார். அவ்வாறு தூது சென்றவர்களை வானின்று இறங்கி வந்த நெருப்புச் சுட்டெரித்தது. இறுதியாக எலியா அகசியாவிடம் சென்று ஆண்டவரின் ஆணையை அறிவித்தார். இஸ்ரயேல் மக்களுக்குத் தொடர்ந்து பல நன்மைகளைப் புரிந்து வந்த ஆண்டவரின் கருணையை நாடாமல், பிறதெய்வத்தின் துணையை நாடியமையினால் ஆண்டவர் அகசியாவுக்கு எவ்வித மீட்சியும் அளிக்க மாட்டார் என்பதை எலியா தெரிவித்தார். அதன்படி அகசியா மரணமானார். அகசியாவுக்குக் குழந்தைகள் இல்லாமையினால், அவருடைய சகோதரனான யோரம் அரசரானார்.

### எலியாவும் எலிசாவும்

எலியாவுக்கும் வயதாகிவிட்டது. அவருக்கு அடுத்து எலிசாவே இறைவாக்கினராக, இறைவனின் கருத்துப்படி எலியாவால் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். எலியா எங்கு சென்றாலும் எலிசா அவரைப் பின் தொடர்ந்தே சென்றார். கில்காவிலிருந்து பெத்தேலுக்கு இருவரும் சென்றனர். அங்கிருந்து எரிகோ நகருக்கு எலியா புறப்பட்டுச் சென்றார். அங்கும் எலிசா, எலியாவின் பின் சென்றார். யோர்தானுக்குச் சென்றபோதும் எலிசா எலியாவை விட்டு எங்கும் அகலவில்லை.

எலியாவை அவருடைய உடம்புடன் ஆண்டவர் தன்னிடம் அழைத்துக்கொள்ள நாட்டம் கொண்டிருந்தார். ஆனால் எலிசா எலியாவுடன் ஒட்டிக்கொண்டிருந்தமையினால் ஆண்டவருடைய அழைப்பை எலியாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இவர்கள் போகுமிடங்களிலெல்லாமிருந்த இறைவாக்கினர், எலிசாவிடம் எவ்வளவோ எடுத்துக்கூறியும் அவர் எலியாவை விட்டு அகல மறுத்துவிட்டார். இறுதியாக யோர்தான் நதிக்கரையை இருவரும் அடைந்தனர். எலியா தன் போர்வையைச் சுருட்டி நீரை அடித்ததும், நீர் விலகி தரை உயர்ந்தது. இருவரும் அக்கரையை அடைந்தனர். அப்போது நெருப்புத் தேரும், நெருப்புக் குதிரையும் திடீரெனத் தோன்றின. எலியாவுக்கும் எலிசாவுக்குமிடையில் அத்தேரும் குதிரையும் புகுந்து இருவரையும் பிரித்தன. சுழற்காற்று ஒன்று பலமாக வீசியதும் எலியா அக்காற்றுடன் விண்நோக்கிச் சென்று மறைந்தார்.

(தொடர்ந்து வரும்)

## இராஜகுமாரன்

**திருமறை (42) விடை** ரெகபயாம்

**பரிசு பெறுவோர்:**

1. **வே. சிவகுமார்,** குலோடன் தோட்டம், துடுகனை பிரிவு, நேபொட.
2. **செல்வி பர்ஹானா சுபைர்,** இல 62/2, ஹுரீமலுவை, இறம்புக்கனை.
3. **மு.தா.மு. அமீன்,** இல .176 கண்டி வீதி, ஹாலி-எல.
4. **கிறேஷன் குணசீலன்,** 56, தேவிசிறிபுர, தலவாக்கலை.
5. **கணபதிப்பிள்ளை தவக்குமார்,** தில்லையம்பலம் வீதி, கோளாவில்-02, அக்கரைப்பற்று.

**திருமறை 44 வினா:-** ஆகாபுவின் மனைவி பெயரைத் தருக?

ஜன. 23க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 44—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : தேர்தல் |
| தொழில் | : பதவிகளை உருவாக்குவது! |
| உபதொழில் | : விரலில் கரி பூசுவது! |
| பொழுது போக்கு | : முழக்கங்களை ரசிப்பது! வாக்குறுதிகளை கண்டு மலைப்பது! |
| சாதனை | : மாண்டவர்களும் மீண்டு வந்து வாக்களிப்பது! |
| நண்பர்கள் | : வேட்பாளர்கள். |
| எதிரிகள் | : புள்ளடிபோட மறுப்பவர்கள். |
| விரும்பும் ஆயுதம் | : வாக்குச்சீட்டு |
| விரும்பாத ஆயுதம் | : பகிஷ்கரிப்பு |
| எரிச்சல் தருவது | : செல்லாத வாக்குகள் |
| பிரிக்க முடியாதது | : கள்ள வாக்குகளும் நல்ல வாக்குகளும்! |

## கந்தசாமியும் முத்துத்தம்பியும்

க: **என்ன முத்துத்தம்பியர், ஆனந்த சங்கரியரின் பேட்டி பார்த்தீரோ? பிய்த்து உதறியிருக்கிறார்.**

மு: உமக்கு போட்டியாக கதிலை பூ சுற்றியிருக்கிறார். மதிமுகராசாவின் செத்த வீட்டில் புலிகளை கிண்டல் பண்ணுகிறார். பிளேனை சுடுகிறீர்கள். உடல்களை மிதக்கவிடுகிறீர்கள் என்று முழக்கம். மறுநாள் புலிகளிடம் பாதுகாப்பு கேட்டு சுண்டல் கொடுக்கிறார்.


க: **எங்களை மட்டும் காப்பாற்றுங்கோ, ஏனைய இயக்கங்களை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கோ என்ற மாதிரியல்லோ சொல்லிப் போட்டார்.**

மு: தங்களைப் பாதுகாப்பது புலிகளின் தார்மீகக் கடமையாம். அதென்ன தார்மீக கடமை தெரியுமா?

க: **நீங்கள் உருவாக நாங்களும்தானே காரணம். ஆயுதம் ஏந்தவைத்தது நாங்கள்தானே. ஆகவே எங்கள் பிழைகளையும் கண்டுகொள்ளக்கூடாது என்கிறார்.**

மு: நாங்களோ ஆயுதம் ஏந்தச் சொன்னோம்? என்று முந்திக் கேட்டதும் இவைதானே?

க: **அது அப்ப, இது இப்ப!**



மு: சரிவிடும்: புலிகள் தங்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று சங்கரியர் கேட்டிருக்கிறார் என்றால், அவைக்கு ஏனைய தமிழ்க் கட்சிகளிடமும் நம்பிக்கை இல்லை என்றுதானே அர்த்தம்.

க: **அதேதான் அர்த்தம்!**

மு: இன்னொரு விஷயமும் கிடக்கு. தாங்கள் தலைவர்கள். புலிகள் தங்களைக் காக்கும் சேவகர் என்ற மாதிரியும் அர்த்தமாகுதல்லோ. இந்த மனநிலையில்தான் முன்பிருந்தே இயக்கங்களை 'மில்ரன் குரூப்' என்று கூறித்திரிந்தவை.

க: **தாங்கள்தான் அரசியல் தலைமை. தம்பிமார் சண்டை போட மட்டும் தான் என்றுதானே அன்று நினைத்தவை. அது பலிக்காமல் போனதால்தானே நாட்டைவிட்டு பறந்தவை. இவை ஆயுதம் ஏந்தியதை எதிர்க்கவில்லை. தங்களுக்கு எதிராக ஆயுதம் திரும்பியதைத்தான் எதிர்த்தவை. சங்கரியாரை அறியாமலே அது வெளிப் பட்டுப்போச்சு.**

மு: இப்ப மறுபடியும் தங்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கிற காவல் படையாக இருக்குமாறு புலிகளை அழைக்கிறார் சங்கரி.

க: **நாங்கள் அரசியல் பேசுகிறோம். நீங்கள் அருகில் துவக்கை தூக்கிக்கொண்டு நில்லுங்கோ என்று சொல்லாமல் சொல்லிவிட்டார்.**

மு: எங்களை அகிம்சை வழியில் செயற்படும் விடுதலை இயக்கமாக அங்கீகரியுங்கள் என்றுமன்றோ மனுப் போட்டிருக்கிறார்.

க: **அதன் அர்த்தத்தை நீங்களே சொல்லுங்கோ.**

மு: நீங்கள் ஒரு பக்கத்தாலை சண்டை பிடிச்சுக் கொண்டு இருங்கோ, நாங்கள் மறுபக்கத்தாலை தேர்தல்களில் நின்று பதவிகளை பிடிச்சுக்கொண்டு இருப்போம் என்று சொல்லுகிறார்.

க: **அதேபேட்டியில் இன்னொரு இடத்தில், பொதியை அமுல் நடத்துமாறு தாங்கள் அரசை வற்புறுத்துவதாகவும் செப்பியுள்ளார்.**

மு: அப்படிப் போடு அரிவாளை. தேசிய விடுதலை இயக்கமாக இருக்கப் போவதாகவும் கூறுகிறார். பின்னர் தமிழ் தேசியத்தையே மறுக்கும், தாயகத்தை பிரிக்கும் பொதியை அமுல்படுத்துமாறும் கூறுகிறார். மனிதருக்கு நிதானம் தப்பிப் போச்சுதோ?

க: **மொத்தத்தில் முத்தான போட்டியோ? சத்தான போட்டியோ?**

மு: இரண்டுமில்லை. சுத்தான பேட்டி. மக்களுக்கும் பெப்பே. புலிகளுக்கும் பெப்பே. செத்த வீட்டில் முழங்கிய ஏனைய இயக்க 'ஜனநாயக காவலர்களுக்கும்' பெப்பே.

## புதிர் பொன்ராசா



முன்னாள் போராளி இயக்கத்தின் தலைவரான அந்த ஏழு எழுத்து பெயருக்கு சொந்தக் காரர் மனம் கசந்த நிலையில் இருப்பதோடு, வெளிப்படையாகவே தன் உடன்பாடின்மையை காண்பிக்க தொடங்கிவிட்டாராம். அமைதியை போதித்தவரின் பெயர் கொண்டவர். ஆனால் ஆயுதம் ஏந்திய பாதையில் ஒரு காலத்தில் நம்பிக்கை கொண்டவர். யார் அவர்?

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)





அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105. காலி வீதி,வெள்ளவத்தை.கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு. கொழும்பு

436331




பொங்குவோம்—நாம்
பொங்குவோம்!
நீதி நிலைபெற வேண்டும்
என்று பொங்குவோம்!
துயர்கள் தீர வேண்டும்
என்று பொங்குவோம்!
எங்கும் மகிழ்வு
பொங்கட்டும் என்று
நாம் பொங்குவோம்!
இருள் தகர—ஒளி
பொங்கட்டும்!
எங்கும் நம்பிக்கை
பொங்கட்டும்!

## தைத் திருநாள் வாழ்த்துக்கள்




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


## நாணயம்

ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து ஒரே நாணயத்தை உபயோகிப்பதற்கான திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளன.


இத்திட்டத்தின் தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது. இருப்பினும் 'இயூரோ' என்ற இந்த நாணயத்தின் பூரணமான புழக்கம் 2002ம் ஆண்டில்தான் முழுமை பெறும்.



இங்கிலாந்து இந்த இயூரோ நாணய இணைப்பில் இன்னும் சேரவில்லை. வேறு சில நாடுகளும் இணையவில்லை. இருப்பினும் இன்னும் 3 வருடங்களில் அனைத்து ஐரோப்பிய நாடுகளும் தத்தமது சொந்த நாணயங்களை ஒதுக்கிவிட்டு, புதிய 'இயூரோ' நாணயப் புழக்கத்தைக் கைக்கொண்டு விடப்போகின்றன என்றே கூறப்படுகிறது.

ஜேர்மன் நாட்டு நிதி அமைச்சர் தியோ வைகல் 'இயூரோ' நாணயத்தின் மாதிரிகளை விளக்குவதைப் படத்தில் காணலாம்.

## தருவது வியோடெ



## தொங்குமான்

'கானக மனிதன்' என்றொரு காரணப்பெயரால் அழைக்கப்படும் பிராணிதான் ஒரங்குட்டான். இது வாலில்லாத குரங்கு வகையைச் சார்ந்தது. ஒரங்குட்டான் என்ற மலாய் மொழிச் சொல்லால்தான் (கானக மனிதன்) என்று அழைக்கப்படுகிறது.

போர்ணியோ நாட்டிலும் இந்தோனேஷியாவைச் சேர்ந்த சுமத்ரா காடுகளிலும் இவை பெரும்பாலும் காணப்படுகின்றன.

மனிதர்களுக்குத் தீங்கு நினைக்காத இவ்வப்பாவிகளை ஏனோ மனிதன் வேட்டையாடி அழித்துவருகிறான். இதன் இறைச்சியை எவரும் உண்பதில்லை. தோலை உரித்தெடுத்து, பதப்படுத்தி அதன் தலையுடன் உயிரோட்டமுள்ள பொம்மை மாதிரி இவற்றை வீடுகளில் அலங்காரப் பொருளாகவைத்து மகிழ்கின்றனர்.

ஒரங்குட்டான் எழுந்து நின்றால் 90 முதல் 150 சென்டிமீட்டர் உயரம் வரை இருக்கும். ஆண்கள் 70 முதல் 90 கிலோ கிராம் வரை எடை கொண்டவையாக இருக்கும்.

பெண் ஒரங்குட்டான்கள் ஆண்களைவிட எடையிலும் உயரத்திலும் பாதி அளவினதாகவே இருக்கும்.

ஒரங்குட்டான்களின் கைகள் மிக நீளமானவை. இவை எழுந்து நிற்கும்போது இவற்றின் கைகள் நிலத்தைத் தொட்டு நிற்கும்.

ஒரு மரத்திலிருந்து மற்றோர் மரத்துக்கு தனது கைகளைக் கொண்டேதாவும். கால்களும் கைகளைப் போன்று உறுதியுடையவையே.

உயர்ந்த மரங்களில் கூடு கட்டியே இவை தனித்து வாழ்கின்றன. குட்டிகள் எப்போதும் தாயுடன் ஒட்டிக் கொண்டிருக்கும். பகலில் கூடுகளில் பதுங்கியிருக்கும் இக்குரங்குகள் இருளானதும் வெளியே வந்து பாய்ந்து திரியும்.

இதன் உணவு பெரும்பாலும் பழங்கள் தான். பழங்கள் கிடைக்கவில்லையானால் தளிர்களையும் சிறு பூச்சிகளையும் உண்ணும்.

மேலதிகத் தகவல் ஒன்று: குரங்கு இறைச்சி சாப்பிட்டால் ஆஸ்துமா போன்ற வியாதிகள் தீரும் என்று கூறப்படுகிறது. அவ்வாறு இறைச்சி சாப்பிடுகிறவர்கள், குரங்கு இறைச்சி என்று கூறமாட்டார்கள். குரங்குக்கு அவர்கள் வைத்துள்ள சங்கேதப் பெயர்: தொங்குமான். உங்களில் யாராவது தொங்குமான் இறைச்சி சாப்பிட்டிருக்கிறீர்களா?!

## சிக்கனம்

எரிபொருளுக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட விலை ஏற்றம் காரணமாக உலக நாடுகளில் பலத்த பொருளாதாரத் தட்டுப்பாடு ஏற்பட்டது. விலை வாசிகளெல்லாம் கிடுகிடென்று உயர்ந்தன.

இத்தகைய பாதிப்புகளினால், பெட்ரோல் மற்றும் டீசல் இல்லாமலே வாகனங்களை ஓட்ட முடியுமா என்பதற்கான பலதரப்பட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டன. மின் சக்தி மற்றும் சூரிய சக்தி ஆகியவற்றைப் பயன்படுத்தி வாகனங்களை ஓட்ட முடியுமா என்று கண்டறிய பல பரிட்சார்த்த




முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இவற்றால் போதுமான பலன் கிட்டியதாகத் தெரியவில்லை.

படத்தில் காணப்படும் மோட்டார்காரும் இத்தகைய பரிட்சார்த்த நடவடிக்கைகளின் பயனாக உற்பத்தி செய்யப்பட்ட ஒன்றுதான். ஆனால் வெற்றிகரமான உற்பத்தி. இதற்கு டீசல் எண்ணை தேவை. ஆனால் மிக மிக்க் குறைவான அளவே தேவைப்படும். ஒரு லிட்டர் டீசலில் இந்த வண்டி 201.1 கிலோ மீட்டர் ஓடியுள்ளது.

1996ம் ஆண்டில் இங்கிலாந்தில் நோர்தாண்ட்சிலுள்ள சில்வாஸ்டோன் ஒட்டப்பந்தய மைதானத்தில் நடைபெற்ற 'ஷெல் மைலேஜ் மரதன்' ஓட்டத்தில் இச் சாதனையை இச் சிறு வண்டி நிலைநாட்டியுள்ளது. மிகக் குறைந்தளவு டீசலில் அதிக தூரம் செல்லக்கூடிய கார் என்று உலக சாதனையும் படைத்துள்ளது. கெட்டிக்கார குட்டிக் கார்.

## 3 வது பிறந்தநாள் வாழ்த்து

25.10.1998



### சாரங்கா செல்வநாயகம்

சங்கானை கிழக்கு பிரான்பற்றைச் சேர்ந்த செல்வநாயகம்-தவமலர் தம்பதியினரின் செல்வப் புதல்வி சாரங்கா தனத 3வது பிறந்த நாளை 25.10.1998 அன்று இத்தாலியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, இலங்கையில் உள்ள பூட்டி, பேரன், பேத்தி, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தை, மாமா, சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சான், மருமக்கள், ஜேர்மன் பெரியப்பா, பெரியம்மா, தம்பிமார், இத்தாலிச் சித்தப்பா, சித்தி, சுவிஸ் மச்சான், மச்சாள், மருமகள், கனடாச் சித்தப்பா, சித்தி மற்றும் உற்றார் உறவினர் இத்தாலி வாழ் நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பெரு வாழ்வு வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: த. பவளராஜா (சித்தப்பா)

## வலம்

ஃபிரான்ஸ் நாட்டிலுள்ள கலாயிஸ் என்ற இடத்திலிருந்து 1997 ஏப்ரல் 18ம் திகதி தனது மோட்டார் சைக்கிளில் நிக்சண்டேர்ஸ் என்ற பிரிட்டிஷ்காரர் புறப்பட்டார்.

ஐரோப்பாவிலுள்ள பல நாடு நகரங்களை ஊடறுத்து இந்தியா, தென்கிழக்கு ஆசிய நாடுகள், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் வட அமெரிக்கா போன்ற இடங்களுக்கெல்லாம் சென்றார்.

அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் வட அமெரிக்கா போன்ற இடங்களுக்குச் செல்லும்போது தவிர்க்க முடியாத நிலையில் கப்பல்களில்தான் செல்ல வேண்டியதாயிற்று.

நிக் சண்டேர்ஸ் மொத்தம் 32 ஆயிரத்தி 74 கிலோ மீட்டர் (19 ஆயிரத்தி 930 மைல்) தூரத்தை 31 நாட்களும் 20 மணித்தியாலங்களிலும் கடந்து முடித்தார்.

தனது பயணத்தைத் தொடக்கிய அதே கலாயிஸ் என்ற இடத்தை வந்தடைந்தபோது அவருடைய காதலி அவரை வந்து கட்டித் தழுவிக்கொண்டார். உலக வலம் நடத்திய அலுப்பு ஒரு நொடியில் ஓடிப்போனதாம் காதலியின் அன்புத் தழுவலில்.




மேலதிக தகவல் ஒன்று: மோட்டார் சைக்கிளில் குறுகிய காலத்தில் அதிக தூரம் பயணம் செய்தவர் என்ற உலக சாதனையாளரும் இவர்தான். மோட்டார் சைக்கிளில் மொத்தம் 7 இலட்சத்து 35 ஆயிரம் கிலோ மீட்டர் (4 இலட்சத்து 57 ஆயிரம் மைல்) தூரத்தை 10 வருடங்களில் கடந்து முடித்தவர் ஆர்ஜன்டீனாவைச் சேர்ந்த எமிலியோ ஸ்கொட்டோ என்பவராவார். 1985 முதல் 1995 வரை இவர் 214 நாடுகளுக்கூடாகத் தனது சவாரியை மேற்கொண்டு சாதனை புரிந்துள்ளார்.